# பெரியார் மன்றோ

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்
தமிழ் விரிவுரையாளர்

சிதம்பரநாதச் செட்டியார், எம். ஏ.

எழுதியது

இரண்டாம் பதிப்பு

[விலை ரூபா 1-6-0.

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | இளமை | ... | 1 |
| 2. | கீழ்த்தரப் படைத்தலைவன் | ... | 6 |
| 3. | சேலம் ஜில்லா கலெக்டர் | ... | 13 |
| 4. | கன்னட ஜில்லா கலெக்டர் | ... | 24 |
| 5. | ஒப்புவிக்கப்பட்ட ஜில்லாக்களின் கலெக்டர் | ... | 44 |
| 6. | ஐரோப்பாவில் மன்ரோ | ... | 52 |
| 7. | நியாய இலாகா விசாரணை சபைத் தலைவர் | ... | 58 |
| 8. | மராத்தியச் சண்டையில் மன்ரோ | ... | 68 |
| 9. | மீண்டும் ஊருக்கு | ... | 70 |
| 10. | சென்னைக் கவர்னர் | ... | 74 |
| 11. | மன்ரோவும் இந்திய மக்களும் | ... | 89 |
| 12. | மன்ரோவின் கருத்துக்கள் | ... | 104 |
| 13. | மன்ரோவின் கடிதங்கள் | ... | 114 |
| 14. | மன்ரோ உற்ற துயர்கள் | ... | 124 |
| 15. | மன்ரோவின் மாண்பு | ... | 130 |

# PREFACE

When I was engaged last year in writing a small book, in Tamil, of Stories from Indian History for the use of pupils in Elementary Schools, I came across, quite fortunately, some interesting books on Sir Thomas Munro. A careful study of these books led me to the conclusion that his life could still inspire us with enthusiasm and zeal in our respective duties and serve us as an ideal in many walks of life. So I thought that a mere chapter in my earlier book would not do and that his Life deserved special treatment in a separate book for itself.

It is superfluous for me to enumerate here the traits of mind and character of this Great and Good Man, for I believe I have done justice to them, as best as I could, in the last Chapter of this book. But the very fact that he is remembered aven to this day in several parts of this Presidency es "the Father of the people", in several other parts as "the Ryots' Friend", and in Gooty as "the sage Munro (*Munrovarishi*)" is enough to convince anybody of the Great Good he has done for this country.

In bringing out this book in its present form several persons have helped me and to them all I owe a deep debt of gratitude. I shall be failing in my duty if I did not mention here their names and the way in which they have helped me. To A. H. A. Todd Esquire. M. A., I. C S., Collector of Salem, who was kind enough to circularise to the Tahsildars of his District my request for information with regard to certain local details and to furnish me with what was forthcoming and to Dewan-Bahadur P. Kesava Pillai Avl., B. A., B. L., C. I. E., who also furnished me with certain other details, I take this opportunity of conveying my thanks. A. R. MacEwen, Esq., I. C. S., Secretary to the Board of Revenue, took a very great personal interest in the matter and I thank him very sincerely for the encouragement he has given me.

I am deeply obliged to my Colleagues Messrs. Md. Ishaq Hashimi. B. A., Hons, (London) and K. Kanakasabhapathy Pillai. M. A., L. T., and also to my old lecturers Messrs. P. R. Krishnaswami, M. A., L. T., and R. Ramaiyar M. A., L. T., who in one way or another have helped me while this book was in preparation.

Government
Muhammadan College,
Madras,
28—1—1933.

**A. C. Chettiar.**

# முன்னுரை

"இந்திய சரித்திரமாலை" என்னும் ஒரு சிறு புத்தகத்தை எழுதும் நோக்கத்துடன் சிற்சில சரித்திர நூல்களை நான் படித்துவருங்கால், பெரியார் பலருடைய சரிதங்களுள் மன்றோவது என்னுள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அதன்மேல், அவரைக்குறித்து எழுதப்பெற்றுள்ள ஆங்கில நூல்களை எல்லாம் படிக்கத் தொடங்கிப் படித்து வருங்கால், அவரது சரிதத்தின் பகுதிகள் நம் நாட்டாரால் அறிந்து கொள்ளற் பாலனவாய் உள்ளவற்றை யெல்லாஞ் சேர்த்துத் தமிழில் ஒரு புத்தகமாக வெளியிடலாம் என்னும் எண்ணம் உதித்தது. இதுவே இப்புத்தகத்தின் தோற்றுவாய்.

"அன்பில் தாயை ஒத்தவர்" என்றும், "குடிகளின் நண்பர்" என்றும் மன்றோ மக்களால் இங்குப் போற்றப்பட்டு வருவதொன்றே அவர் இந்தியரிடத்து அன்புபூண்டு, இந்தியரது முன்னேற்றத்திற் கண்ணுங் கருத்துமாய் இருந்த பெரியார் என்பதை உணர்த்தப் போதுமானது. பிறப்பால் அவர் ஆங்கிலேயரே ஒழிய உணர்ச்சிகளாலும் கொள்கைகளாலும் அவர் சிறந்த இந்தியரே என்பது அவரது சரிதத்திலிருந்து அறியப்படும். அப்பெரியார்க்குச் செய்யலாகும் நன்றிகளுள் ஒன்று அவர் எங்ஙனம் நமக்காகப் பாடுபட்டார் என்பதை அறிந்து கோடலாகும். அவர்தம் அருமைக் குணங்களை "மன்றோவின்

மாண்பு" என்ற அத்தியாயத்தில் வைத்துக் கூறியுள்ளேன்; ஆண்டுக் கண்டுகொள்க. அஞ்சாமை, அறிவு, ஊக்கம் இம்மூன்றையும் அவர் எஞ்சாது பெற்றிருந்தார் என்றும், தூங்காமை கல்வி துணிவுடைமை இம் மூன்றும் அவரை நீங்காதிருந்தன என்றும், காட்சிக் கெளியராகவும் கடுஞ்சொல்லரல்லராகவும் அவர் திகழ்ந்தவர் என்றும் அறியப்படுவதால், அவர் மன்னனது மாட்சிமைபெற்றிருந்தவர் என்பது பெறப்படும். கருவி, காலம், செய்யும் அருவினை இவற்றை அறியவாகுந் திறத்தையும், குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையுடைமை என்றிவற்றையும் அவர் பெற்றிருந்தார் ஆதலான் அவர் ஒரு சிறந்த அமைச்சனின் அருங்குணங்களும் பெற்றிருந்தவர் என்பது புலனும். அவர் வாழ்க்கையிற் புகுந்கால், எவ்வளவு எளியராக இருந்து, எத்துணை யிடுக்கண்கள் வாய்ப்பட்டு, தமது உழைப்பொன்றால் எவ்வளவு மேன்மையான பதவிகளை இறுதியிற் பெற்றார் என்பதும், தளகர்த்தர் என்ற முறையில் அவர் எங்ஙனம் நடந்துகொண்டார் என்பதும், அதிகாரி என்றமுறையிற் குடிகளுக்கு எங்ஙனம் நன்மை புரிந்தார் என்பதும், புதல்வன் என்ற முறையில் தாய் தந்தையரை எங்ஙனம் பேணினர் என்பதும், கணவன் என்ற முறையில் மனைவியொடு எங்ஙனம் பழகினர் என்பதும், தந்தை என்ற முறையில் தமது குழந்தைபால் எங்ஙனம் அன்பு காட்டினர் என்பதும் இப்புத்தகத்தின் கண்ணே காட்டப்பட்டுள்ளன.

மன்றோவது வாழ்க்கை வரலாற்றை எழுதப்புகும் எவரும் அவருடைய அருமையான கடிதங்களைப் புறக்கணித்தல் என்பது இயலாது ஆதலால், யானும் வேண்டிய இடங்களிற் சிற்சில கடிதங்களை மொழிபெயர்த்துத் தந்துள்ளேன்.

கடிதங்களின் போக்கும் சொல்லழகும் இனிமை பயப்பன வாக இருக்கின்றன ஆதலின், ஆங்கிலந் தெரிந்தோர் வேண்டு மானால் அக்கடிதங்களை மூலத்திலுங்கண்டு படித்து மகிழ் வுறலாம்.

இப் புத்தகத்தை நான் எழுதி வருங்கால், எனது வேண்டுகோட் கிணங்கி, சிற்சில செய்திகளைத் தெரிவித்த சேலம் ஜில்லா கலெக்டர் ஏ. ஹச். ஏ. டாட் (எம். ஏ; ஐ. சி. எஸ.) அவர்கட்கும், குத்தி திவான்பகதூர், பி. கேசவப் பிள்ளை (பி. ஏ. பி. எல்; சி. ஐ. இ) அவர்கட்கும் எனது நன்றியைச் செலுத்தக் கடமைப் பட்டுள்ளேன்.

| | |
|---|---|
| அரசாங்க முகம்மதியர் காலேஜ், சென்னை. | அ. சிதம்பரநாதன், 28—1—33. |

# பெரியார் மன்ரோ

## முதல் அத்தியாயம்

### இளமை

ஐரோப்பா கண்டத்தில் சகாத்லாந்து தேசத்திலுள்ள கிளாஸ்கோ என்னும் பட்டணத்தில் 1761-ஆம் ஆண்டு மே மாதம் 27-ஆந் தேதியன்று அலக்சாந்தர் மன்ரோ என்ற வணிகர்க்கும் மார்கரேட் சடார்க் என்ற பெண்மணிக்குமாக ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக் குழந்தைக்குத் தாமஸ் மன்ரோ என்ற பெயர் இடப்பட்டது. தாமஸ் மன்ரோ தமது தாய் தந்தையருக்கு இரண்டாவது குழந்தை. தாமஸ் மன்ரோவுடன் பிறந்த ஆடவர் நால்வர்; பெண்டிர் இருவர். இவருக்கு இளமையில் சின்னம்மை வார்த்ததன் காரணமாக ஒரு காது சிறிது செவிடாயிற்று. அவர் முதலில் கிளாஸ்கோ இலக்கணப் பள்ளியில் சில காலம் பயின்ற பிறகு, கிளாஸ்கோ சர்வகலாசாலையில் 13 வயதிற் சேர்ந்து அங்கு மூன்றாண்டு படித்து வந்தார். கல்லூரியிற் பயின்ற காலையில், இராணுவ சரித்திரத்திலும் கணக்கிலும் இரசாயனக் கலையிலும் அவர் தேர்ந்து விளங்கினர். அவரது

கல்வி கலாசாலை யோடு முடிந்துதன்று; கல்லூரியைக் கடந்த பிறகும் மன்றோ இலக்கியங்களையுஞ் சரித்திரங்களையும் நிரம்பப் படித்து வந்தார். சரித்திரங்களைப் படித்த காலையில் போர்களைப்பற்றிய குறிப்புகள் அவர்க்கு மகிழ்ச்சி யளித்து வந்தன. அறிவு வேட்கையும் புத்தகம் போற்றுந் தன்மையும் அவரிடம் காணக்கிடந்தன. ஆங்கிலத்திற் கற்பவை கற்றதோடமையாது பிற மொழிகளி லுள்ள சிறந்த நூல்களையுங் கற்க வேண்டு மென்னும் அவா தூரக்க, அவர் பேனிய மொழியைக் கற்கத் தொடங்கினர்.

"டான் கிவிக்சாட்" என்னுஞ் சிறந்த பேனிய நூலை மொழிபெயர்ப்பி லன்றி அம் மொழியிலேயே படித்தறிய வேண்டுமென்னும் விருப்புடன், பக்கத்தே ஓரகராதியும் ஓரிலக்கணமும் வைத்துக்கொண்டு பிறருதவியின்றி அம் மொழியைப் பதினாறு வயதளவில் அவர் நன்றாகக் கற்றுக் கொண்டார். அம் மொழியில் எழுதப்பட்டிருந்த சில குறிப்புக்கள் ஒரு பேனிய கப்பலில் அகப்பட்டன. அக் குறிப்புக்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தந்தமைக்காக, கூட்டுக் கடைக்காரர்கள் சிலர் தந்த வெகுமதியாகிய முதல் வருமானத்தை மன்றோ தமது அருமைத் தாயாருக்குக் கொடுத்தார்.

மன்றோ கல்வித் துறையில் ஆர்வத்துடன் விளங்கியவாறே தேகப்பயிற்சித் துறையிலுந் துலங்கினர். பல பந்தய விளையாட்டுகளில் அவர் வெற்றியுற்றார். குத்துச் சண்டையிலும் அவர் வல்லவர். அவர் உடலூர முடையவர்; நல்ல வுயரமும் அதற்கேற்ற பருமனும் வாய்ந்தவர்; ஆயினும், அதிக அழகு வாய்ந்தவரென்று சொல்வதற்கில்லை;

தம்மைத் துணிமணிகளால் அழகுபடுத்திக் கொள்ளவேண்டுமென்று அவர் நினைத்தவரு மல்லர். திறந்த வெளிகளிலே விளையாடும் விளையாட்டுகளில் அவருக்கு விருப்பம் இருந்தாலும் மீன்பிடிப்பதிலும் நீந்துவதிலும் அவர்க்கு ஆர்வம் சிறப்பாகவுண்டு. ஆண்மை, இடுக்கணழியாமை, பொறுமை, நன்னொழுக்கம் ஆகிய இக்குணங்கள் அவரிடத் திளமையிலேயே காணப்பட்டன.

மன்றோவுக்கு வயது பதினைந்து ஆனதும், அவர் தந்தையார் அவருக்கு "சாமர்வில் கார்டன்" என்ற வர்த்தகசாலையாரிடம் கணக்கர் வேலை வாங்கித் தந்தார். இவ் வேலையில் மன்றோ இரண்டு ஆண்டுகள் இருந்துவந்தாரெனினும் இது அவருக்குப் பிடிக்கவில்லை; படைவீரனாக வேண்டுமென்ற எண்ணத்துடனே அவர் இருந்து வந்தார். இவ்வெண்ணம் நிறைவெய்துப்போல் ஒருகாற் றோன்றிற்று. நீதி விசாரணைத் துரைமார் சிலர் எழுப்ப நினைத்த ஒரு படைக்கு மன்றோவைத் துணைத்தலைவராக (Lieutenant) நியமிப்பதாகச் சொல்லி அவருடைய இசைவு கேட்கப்பட்டது. அப்பொழுது, அவ்வேலையை ஒப்புக்கொள்ள மன்றோவுக்கு மனமிருந்தும், தம் தகப்பனாரது விருப்பத்திற்கு மாறாகச் செல்லக் கூடாதென்ற எண்ணத்தால் அவர் அவ்வேலையை வேண்டா வெறுப்பாக ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார்.

ஆனால், அறிவினால் விலக்கப்பட்டதொன்று ஆபத்தினாற் கொள்ள வேண்டியதாக ஏற்பட்டது. அதாவது, 1778-ஆம் ஆண்டில் அலக்சாண்டர் மன்றோவின் கூட்டுக்கடை முறிந்ததால், குடும்பம் வறுமை நிலையடையவே, அலக்சாண்டர் தமது புதல்வனுக்குக் கப்பலில் இளமை

யாளன் (Midshipman) வேலை யொன்று வாங்கிக் கொடுத்தார். மன்ரோவுக்குக் கடலோடும் வாழ்க்கையில் விருப்பமில்லை யானாலும் சோம்பேறி வாழ்க்கை நடத்த அவருக்கு மனமில்லை. அன்றியும், தகப்பனுக்குச் சுமையாக ஒரு நாள் கூட இருக்கக் கூடாதென்பது அவர தெண்ணம். எனவே கப்பல் இளமையாளனாகப்புறப்பட்ட அவர் லண்டன்மாநகரை விட்டுப் புறப்படுமுன் தந்தை யுதவியாற் படையிளைஞனாக (Cadet) நியமிக்கப்பட்டார். எனினும், கப்பற் கூலி கொடுக்கப் போதிய பண மில்லாமையால், மன்ரோ கப்பலிலேயே வேலை செய்து அவ்வேலையின் கூலிக்குப் பதிலாகத் தம்மை இந்தியாவிற் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டுமென்று ஏற்பாடு செய்துகொண்டார். தமது பிற்காலத்தில் கவர்னரான இவர் வாழ்க்கையிற் புகுந்த காலத்தில் கையிற் காசின்றி வறுமை வாய்ப்பட்டுக் கப்பற்கூலி கொடுக்க முடியாது அதற்காக ஏவல் புரிந்தாரென்பது உலக வியல்பை ஒருவாறு உணர்த்தும் அன்றோ?

1780-ஆம் ஆண்டு சனவரி மாதம் 15-ஆந் தேதியில் மன்ரோ சென்னை வந்து சேர்ந்தார். மன்ரோ கொண்டு வந்த ஆடைகளுள் நான்கு நீங்கலாகப் பிறவெல்லாம் கம்பளியுடைகள். அவை இந்தியாவின் வெப்பநிலைக்கு ஏற்றவையல்ல வென்பதை அவர் இங்கு வந்த பின்னரே அறிந்து கொண்டார். உடனே வேறு உடைகள் தைத்துக் கொள்வதற்கோ அவரிடம் பணமில்லை. அவரிடம் வேலைக் கமர்வதாக வாக்களித்து நல்லவன்போற் பாவனை செய்த ஒருவன் ஒரு மேசையும் சில நாற்காலிகளுந் துணியும் வாங்கி வருவதாகச் சொல்லிப் பணத்தை வாங்கிச் சென்றவன் திரும்பி வரவேயில்லை. சென்னையிலிருந்தபோது மன்ரோவுக்குச்

சம்பளம் ஏறக்குறைய நாற்பத்தைந்து ரூபாய். இச்சம்பளத்தில் எட்டில் இரண்டு பங்கு இருமொழி பேசுபவனுக்கும், ஒரு பங்கு சமையற்காரனுக்கும், மற்றொரு பங்கு வண்ணானுக்கும் அவர் மாதா மாதம் கொடுக்க வேண்டியிருந்தது. எஞ்சிய இருபத்திரண்டரை ரூபாய்தான் அவருடைய மற்றச் செலவுகளுக் கானவை. ஆதலால், மிக்க செட்டாயிருந்துங்கூட ஆறு மாதமான பின்னரே சில சட்டைகள் தைத்துக் கொள்வதற்காகும் பணத்தை அவரால் சேர்க்கவியன்றது. ஆறு மாதம் வரை மன்ரோ சென்னை நகரிலேயே இருந்து யுத்தாப்பியாசம் செய்துகொண்டும் தேசிய மொழிகளைக் கற்றுக்கொண்டும் வந்தார்.

# இரண்டாம் அத்தியாயம்

## கீழ்த்தரப் படைத்தலைவன்

அக்காலத்தில் மைசூரை யாண்டுவந்த ஹைதர் ஆலியும், தெக்கணத்து நைசாமும் ஒன்று சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிராக எழுந்தனர். அதனால், 1780-ஆம் ௵ முதல் 1782-ஆம் ௵ வரையில் ஹைதர் ஆலியோடும், பின்னிரண்டு ஆண்டுகள் ஹைதரின் புதல்வனான திப்புசுல்தானோடும் கீழ் இந்தியக் கும்பெனியார் செய்த சண்டைகளில் மன்றோவுக்குப் பங்குண்டு. 1780-ஆம் ௵ ல் காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்குக் கும்பெனியார் புறங்காட்டியோடிய காலத்தில் மன்றோவுங் கூடவிருந்தார். 1781-ஆம் ௵ ல் வந்தவாசியைக் கும்பெனியார் மீட்ட காலத்தில் மன்றோ உதவி புரிந்தார். அவ் யாண்டில் புதுச்சேரியிலிருந்து கூடலூருக்குப் பீரங்கிச் சண்டையினிடையே படை சென்ற காலத்தில் உடனிருந்து மன்றோ இடருற்றார். அடுத்த இரண்டு ஆண்டுகளிலும் சித்தூரைக் கும்பெனியின் படை கைப்பற்றிய காலத்திலும், கூடலூரரணை முற்றுகையிட்ட காலத்திலும் மன்றோ உதவி புரிந்தார். எனவே கும்பெனியின் படை போர்மேல் சென்ற இடமெல்லாம் மன்றோவுஞ் சென்றார் ஆகலின், மன்றோவின் மனத்தில் போர்ச் செய்திகள் அழுத்தமான உறுதிப்பாட்டை விளைத்தமை வியப்பன்றோ.

# கீழ்த்தரப் படைத்தலைவன்

பின்னர், மதுரை, தஞ்சை, சென்னை, காசிங்கோட்டை, வேலூர் முதலிய இடங்களில் இராணுவம் நிறுத்தப்பட்டிருந்த காலங்களில் அங்கங்குத் தங்கி யிருந்தார் மன்றோ. இவ்வேலையில் அவர் ஹிந்துஸ்தானி, பெர்சியன் மொழிகளைக் கற்றுக்கொண்டு இலக்கியங்களையும் ஆராயத் தொடங்கினார். அவருக்குத் தெலுங்கு கன்னடம் ஆகிய மொழிகளிலும் பயிற்சி யுண்டென்றுங் கூறுவர்.

இவ்வண்ணம் சில்லாண்டு சென்ற பின்னர், செய்தி இலாகா உத்தியோகஸ்தர்களுள் காப்டன் இரீட் என்பவரின் கீழே ஒருவராக நியமிக்கப்பட்டு, கிருஷ்ணை, கோதாவரி, விசாகப்பட்டணம், கஞ்சம் என்ற ஜில்லாக்கள் சேர்ந்த வடமாகாணத்தைப் பிரிட்டிஷ் பேரரசோடு சேர்க்கும் பணியுடன் சென்ற படையில் ஒருவராக மன்றோ அனுப்பப்பட்டார். மேல், திப்புசுல்தானை யெதிர்த்து நிகழ்த்திய பூசல்களில், பங்களூர்க் கோட்டையைப் பிடித்த காலத்திலும், கரிகலம் சண்டை நடந்த காலத்திலும், சீரங்கப்பட்டணம் முற்றுகை செய்யப்பட்ட காலத்திலும் மன்றோ கும்பெனியது படையுடனிருந்தார். 1792-ஆம் ஆண்டில் பிணையாளிகளாகத் தரப்பட்ட திப்புவின் திருக்குமாரர் இருவரைக் காவலோடு சென்னை கொண்டுபோய்ச் சேர்த்தவரும் மன்றோவே.

கீழ்த்தரப் படைத் தலைவனாக இக் காலத்தே யிருந்து வந்த மன்றோவின் தினசரி வாழ்க்கைக்கிடையே எவ்வளவு இன்னல்களும் இடுக்கண்களு மிருந்தன வென்பது கீழ்க் காணும் அவரது கடித மொன்றால் செவ்வனே புலனாம். அக் கடிதம் அவர்தம் அருமைச் சகோதரிக் கெழுதப்பட்டதாகும்.

அதுவருமாறு:— "கீழ் நாட்டுப் பெருவாழ்வைப்பற்றி மேனாட்டிக்கருத்தைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் பொருட்டும், வயதான இந்திய பிரமசரிய உத்தியோகஸ்தர்களுடைய ஆதரவற்ற நிலைமையைக் காணும் பொருட்டும், நீ ஒரு சில மணி நேரமேனும் என்னறையில் வந்திருக்கக் கூடாதா எனப் பன்முறை நான் எண்ணியதுண்டு. அவர்கள் நீ நாடகங்களில் வாசிக்கும் தேசாதிபதிகள்போலச் சிறந்தோங்கி யிருப்பார்களென நினைக்கக்கூடும். அடிமைக் கூட்டமொன்றாற் சூழப்பட்டு, பட்டாடை யுடுத்திக்கொண்டு, மலை மிசைத்தோன்றும் மதியம்போல் யானைத்தலைமிசையே நான் வெளியே போவேன் என்றும்; பலர் சாமர மிரட்ட நான் பஞ்சணையிற் சாய்ந்துகொண்டு பல்வியசாலத்தால் மகிழ்வதிலேயே என் காலத்தைப் பெரும்பாலுங் கழிப்பேன் என்றும் நீ நினைக்கக் கூடும்.

ஆனால், நீ என்னைப்பற்றி நினைத்து அகமகிழுங்கால், நான் இங்கே பஞ்சணை யொன்றுமின்றிப் பாயல் மீது படுத்துக் கிடப்பேன். பட்டாடை யுடுத்தி யானை மீதிருந்து கீழ் நோக்காது, கிழிந்த பழைய சட்டைகளைப் போட்டுக் கொண்டு கடும் வெயிலில் நடந்துகொண்டு இருப்பேன். நான் இந்தியா வந்து சேரும் வரையில், பசி, தாகம், களைப்பு, வறுமை ஆகிய இவற்றுள் ஒன்றினாலும் வருந்தினேனல்லேன். ஆனால், இவ்விடம் வந்து சேர்ந்த பின்னரோ, முன்னவை மூன்றினால் அடிக்கடியும், பின்ன தொன்றால் எப்பொழுதும் வருந்துகின்றேன் என்றால் நீ நம்ப மாட்டாய். உண்மையே நான் கூறுவது. புத்தகமாதல் தோட்டாவின்பை ஆதல் தலையணையாகக் கொண்டு நான் இங்கு முதல் மூன்று ஆண்டுகள் கழித்தேன். நான் அவ்விடமிருந்து கொண்டு

வந்த நீண்டசட்டையே எனக்குப் போர்வையாக உதவிற்று. அச்சட்டையின் கைகளை என் கால்களுக்குள் விட்டு, ஓரத்தை யிழுத்துத் தலை வரையில் போர்த்திக்கொண்டிருந்தேன். என் அடி தவிர மற்ற விடங்கள் போர்க்கப்பட்டே யிருந்தன. சட்டை தைத்தவன் அது இத்தகைய செயலுக்குப் பயன் படுத்தப் படுமென்று கண்டானோ? காற்பக்கம் மூடினால் தலைப் பக்கம் திறந்துகொள்ளும்; தலையை மூடினால் கால் திறக்கும். அண்ணன் அலக்சாந்தர் வங்காளம் வந்தபோது ஒரு நல்ல படுக்கையை எனக்களித்தார். அந்தப் பெருநாளில் நான் ஒரு தலையணையும் சமுக்காளமும் வாங்கிக் கொண்டேன். எனது மூடுதிரைகள் தலையணை உறைகளாகவும் துண்டு களாகவுங் கிழித்துத் தைக்கப்பட்டன. இப்பொழுதுதான், இந்தியாவில் முதன்முதலாக என் தலையைத் தலையணைமீது வைத்துப் படுத்தேன்!

இவ்வளவில் விட்டேனா! இதிலிருந்து கொஞ்சம் அகம்பாவம் பிடித்தவனாகி, ஆகுல மேற்கொண்டு, நான்கு கரண்டிகளும், ஒரு மேசையும், மேசை விரி யிரண்டும், இன்னொரு நாற்காலியும் வாங்கினேன். ஆனால், மூன்று மாதத்திற்குள் மூன்று கரண்டிகள் காணாமற் போய்விட்ட படியாலும், நாற்காலி யொன்றுடைந்து விட்டபடியாலும் பழைய ஆண்டியாகி இன்னும் ஆண்டிப் பட்டத்தைப் போக்க முடியாதவனாகவே யிருந்து வருகிறேன்.

வீட்டுச் சாமான்களைவிடச் சிறந்த வகையில் என்னுடைகள் இருப்பதாக நினைக்க வேண்டா. உட்சட்டை நல்லதாக இருந்தால் மேற்சட்டை நல்லதாக இருப்பதில்லை

புது உட்சட்டை யொன்றைப் போட்டுக்கொண்டு பார்த்தால் மேற் சட்டையின் கை விட்டுவிடும்போ லிருக்கிறது.

என் பிரயாணங்களைப் பற்றியோ கேட்க வேண்டிய தில்லை. எனக்குள்ள ஊர்தி கிழக் குதிரை யொன்றேதான். அதுவும் வலிவற்றதாயிருப்பதால் என்னுடைய பிரயாண வேளைகளிற் பெரும்பாலும் நான் நடந்தே போகவேண்டி யிருக்கிறது. நான் இங்கு வரும்வரையில் நடப்ப தென்பது எத்தகைத் தென்று எனக்குத் தெரியாது. இப்பொழுதோ, காலைமுதல் மாலைவரை வெறுந் தண்ணீரைத் தவிர வேறொன்றின்றிப் பல வேளைகளில் நான் நடந்துள்ளேன். பற்பல திசைகளிலும், விசாகப்பட்டணத்திற்கும் மதுரைக்கு மிடையே இருக்கும் எல்லா இடங்களிலும் நான் நடைமேற் சென்றுள்ளேன்.

வேலூரிலுள்ள என் வீட்டில் ஒரு மண்டபமும் ஒரு படுக்கை யறையுமுண்டு. மண்டபத்தில் ஒரு மேசை தவிர வேறெந்தச் சாமானுங் கிடையாது. படுக்கை யறையிலோ, சிறிய தொரு மேசை, ஒரே நாற்காலி, எனது படுக்கை, புத்தகப் பெட்டி யொன்று, இரண்டு தகரப் பெட்டிகள் இவைதாமுண்டு. மாதத்தில் மூன்று வேளைதான் நான் வீட்டிற் சாப்பிடுவேன். அக்காலை, வீட்டிற்கு வருவோர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாற்காலியும் சாப்பாட்டுத் தட்டுங் கொண்டு வருவார்களாகையால் வீடு நேர்த்தி யாய்த்தா னிருக்கும்!

ஆச்சரிய விளக்கைப் பெற்ற அலாவுதீனைப் போல நான் வாழ்ந்து வரவில்லை யென்றும், என்னிடம் ஆட்கள்,

பாடகர், யானைகள் இல்லை யென்றும் நான் சொன்ன பிறகு, என் ஓய்வு நேரத்தை எப்படிக் கழிக்கிறேன் என்று நீ தெரிந்து கொள்ள விரும்புவாயல்லவா? சில்லாண்டுகளுக்கு முன்னால் நான் எவ்வாறு கழித்தேன் என்பதைச் சொல்ல இயலா விட்டாலும், சென்ற இரண்டு ஆண்டாக நான் வேலூரி லிருந்த காலத்து ஒவ்வொரு மணியையும் நான் எங்ஙனம் பயன் படுத்தினேன் என்று கூற இயலும். காலை 7 மணிக்குக் காலையுண்டி கொண்டவுடனே தனிமையில் நடைமேற் செல்வேன். பத்து மணிக்குத் திரும்பி வந்துவிடுவது வழக்க மாயினும், சில நாட்களில் ஒரு மணி வரையில் வயல் வரப்புகளில் சுற்றிக் கொண்டிருந்து விடுவேன். பத்து மணிக்கு வீட்டுக்குத் திரும்பிவிடும் நாட்களில் ஒரு மணி வரையில் பர்சியன் மொழியிற் பயின்று கொண்டிருந்து விட்டு, ஆடை யணிந்து உண்ணச் செல்வேன். மூன்று மணிக்குத் திரும்பி வந்ததும், சில வேளைகளில் அரைமணி நேரந் தூங்கியும் தூங்காமலும், பர்சியன் மொழியை எழுதிப் பேசிச் சாயுங்காலம் வரையிற் கழிப்பேன். பின்னர், தளகர்த்தர் வீட்டில் ஒன்பது மணி வரையில் நண்பர்களுடன் பேசுவதிலும் விளையாட்டிலுமாகக் கழிப்பேன். அதன் பின்னர், இரவுச் சாப்பாட்டை யுட்கொண்டும் பல சமயங்களில் உட்கொள்ளாமலும், அரசியல் விஷயங்களைப் பற்றியும் பயனற்றவைகளையும் படித்திருந்து, பதினொன்றுக்கும் இரண்டு மணிக்குமுள்ள இடை வேளையில் உறங்கப் புகுவேன்.

நான் பல நாட்களில் இரண்டு மூன்று மணி நேரம் பந்தாடுவதுண்டு. ஐரோப்பாவி லிருப்பதைவிட இங்கு

மனிதர் இளைஞராக இருக்கின்றனர்; அவ்விடத்தில்விட இவ்விடத்தில் அவர்கள் கடுமையான வெயிலில்லாத நாட்களில் அதிகமாகத் தேகப்பயிற்சி செய்துக் கொண்டும் களைப்படையாம லிருக்கின்றனர் என்பது வியப்பாய்த் தோன்றும். நானும் இங்கு உழைப்பதிற் பாதியளவு நம் ஊரில் உழைக்க முடியாது. சகாத்லாந்தில் நானிருந்தபோது தினந்தோறும் நான்கு மைல் தூரத்துக்குமேற் பன்னிரண்டு மைல் வரையிற்றான் நடந்து, அது மிகப் பெரிதென நினைத்திருந்தேன். இங்கோ, ஐந்து ஆறு வயதுள்ள சிறுவர்கள் அவர்தம் தகப்பன்மார் நடந்து செல்வதைப் போல் வருத்தமின்றிப் பதினைந்து பதினாறு மைல் தூரம் நடந்து செல்கிறார்கள்."

இவ்வளவு பாடுகளி னிடையே மன்றோ வருந்திச் சேர்த்த பணத்தைக் கொண்டும், மன்றோவின் சகோதரர் அலக்சாந்தர் வங்காளத்திற் சேர்த்த பணத்தைக் கொண்டும், மன்றோவின் குடும்பத்தாருடைய நலத்திற்காக ஆண்டு ஒன்றுக்கு நூறு பவுன் சகாத்லாந்துக் கனுப்பப்பட்டதென்பதைத் தெரிந்து கொள்ளும் எவரும் மன்றோவின் குடிபுறந்தோம்புந் தன்மையைப் போற்றாதிரார்.

# மூன்றும் அத்தியாயம்

## சேலம் ஜில்லா கலெக்டர்

இக் காலத்தில் சேலம் ஜில்லா என வழங்கப்படுவது மன்றோ காலத்தில் பாராமஹால் என வழங்கி வந்தது. சேலம் ஜில்லாவின் தாலுக்காக்களாகிய கிருஷ்ணகிரி, தர்மபுரி, ஊத்தங்கரை, உசூர் ஆகியவைவும், வட ஆர்க்காட்டு ஜில்லாவில் இப்பொழுதடங்கும் திருப்பத்தூரும் ஒரு ஜில்லாவாக அப்பொழுது பாராமஹால் என அழைக்கப்பட்டு வந்தன. கும்பெனியாருக்கும் திப்புவுக்கும் நடந்த போர்களுக்குப் பின் சீரங்கப்பட்டண சமாதானம் உண்டாயிற்று. அச் சமாதான உடன்படிக்கைப்படி கும்பெனியாருக்குத் திப்பு பாராமஹாலை யளிக்க நேர்ந்தது. இப் பாராமஹாலை நிர்வகித்துவரும் பொருட்டுக் காப்டன் இரீட் என்றொருவர் நியமிக்கப்பட்டார். அவர் நேர்மையும் வாய்மையும் வாய்ந்தவர்; மானத்தை யிழக்காது பொது நன்மைக்குப் பாடுபடக் கூடியவர்; எடுத்துக்கொண்ட எவ் விஷயத்திலும் ஆர்வம் அதிகங் கொள்பவர்; மக்களுடைய மொழிகளையும் பழக்க வழக்கங்களையும் அறிந்தவர்; அரசிறை சம்பந்தமான ஆராய்ச்சிகளில் தேர்ந்தவர். அவர் மன்றோவையும் இன்னுமிருவரையும் தமக்கு உதவியாளராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

பாராமஹாலில், இந்துக்களே அதிகமாக வாழ்ந்துவந்த இடம். அவர்கள், மூதாதைகளின் பழக்க வழக்கங்களையே யொட்டி ஆங்கிலேயருடன் அதுவரையில் யாதொரு தொடர்பும் இன்றி வாழ்ந்துவந்தவர்கள்; அண்மையில் நடந்த சண்டைகளால் வருத்தமுற்றவர்கள். ஆதலால், பிறநாட்டாராட்சியின்கீழ் பாராமஹாலை வைப்பதென்றால் விவேகமுள்ளவரும் நாட்டுமொழி யறிந்தவருமாகிய செயலாளர் வேண்டும். அதனால்தான் காப்டன் இரீடை இராஜப் பிரதிநிதி லார்டு காரன்வாலிஸ் அந்த வேலைக்கு நியமித்தார்.

பாராமஹாலில் இரீடும் மன்றோவும் புகுந்த வேளையில் அதின் நிலைமை எவ்வாறிருந்தது? ஹைதரும் திப்புவும் அப் பகுதியை மிக்க கடுமையாக ஆண்டிருந்தனர். அவ்விருவரும் ஊரை அப்படியே குத்தகைக்காரர்களுக்குக் குத்தகையாக விட்டு வந்தனர். குத்தகைக்காரர் குத்தகைப் பணத்தைக் கட்டிவிட்டு, மக்களைப் பெரிதும் வாட்டி வளைவெடுத்து, அனுவசியமாய் அதிகமாகப் பணத்தை வசூலித்தனர். இந்தக் கொடுமையான முறையின்கீழ் வாழ்ந்தவர்கள், கும்பெனியார் ஆளுகையில் வந்தகாலத்து, வறுமை மிகுந்தவர்களா யிருந்தார்கள். பணக்காரக் குடியானவனை ஓரிடத்துங் காணக்கூட வில்லை. ஒற்றை யுழவு மாடுகூட இல்லாமல் வாடகைக்கும் இரவலுக்கும் ஓரிரண்டு மாட்டை வாங்கி யுழுத பல வேளாளர் இருந்தார்கள்.

இந் நிலையில், மன்றோ பாராமஹாலிற் புகுந்தார்; முதல் வேலையாக அரசிறை இவ்வளவென்றும் வசூலிக்கும் விதம் இன்னதென்றும் ஏற்பாடு செய்யத் தொடங்கினார். அவர் செய்த ஏற்பாட்டினால் மக்களுக்கும் அரசாங்கத்தார்க்கும்

தன்மை ஏற்பட்டது. அவர் மேற்கொண்ட முறையை இப்பொழுது இரயத்துவாரி முறை எனக் கூறுவர். அதன் படிப் பயிரிடுங் குடிகளிடமிருந்து நேரே அரசாங்க உத்தியோகஸ்தர்களால் அரசிறை வசூலிக்கப்படுகின்றது. நிலத்தை விற்கவோ விடவோ வில்லங்கஞ்செய்யவோ குடிகளுக்கு அதிகார முள்ளமையால், வருடந்தோறும் ஒவ்வொரு குடியினிடத்தும் எவ்வளவு நிலமிருக்கிற தென ஆராயப்படுகின்றது. ஆனால், வருடந்தோறும் தீர்வை விகிதத்தில் யாதொரு மாறுதலும் ஏற்படுத்துவதில்லை. இம் முறைப்படி நிரந்தரக் குத்தகையின் பொறுப்பில்லாமல் அதின் நன்மைகள் யாவுமுடையவனாகப் பயிரிடுங்குடி யிருக்கின்றான். அவன் சாதாரண உரிமையோடு வாழும் ஒரு நிலச் சொந்தக்காரனைப்போலவே யிருக்கின்றான். பதிவு பெற்ற ஒவ்வொரு நிலக்காரனும் நிலவுரிமை யுடையவனாக மதிக்கப்படுகின்றான்; வரி அவனிடமிருந்து நேரே அரசாங்கத்தால் வசூலிக்கப்படுகிறது. அவன் நிலத்தை உட் குத்தகைக்கு விடவோ, தானஞ் செய்யவோ, விற்கவோ, அடகு வைக்கவோ முடியும். அவன் தீர்வையைச் செலுத்தும் வரையில் அவனை நிலத்திலிருந்து அப்புறப்படுத்த அரசாங்கத்திற்கு உரிமையில்லை. எதிர்பாராத இடுக்கண் விளைக்கும் பருவங்களில் தீர்வை திருப்பிக்கொடுக்கப்படுகின்றது. தீர்வை இவ்வளவென்று பணவளவில் விதிக்கப்படுகின்றது. அரசாங்கத்தின் நீரைப் பாய்ச்சிக்கொள்ளுங் காலத்திலன்றித் தீர்வையை எக் காரணம்பற்றியும் ஏற்ற முடியாது. குடி தன்னுடைய செலவில் செய்துகொள்ளும் நிலத் திருத்தங்களை முன்னிட்டுத் தீர்வையை அதிகப்படுத்த

முடியாது. கெட்ட பருவங்களில் அரசியலார் உதவியைப் பெறக்கூடும்.

இம்முறைக்கு அடிகோலியவர் மன்ரோ ஆவர். மன்ரோ பாராமஹாலில் வேலை பார்த்த காலத்தே எஞ்ஞான்றும் குடிகளுடைய நலத்தைக் கருதியவராகவே யிருந்து வந்தார். குடிகள் புதிதாகக் கிணறுகள் வெட்டுவது முதலியவற்றின் மூலமாகத் தங்கள் நிலத்தை வளம்படுத்தினால், அது காரண மாகத் தீர்வையை யதிகப்படுத்தக் கூடாதென்று மன்ரோ அரசாங்கத்தாருக்குச் சொன்னார். வெற்றிலை, புகையிலை போன்ற தோட்டப் பயிர்களை விளைவிக்கும் நிலங்களுக்காகத் தனித் தீர்வை விதிக்கக் கூடாதென்றும் அவர் தாம் அக் காலத்திலேயே எடுத்துக் கூறினார். கிராமங்களிலிருந்த பல . களர் நிலங்களை அரசாங்கத்தாரே வைத்துக்கொண் டிருந்து, பின்னால் மக்கட் பெருக்க முண்டாகும்போது அவற்றை வேண்டுவோர்க்குஅளிக்கலாமென்றும் ஆலோசனை கூறினார். இங்ஙனம் 1792 ஏப்ரல் மாதம் முதல் ஏழாண்டு காலம் மன்ரோ பாராமஹாலிற் கழித்தார். இருபத் திரண்டு ஆண்டு கழித்து அவருடைய சகோதரிக் கெழுதப் பட்ட கடிதத்துட் கீழ்க்கண்ட திருப்பத்தூர் வருணனை காணப்படுகின்றது:—"இவ் வூரின் இயற்கையழகு எவரை யும் மயக்கத் தகுந்தது. இங்கிலாந்திலோ சகாத்லாந்திலோ- இதற் கொப்பாகச் சொல்லக்கூடிய தொன்றுமில்லை. சற்றே றக் குறைய நாற்பது மைல் அகலமும் எழுபது மைல் நீள மும் பொருந்திய பரந்த செழிப்பான பள்ளத்தாக்கினி டையே இவ்வூரிருக்கின்றது. நமது ஊரின் பக்கத்துள்ள கிராம்பியன் மலையைவிட இருமடங்கு உயரமும் பல்வகைப் பட்ட வடிவமும் வாய்ந்த மலைகளால் இவ்வூர் சூழப்பட்டு

உள்ளது. மலையடிவாரத்திலுள்ள வெறும் பாறைகளில் மிகப் பெரிய மரங்களும், மிகச் செழிப்பான மண்ணும், மிகவுங் கொழுத்த புல் வளமுங் காணக் களிப்பை யூட்டுகின்றன.”

‘கிருஷ்ணகிரி, தருமபுரி, இராயக்கோட்டை, தொப்பூர்க் கணவாய், ஓமலூர், சங்ககிரிதுர்க்கம் ஆகிய விடங்களில் மன்றோ வாழ்ந்த மாளிகைகளும், அவர் எடுப்பித்த சத்திரங்களுந் தடாகங்களும், அவர் நட்ட மரங்களிற் சிலவும் இன்னுமிருக்கின்றன. தொப்பூர்க் கணவாயின்கண்ணுள்ள 190வது மைற் கல்லுக்குப் பக்கத்தே ‘மன்றோவின் கிணறு’ என்ற பெயரால் ஒரு சிறு குட்டம் வழங்கி வருகின்றது. தொப்பூரிலிருந்து தருமபுரி பக்கமாக இரண்டரைமைல் தூரத்தில் இக் குட்ட முள்ளது. மொரப்பூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி இவற்றின் சாலைகள் சேருமிடத்தில், தருமபுரிச்சாலையில் நுழைந்தவுடனே ஒரு பீடத்தையும் ஒரு கற்றூணையுங் காணலாம். இவை மன்றோவை மனத்திலிருத்தக் கருதிய மக்களான் எடுக்கப்பட்டவை யெனத்தோற்றுகின்றன. தருமபுரி யாற்றின் வலப்பக்கமாக உள்ளதும் சர்வே 116/2 எண்ணுள்ளதும் ஆகிய நிலத்தில் ஒரு கிணறுள்ளது. அதைச் சூழ்ந்த தோட்டம் ஒன்று இன்றும் மன்றோவின் பெயரோடு வழங்கி வராநின்றது. இத் தோட்டத்தில் இன்றும் மாமரங்களும் புளியமரங்களும் நன்றாகப் பயனளித்து வருகின்றன. இது மீராசாயபுவின் கிணற்றிற்கு இரண்டு பர்லாங்கு தொலையில் உள்ளது. இப் பூந்தோட்டத்தையும் கிணறு போன்றிப்பொழுது தோன்றும் குளத்தையும் விட்டுப் பிரிய நேரிட்டபோது “பழைய நட்பினன் ஒருவனைப் பிரியுங்கால் என் மனம் வருந்துமாப்போல இப்பொழுது வருந்துகிறது” என்று மன்றோ கூறினதாகச் சொல்லப்

படுகின்றது. சேலம் ஜில்லாவிலுள்ள மரமும் மலையும் எல்லாம் ஒருவிதமான வசீகரம் வாய்ந்தவையாய் மனத்திற் குகந்தனவா யிருக்கின்றன என்று அவர் கருதியது ஒரு கடிதத்திலிருந்து அறியப்படுகின்றது.

மன்றோ சேலம் ஜில்லாவில் வேலைபார்த்துவந்த காலத்தில் அவர் தகப்பனருக்கெழுதிய கடித மொன்றிலிருந்து கலெக்டர் பதவி வகிப்போர் எத்தகையராயிருக்கவேண்டு மென்பது எளிதிற் புலனும். அக்கடிதம் வருமாறு:— "குடிகளின் மொழியை யறியாத எவரையும் ஜில்லாவின் அதிகாரத்தில் வைக்கக்கூடாது. அம்மொழியைக் கற்றுக்கொள்ளும் ஊக்கம் அவருக்கு இல்லையாயின், அவர் எப்படி நல்ல கலெக்டர் ஆவார்? அம்மொழியை அவர் அறியாவிடில் கீழ் உத்தியோகஸ்தர்களுடைய ஆதிக்கம் வலுத்துப்போய் உண்மையறிய முடியா நிலை வந்து சேரும் அன்றோ?

அம் மொழியைக் கற்றல் ஒன்றே அமையாது. நிலைக்கேற்ற கடமைகளைச் செய்வதில் ஆர்வமும், குளிர் வெயில் தாங்கக்கூடிய உடலுரமும் ஒவ்வொரு கலெக்டருக்கும் இருக்கவேண்டும். கலெக்டர் ஜில்லா முழுதும் சுற்றிப் பார்த்து ஒவ்வொன்றையுந் தாமே கண்டறியுந் திறமை யில்லாதவராயிருந்தால், அவர் கீழ் உத்தியோகஸ்தர்கள் கிராமத் தலைவர்களுடன் கூடிக்கொண்டு, கெட்ட பருவ மென்று சொல்லி, நிலத்தீர்வையைத் திருப்பிக்கொடுக்கச் செய்து விடுவார்கள். இந்தத் தேசத்திலே ஐரோப்பியர் சிலரே இருப்பதாலும், வரிவசூல் சம்பந்தமான விஷயங்களெல்லாம் பிற மொழியிலேயே நடத்தப்படுவதாலும், கலெக்டருடைய எழுத்துக்களாலன்றி வேறெவ் வழியாலும் அரசாங்கத்தார்

படுகின்றது. சேலம் ஜில்லாவிலுள்ள மரமும் மலையும் எல்லாம் ஒருவிதமான வசீகரம் வாய்ந்தவையாய் மனத்திற்குகந்தனவாயிருக்கின்றன என்று அவர் கருதியது ஒரு கடிதத்திலிருந்து அறியப்படுகின்றது.

மன்ரோ சேலம் ஜில்லாவில் வேலைபார்த்துவந்த காலத்தில் அவர் தகப்பனாருக்கெழுதிய கடிதமொன்றிலிருந்து கலெக்டர் பதவி வகிப்போர் எத்தகையராயிருக்கவேண்டுமென்பது எளிதிற் புலனாம். அக்கடிதம் வருமாறு:— "குடிகளின் மொழியை யறியாத எவரையும் ஜில்லாவின் அதிகாரத்தில் வைக்கக்கூடாது. அம்மொழியைக் கற்றுக்கொள்ளும் ஊக்கம் அவருக்கு இல்லையாயின், அவர் எப்படி நல்ல கலெக்டர் ஆவர்? அம்மொழியை அவர் அறியாவிடின் கீழ் உத்தியோகஸ்தர்களுடைய ஆதிக்கம் வலுத்துப்போய் உண்மையறிய முடியா நிலை வந்து சேரும் அன்றோ?"

அம்மொழியைக் கற்றல் ஒன்றே அமையாது. நிலைக்கேற்ற கடமைகளைச் செய்வதில் ஆர்வமும், குளிர் வெயில் தாங்கக்கூடிய உடலுரமும் ஒவ்வொரு கலெக்டருக்கும் இருக்கவேண்டும். கலெக்டர் ஜில்லா முழுதும் சுற்றிப் பார்த்து ஒவ்வொன்றையுந் தாமே கண்டறியுந் திறமையில்லாதவராயிருந்தால், அவர் கீழ் உத்தியோகஸ்தர்கள் கிராமத் தலைவர்களுடன் கூடிக்கொண்டு, கெட்ட பருவமென்று சொல்லி, நிலத்தீர்வையைத் திருப்பிக்கொடுக்கச் செய்துவிடுவார்கள். இந்தத் தேசத்திலே ஐரோப்பியர் சிலரே இருப்பதாலும், வரிவசூல் சம்பந்தமான விஷயங்களெல்லாம் பிறமொழியிலேயே நடத்தப்படுவதாலும், கலெக்டருடைய எழுத்துக்களாலன்றி வேறெவ் வழியாலும் அரசாங்கத்தார்

இம்மாதிரிப்படியெனிற் கூறுவேன். தீர்வை பணமாக வசூலிக்கப்பட்டால், கிரமமான குத்தகைப் பட்டாவைவிடக் குறைந்தொன்றைச் சர்க்காருக்குக் காட்டுவதாலும், இனமாக வசூலிக்கப்பட்டால், நிலத்தின் விளைவினைக் குறைவாகக் காட்டுவதாலுமாம். கலெக்டர்கள் நன்றாகப் படித்தவர்களாதலால் இத்தகைய தப்பான நடையில் வழுக்கிவிழமாட்டார்களென்று கூறுவது பயனற்றது. யாவர் இவ்வாறு செய்யினும் ஒன்றுதான். அவர்களுடைய காரியகர்த்தர்களின் சாமர்த்திய வாணிகத்தால் கலெக்டர்கள் ஊதிய மடைகிறார்களென்று ஒருகால் சிலர் சொல்லக்கூடும்; ஆனால் இக்காரிய கர்த்தர்கள் அதிகார முறையில் அங்குச்சென்று, தீர்வை கட்டுவதைப் பெரிதும் அவசரப்படுத்தி, தாங்கள் கூறும் விலைக்கே விளைவு முழுதும் வாங்கிக்கொண்டு வருகிறார்களென்றால், அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இத்தகைய வியாபாரம் எவ்வளவு தீமையை விளைக்கின்றதென்பதைக் கண்டறியலாகாதா?" எனவே, கலெக்டர்கள் நேர்மையுடையவர்களாயிருந்தாற்றான் குடிமக்கள் கவிப்பின்றி வாழக்கூடும் என்ற மன்றோவின் கருத்துப் புலப்படும். பிறிதொரு குறிப்பிற் பின்வருமாறும் அவர் எழுதியுள்ளார்:— "அனுபவமில்லாத கலெக்டர்களைப்போல அதிக செலவுக்குள்ளாக்குவது வேறொன்றுமில்லை. அவர்களது படியைவிட அதிகமாக ஒவ்வோர் ஆண்டும் அரசிறை வசூலிற் குறைபட்டுப் போவது அவரது ஆற்றலின்மையாலாகும். அதனால் அவருடைய ஜில்லாக்களின் காரியங்கள் சீர்கெட்டுப்போய் விடும்போது, அக்கேட்டின் காரணத்தைக் கண்டறிய விசாரணைக்காரர்கள் நியமிக்கவேண்டியிருப்பதால், வேறு செலவும் உண்டாகின்றது.

அரசிறை விஷயங்களைமட்டுமே கலெக்டர்வேலை யுட்கொண்டதென நினைப்பது பெருந்தவறு. அது மக்களுடைய நன்மையைப் பொறுத்த எல்லா வழிகளிலும் தொடர்புடையது என்பதை அறிந்து கோடல்வேண்டும். இந்தியாவில், நிலவரியை விதிக்கின்றவன் தேசத்தின் அமைதிநாடியைக் கையில் பிடித்துக்கொண்டிருக்கிறான் என்று கூறலாம். தேசாசார சட்டங்களையும் அபராத சட்டங்களையும்விட, சமமும் மிதமுமான தீர்வையால் வழக்குகளையுங் குற்றங்களையுந் தடுக்க முடியும். நிலங்கள் அளவிடப்பட்டுப் பதிவு செய்யப்பட்ட பிறகு, நிலங்களின் எல்லைகளைப் பற்றியும் உடைமையைப்பற்றியும் வரக்கூடிய வழக்குகளுக்கு இடமில்லை. தீர்வை மிதமாகவுள்ள காலத்தில் ஒவ்வொருமனிதனும் தொழில் ஏதேனும் பெறுவதால், கன்னங்களவு அதிகமாக இருப்பதில்லை." ஆதலால், தீர்வை விதிக்கும் விஷயம் சாமானியமானதன்று என்பதும், விதிக்குங் கலெக்டர் திறமையும் சாமர்த்தியமும் அனுபவமும் உள்ளவராய் இருக்கவேண்டுமென்பதும் புலப்படும்.

சிவில்சர்விசிற்புகும் உத்தியோகஸ்தர்களுக்கு மன்ரோ பிறிதோர் சமயத்திற் கூறிய நன்மதி ஊன்றிப் படிக்கற்பாலது:— "பொதுக் காரியங்களை எளிதில் நடத்துவதற்கு மாத்திரம் நாட்டு மொழியறிவு பயன்படும் என்பதன்று. மக்களோடு நெருங்கிய பழக்க மேற்படும்படி செய்யு முகத்தால், அவர்கள்பால் நாம் சாதாரணமாகக் கொள்ளக்கூடிய தப்பெண்ணங்களை விட்டு விடுவதற்கும், அவர்களுடைய நலத்தில் இன்னும் அதிகமாக மனங்கவியும்படி செய்வதற்கும், இவ்விதம் நடப்பதால் அவர்களுடைய நன்கு மதிப்பைப் பெறுவதற்கும் அது ஏதுவாகவிருக்கின்றது. அவர்களுடைய

ஆக்கத்தில் நீங்கள் கவனத்தைச் செலுத்துகின்ற அளவு அவர்கள் நன்றியறிதலுடனும் அன்புடனுங் கைம்மாறு செய்யக் காத்திருப்பார்கள்.

நம்முடைய அதிகாரத்தின் கீழ் வைக்கப்பட்ட மக்கள் எந் நிலையிலும் நல்லவர்களென்றே கருதல் வேண்டும். இக் கருத்தினால் தீமை விளையுமென்றஞ்ச வேண்டியதில்லை. இந்த மக்களிடையே நீண்டகாலம் வசித்துள்ளோர் அவர்களைப்பற்றி மிகப்பெரிய நல்லெண்ணங் கொண்டுள்ளார்களென்பதே அவர்களுடைய நற்குணங்களுக்குச் சாட்சி பகரும். இனிமேல், நீங்களெல்லீரும் இக்கருத்தின் நியாயத்தையும் அதை ஆதாரமாகக்கொண்டு நடப்பதின் உசிதத்தையுங் கண்டுகொள்வீர்களென்று நம்புகின்றேன். ஏனெனில், பொதுவாக எல்லாத் தேசங்களிலும், சிறப்பாக இத் தேசத்திலும், மக்களுடைய நன்மதிப்பே அரசாங்கத்திற்கு அருமையான ஆதரவு என்பது உண்மையன்றோ?"

இச் சிறப்பு வாய்ந்த கருத்தை வெளியிட்ட மன்றோ பிறிதோரிடத்தில், சுற்றுப் பிரயாணத்தின் மேன்மையைப் பற்றி மொழிந்திருப்பதுங் கவனித்து நோக்கத்தக்கது:— "பொதுவாக எல்லாராலும் நன்கு மதிக்கப்படும் மக்களின் நடை உமக்குப் பிடிக்கவில்லை யாயின், உலகத்திற்குப் பகுத்தறிவில்லை யென்பது காரணமாகாது, உலகத்தோடு நீர் கொஞ்சமுங் கலந்து கொள்ளவில்லை யென்பதே காரண மாகும். இப்பொழுது நீர் வெறுக்கும் பல விஷயங்களைப் பழக்கத்தினால் காளடைவில் ஒப்புக்கொள்பவ ராய்விடுவீர். இந்தியாவிலிருப்பதா ஊருக்குத் திரும்புவதா என்பதை முடிவு செய்வது உமது கையிலிருந்தால், நீர் முடிவுக்கு

எளிதில் வந்துவிட முடியாதபடி ஊர்திரும்புமெண்ணங் குறைவுபட்டும் இந்தியாவிற் பற்று அதிகப்பட்டும் போகும். ஊர்களைச்சுற்றிப் பார்ப்பதால் உமக்குப் பொழுதுபோக்கும் உடல் நலமும் உண்டாம். துன்ப எண்ணங்களில் ஆழாது தடுத்து, நாட்டையும் நாட்டாரின் நடையையுங் காட்டி உம் மனத்தைப் பண்படுத்துவது ஊருலாவே யாகும்."

இத்தகைய நன்னோக்கங்கள் கொண்ட மன்றோ பாரா மஹாலில் வேலை பார்த்து ஏழு ஆண்டுகள் ஆகுங்கால். அவரைக் கன்னட தேசத்திற்கு இராஜப் பிரதிநிதி மாற்றி விட்டார்.

## நான்காம் அத்தியாயம்

---

### கன்னட ஜில்லா கலெக்டர்

அவ்வாறு மாற்றப்படுமுன், மூன்றாம் மைசூர் யுத்தம் என்று சொல்லப்படும் யுத்தத்தில் மன்ரோ கலந்து கொண்டார். அவ் யுத்தத்திற் சீரங்கப்பட்டணம் பிடிபட்டதோடு திப்புசுல்தானு மிறந்தார். அதன்பின், பிரிவினை உடன்படிக்கைப்படி கன்னட தேசம் ஆங்கிலேயருக்குக் கிடைத்தது. இக்கன்னட தேசத்தை ஒழுங்குபடுத்தவே மன்ரோ நியமிக்கப்பட்டார். அவருக்குப் பாராமஹாலை விட்டுப் பிரிய மனமே யில்லை. சகாக்களைவிட்டுப்பிரிந்து போயிருந்த துக்கத்தினுமதிகமாக இப்பொழுது துக்கம் பெருகிற்று. கன்னடத்தில் முன்பின் னறிந்த நண்பர் யாரும் இல்லையாதலால் இனிமேற்றான் மன்ரோ புது நட்புக் கொள்ள வேண்டியவராயிருந்தார். அந்த நாட்டோடு யாதொரு தொடர்புந் தமக்கிருக்கக் கூடாதென்று மன்ரோ நினைத்த காலமுண்டு. ஆனால், கடமையைச் செய்திட வேண்டு மென்னுங் காரணத்தாலும், பாராமஹாலி லிருந்தாற் போகக் கூடியதைவிட ஒன்றிரண்டு ஆண்டு முன்னதாக ஒருகால் ஊருக்குத் திரும்பக் கூடும் என்னுங் காரணத்தாலும் மன்ரோ கன்னடத்தில் வேலை பார்க்க இசைந்தார்.

எனினும், சிறிது காலத்திற் கன்னடம் தமது மனத்துக்குகந்ததா யில்லை யென்பதை மன்ரோ கண்டுகொண்டார்.

அதனால், மைசூருக்கோ, பாராமஹாலுக்கோ, கர்நாடகத் திக்கோ தம்மை எந்த நிபந்தனைகளின் பேரிலாகிலும் மாற்ற வேண்டுமென்று ரெவனியூ போர்டிலிருந்த காக்பர்ன் துரைக்கு முறையிட்டார். அதற்குக் காக்பர்ன் கூறிய தாவது:—“உமது நிலைமை இவ்வளவு வருத்தந் தரக் கூடியதாக விருப்பதுபற்றி நானும் வருந்துகின்றேன். எனினும், உம்மை யங்கிருந்து இப்பொழுது மாற்றினால் இராஜத்துரோகி என்று நான் சொல்லப்படுவேனே யென அஞ்சுகின்றேன். நீர் இப்பொழுது அங்குச் செய்துவரும் வேலைக்கு உம்மைப் போன்று வேறொருவரும் தகுதி யுடையவர் இலரெனக் கருதுகின்றோம். நீர் அங்குச் செய்யுந் தியாகத்திற் கேற்ற வெகுமதி யொன்றுமில்லையேனும், உமது வருத்தங்களைப் பாராது வேலைபார்ப்பீர் என்றும், கன்னடம் நன்னிலைமை யடைந்ததும் அரசாங்கம் உமக்கு முழு நன்றி காட்டுமென்றும் நான் நம்பியிருக்கின்றேன்.”

இச் சொற்களால் மகிழ்ந்தோ மகிழாமலோ மன்றோ 1799 ஜுலை முதல் 1800 அக்டோபர் வரை கன்னட ஜில்லாவில் வேலை பார்த்து வந்தார். பாராமஹாலில் அவர் எழாண்டு செய்த வேலை இந்த ஒரு வருஷ காலத்தில் அவர் இங்குச்செய்த வேலையினுங் குறைவே. கன்னட ஜில்லாக் குடிகள் அவருக்குப் பெரிடுக்கண்கள் விளைத்து வந்தார்க ளென்பது பின் வரும் அவர்தங் குறிப்பினின்று வெளியாம்:—“இக்குடிகளோ அடங்காதவராயும் குழப்பம் விளைப்பவராயு முள்ளார்கள். இதன் காரணம் அவர்களது கெட்ட குணமன்று. பின்னென்னெனின், ஹைதர் ஆலியின் வெற்றியால் முன்னரும், கும்பெனியார் வெற்றியாற் பின்னரும் அவர்கள் காணியாட்சிகளை யிழந்திருப்பதே யாம். கன்னடம், 1763-ஆம் வருஷம் வரையில் இந்துக்களால்

ஆளப்பட்ட தென்பதையும், அவ் வருஷத்தில் ஹைதர் அலியால் மைசூரோடு சேர்த்துக்கொள்ளப்பட்ட தென்பதையும் மனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். ஹைதர் அலி ஆட்சிக்கு வருமுன் இக்குடிகள் செலுத்த வேண்டியிருந்த நிலவரி ஐரோப்பாவிலுள்ள பல தேசங்களில் எவ்வளவு குறைவோ அவ்வளவு குறைவாகத்தானிருந்தது. நான்கு வருஷங்களுக்கு முன்னால் திப்புவின் பொருளாதார நிலை முழுவதுஞ் சீர்கெட்ட காலையில், அரசிறையின் பேர்பாதிகூட அவரடைய முடியாத காலையில், கொள்ளையடிப்பதில் அரசாங்க உத்தியோகஸ்தர்களுடன் சேர்ந்து கொண்டு, தங்கள் தங்கள் வரிவிகிதத்தில் காற்பங்கு கொடுக்காமல் வைத்துக் கொள்ளக் குடிகள் அனுமதி பெற்றுக் கொண்டார்கள். நான் வந்ததும், அவர்கள் பெற்றுக் கொண்டிருந்ததை விட்டுவிட மனமில்லாதிருந்ததோடு நிற்காமல், இன்னுமதிகமாக என்னிடம் உரிமைகளைப் பெற முயன்றார்கள். இரண்டு போர்களாலும் நிகழ்ந்த அழிவைக் கருதி, திப்புவின் ஒழுங்கான ஆட்சி நடந்த கடைசி வருஷமாகிய 1789-ஆம் ஞல் அரசிறை எவ்வளவு இருந்ததோ அவ்வளவிற்கு அரசிறையைக் கொண்டுவர நான் எண்ணியிருந்தேன். இதில், அரசாங்கம் அவ்வப்பொழுது எவ்வளவு விட்டுவிடலாம் என நினைக்கின்றதோ அவ்வளவு விட்டுக் கொடுக்கச் செய்யலாம் என்று நினைத்திருந்தேன். இவ்வெண்ணத்தை யவர்கள் அறிந்து கொண்டதும், என்னையேதேனு மொப்பந்தத்துக் குள்ளாக்கும் எண்ணத்துடன் கூட்டங் கூட்டமாய்ச் சேர்ந்து கொண்டார்கள். ஹைதருடைய வெற்றிநாள்தொட்டு விதிக்கப்பட்ட வரிகளை எல்லாம் விட்டுவிடவேண்டுமென்றும், அந்நிபந்தனையின் பேரில் தான் அவர்கள் ஏதேனும் ஒரு கட்டுப்பாட்டுக்கு வருவார்

னென்றும் எல்லாப் பக்கங்களிலிருந்துந் தெரிவித்தார்கள். இவற்றிற்கெல்லாம் நான் இசையவில்லை. இதை அவர்கள் யுத்த அறிக்கை யென நினைத்துக் கச்சேரிவாசலுக்கு வர மறுத்துவிட்டார்கள். அவர்கள் மறைந்து வாழ்ந்தார்க ளென்று, அழைத்துவரப்போன ஆட்களாற் றெரிந்தது. நான் அனுப்பிய அமில்தார்கள் என்னும் உத்தியோகஸ்தர் கள் சிலருக்குத் தீயுந் தண்ணீருங் கிடைக்காமற் செய்து அவர்களைப் பட்டினி கிடத்தினார்கள். நான் ஏதேனும் கிரா மத்துக்குச் சென்றால் அக்கிராமத்தார் வேறு கிராமத்துக்குச் சென்று விடுவாராதலால், வாரக்கணக்காக ஜில்லாவில் சில சமயங்களில் நான் சுற்றியும் ஒரு தலையைக்கூடக் கண்டு பிடிக்க முடியாதவனா யிருந்துள்ளேன். எனினும், என் னுடைய எளிய விடாமுயற்சியால், தப்பி யோடினவர்களிற் சிலர் வசப்படுத்தப் பட்டனர். அவர்களோடு பேசியிருந்து அவர்களைக்கொண்டே இன்னுஞ்சில பேரையுந் தருவித்துக் கொண்டேன்."

இன்னும், கன்னட வாழ்க்கை மன்றோவுக் கெங்ஙன மிருந்ததென்பது அவர் சகோதரிக்கு எழுதி வைத்துள்ள செய்திக் குறிப்பிலிருந்து விளங்கும். அது வருமாறு:— "உண்மையாக எனக்கு அலுவல் அதிகமாக இருப்பதால், என் சொந்தக்கடிதங்கள் எழுதுவதற்குக்கூட எனக்கு ஓய் வில்லை. காலையிலிருந்து இரவு பதினொன்று அல்லது பன் னிரண்டு மணிவரையிலும் உண்டி நேரத்தைத் தவிர மற்ற நேரத்தில் நான் தனித்திருப்பதில்லை. ஒரு பக்கத்தில் அர சிறையை அறுதியிடுவதில் ஈடுபட்டிருப்பேன்; மற்றொரு பக்கம், கொடுங்கோல் ஆட்சியால் விளைந்த கொலை களவு முதலியவற்றை விசாரிப்பதில் ஈடுபட்டிருப்பேன். கூடாரத்தின்

கிழே்தானிருப்பதால், வரும் கூட்டத்தைப் புறக்கணித்துச் சில மணி நேரங்கூட இருக்க முடியாது. மாளிகை விட்டிலிருப்பவன் ஒருவன் வேறு முக்கிய வேலை யிருக்கிறதென்று சொல்லிக் கதவடைத்துக்கொள்வது போன்று இங்குமுடியாது. படுக்கை நேரத்தைத்தவிர நான் மற்ற நேரத்தில் ஒதுங்கி யிருக்க முடிவதில்லை; அப்படுக்கை நேரந்தானும் இரவில் வெகு நேரங்கழித்தே கிடைப்பதால் போதிய அளவு இளைப்பாறிக் கொள்ள இடந்தருவதில்லை.

அரை மைல் அகலமுள்ள வாய்க்கால் ஒன்றை நேற்று நான் படகிலேறித் தாண்டி, வெகுதூரம் நடந்துசென்று மறுபடியும் ஆற்றின் கரையோரம் வந்துசேர்ந்தேன். அது மூவாயிர அடி அகலமுள்ளது; அலைகள் வெளியேறிச்செல்லும் பான்மையால் அது மிகமிக வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. படகுகளும் மக்களும் அருகிபிருந்த அவ்விடத்தில் ஒருபடகு கொண்டுவரப்படுங்காறும் ஒரு மரத்தடியில் இரண்டு மணி நேரங் காத்திருந்தேன்.

இதற்குள்ளாக, உழவர்கள் பலர் கூட்டமாக வழக்கம் போல் என்னைச் சூழ்ந்துகொண்டு, "எம்மிடத்துத் தனமில்லை, தானியமில்லை, பணமில்லை, பண்டமில்லை" என்று கூக்குரலிடத் தொடங்கி விட்டனர். எவ்வளவு நல்ல நிலைமையில் அவர்கள் இருந்தாலும் இவ்வாறு கூக்குரல்போடும் வழக்கத்திற்குக் காரணம் யாதெனில், கொடுங்கோன் மன்னர் சிலர் முன்னால் அவர்களுடைய பண்டத்தையும் பணத்தையும் கவர்ந்துகொள்ள முயன்றிருப்பதே யாம். அவர்கள் கூக்குரலிடாதிருந்தால், நான் வரியை அதிகப்படுத்தி விடுவேனென நினைக்கிறார்கள். கூக்குரல் போடாதிருப்பதைக்

காரணமாகக்கொண்டு நான் வரியை யுயர்த்தவில்லை யென் பதை அவர்கள் அறிந்துகொள்ளும் வரையில், இன்னுஞ் சிலமாதம் இத்தகைய கூக்குரல்களைக் கேட்க வேண்டியவனா கவே யிருப்பேன். அவர்களுடைய வறிய நிலையைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்குஞ் சமயத்தே படகொன்று வந்து சேர்ந்ததால், அதிலேறி அக்கரை சேர்ந்தேன். நடந்து இரண்டு மைலுக்கப்பால் சென்றதும் ஒரு சிறு கிராமத்திற் றங்கினேன்.

மொத்தத்தில் ஆறு மைல் தூரமே நான் பிரயாணஞ் செய்திருந்தாலும், சாலையிலேயே நான் ஆறுமணிக் கதிகந் தாமதித்துள்ளேன். எனது படக்குடில் வந்து சேராமை யால், வெப்ப மிகுந்த ஒரு சிறு குடிலுட் புகுந்து என் காலை யுண்டியை முடித்துக்கொண்டேன். எவ்வளவு கோப்பை தேநீர் அருந்தினேனென்று இப்பொழுது என்னால் சொல்ல வியலவில்லை. இது முடிந்தபிறகு வெளியே சாயுங்காலம்வரை சுற்றிவரு மெண்ணத்துடன் புறப்பட்டேன். என் எழுது கருவிகள் வந்திருந்தாலும், இருட்டுவதற்குமுன் படக்குடில் வந்து சேருமென் றெண்ண இடமிருந்தாலும், நான் வெளியே போயிருப்பேனோ என்பது ஐயமே.

வெளியே சென்ற நான் கண்டதென்ன! அங்குள்ள குறுகலான ஒரு சில சமவெளிகடாமும் வருஷத்தின் ஒரு பகுதி நீரால் மூழ்கப்பட்டிருக்கு மென்பதையும், மற்றொரு பகுதி வெடிப்புகளால் கரடு முரடாக இருக்கு மென்பதையும் கண்டு கொண்டேன். பூமி பாறையாகவும், மரஞ்செடி களால் அடர்ந்ததாகவும், ஏற முடியாதவாறு உயர்ந்ததாகவும் பற்பல இடங்களி லிருக்கக்கண்டேன். பின்னர், இருக்கைக்கு

எழுந்ததும் படக்குடில் வந்து சேர்ந்துவிட்டதென்றும் அதனோடு வழக்கம்போற் பலர் மக்கள் வந்திருந்தார்களென்றுங் கண்டேன். அவர்கள் நள்ளிரவு வரை யென்னை விட்டகன்றார்களில்லை. பொழுது விடிந்ததும், என் பிரயாணத்தை மறுபடியுந் தொடங்கி, பயிர்செய்யப் பட்ட நிலங்கள் வழியே ஒருமைல் தூரமும், நீண்டடர்ந்த மரங்கள் நிறைந்த காடுவழியே பத்து மைல் தூரமும் கடந்து சென்றேன். மூங்கில்நிழல் நிறைந்த, ஒரு மலையருவியின் பக்கம் இருந்து எனது காலையுண்டி தொடங்கினேன். சகாத்லாந்தில் வருத்தமில்லாமல் நாடோறும் உனக்குக் கிடைப்பது போற் கன்னடத்தில் ஒருநாளும் காலை யுண்டி கிடைக்காது. நான் எதிர்பார்த்தபடி பம்பாயிலிருந்து தேயிலை வாராததால்; நான் அன்றருந்திய தேநீர் மிக்க இழிவுடைத்து. சுதேசக் கிறிஸ்துவன் ஒருவனால் ஒரு வாரத்திற்கு முன்னால் தட்டப் பட்டதும் கல்போன்று கடினமாக இருந்ததுமாகிய ஒரு ரொட்டி எனக்கு அங்குக் கிடைத்த அரிசியிலும் மேலானதாகப் பட்டது. நான் ரொட்டிதின்று மூன்றுமாத காலம் ஆனபின்னர் இப்பொழுதுதான் முதன் முறை எனக்கு ரொட்டி கிடைத்தது. இந்த ரொட்டியும் நவவர்ணம் வாய்ந்த வெண்ணெயும் எனக்கு அச்சமயம் இன்பத்தை யளித்தன. ஆகூழுடைய நீ இக்கன்னடத்தில் ஒரு நாள்கூட இருந்தறியாயாதலால், வெண்ணெய் பல வர்ணங்களுடன் இருந்ததென் என்றுகருதி வியப்படையக் கூடும். இங்கு, பசுக்கள் சிறுத்தும் வற்றிப்போயுமிருத்தலால், ஐம்பது பசுக்களின் பால்தானும் ஒருவனுக்கு வேண்டிய வெண்ணெயளிப்பதில்லை. அப்பசுக்களெல்லாம் கறுத்தும் ஆடுகளைவிட அதிக பருமனில்லாமலும் இருக்கின்றன. அவை மிகச்சிறியவளவே பால் கொடுப்பதால், விற்கும்பொருட்டு வெண்ணெய்

எடுப்போர் அருமை. ஒவ்வொரு குடியானவனும் அவனவனுடைய பசுக்கள் பயக்கும் பாலைக் குடத்திலோ குப்பியிலோ விட்டு, அரைமணிநேரம் ஆட்டி யெடுக்கும் வெண்ணெய் இரண்டு விரலளவுகூட இராது. ஆகலால், எனது காலையுண்டிக்காகும் வெண்ணெயைக் கொணரும் பெரிய வேலையை யுன்னி வெளியே போகும் என் வேலையாள் ஆறணு வெண்ணெய் வாங்குவதற்குள், ஆறு வீடு நுழைய வேண்டும். வீடுகள் பலவற்றில் வாங்கியதுஞ் சேர்ந்தாலும் நீ காலை வேளையில் உட்கொள்ளும் சொற்ப அளவே இருக்கும்.

எனது கச்சேரி ஆட்கள் வந்துவிட்டபடியால், நேற்று நான் அதற்குமேல் எழுத முடியவில்லை. உன்னைவிட வேறெவரும் எனது தனிமையான பிரயாணங்களைப்பற்றி அறிந்து கொள்ள ஆவலுள்ளவராக இருக்கமாட்டாராதலின், என் பிரயாணத்தைக்குறித்து உனக்கே யெழுதுகின்றேன். அந்தக்காடு மிகவும் அடர்ந்திருந்தபடியால் எனது கூடாரமடிப்பதற்கு வேண்டிய இடம் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. இறுதியில் ஓரிடத்திற்கூடாரமமைக்கப்பட்டது. என்னுடன் வந்திருந்த மனிதர்களெல்லாம் புலி வந்துவிடுமென்று மிகவுமஞ்சி, இருட்டானதும் பக்கமெல்லாம் நெருப்பு மூட்டிக்கொண்டு, இரவு முழுவதும் கூவிக்கொண்டு இருந்தார்கள். நான் விழித்துக்கொண்டு கிடப்பதற்காகப் படுக்கைக்குப் போவதில்லையாதலால் சில நிமிஷநேரத்தில் அவர்களது சப்தத்திற்குச் செவிடனானேன். ஆனால், அவர்கள் சப்தந்தானோ குளிரோ என்னைப் பொழுது விடிய ஐந்துநாழிகைக்கு முன்னரே எழுப்பிவிட்டது. பின்பு, என்னுடைய ஆடை எல்லாவற்றையும வாரி மேலே

போட்டுக்கொண்டு மீண்டும் படுக்கை புகுந்தேன். காலையிலும், வழி செங்குத்தாகவும் குறுகலாகவு மிருந்ததால் குதிரை மேலேறிச் செல்ல முடியாத நிலைமையில், நடந்தே என்வழிச் சென்றேன். பிறகு ஓரிடஞ் சேர்ந்துட்கார்ந்தேன்.

அங்கு ஒரு மரத்தடியில் இருந்தவுடனே அவ்வூர் வாசிகள் அறுவர் வரக்கண்டு அவருடன் பேசத் தொடங்கினேன். அவ்வறுவருள் ஒருவர் பக்கத்துக் கிராமத்தின் கணக்கர்; எஞ்சிய ஐந்து வேளாண்மாந்தருள் இருவர் மராத்தியர்; மூவர் எந்த விதமான ஊனுந் தின்னாதவரும், தங்கள் வீட்டிலன்றி வேறெவர் வீட்டிலுந் தண்ணீர்கூட வாங்கி யருந்தாதவரு மாகிய வேளாளர். இவர்களெல்லாம், நீண்ட தாடியோடு, கபடற்றும் மாசற்றுந் தோன்றினார்கள். வயலோரமாக இருந்த வைக்கோலால் வேயப்பட்ட சில குடில்களைக் காட்டி, அங்குதான் அவர்களது பழைய கிராமம் இருந்ததென்று கூறினார்கள். திப்புசுலிதான் காலத்தில் சூறையாடித் திரிந்த எஞ்சிநாயக்கனால் தீ வைக்கப்பட்டும் சூறை யாடப்பட்டும் அக்கிராமம் அழிந்ததென்று சொல்லி, அச்சமயம் என்ன நிபந்தனைகள் பேரில் அவர்கள் தங்கள் நிலங்களைப் பயிர் செய்யலாம் என்று வினவினார்கள். இதுவரை பட்ட வருத்தத்தாலாகிலு மறிந்துகொண்டு இனி மிதமாக இருக்க வேண்டுமென்று நான் அவர்களுக்குக் கூறினேன்.

அவர்களுடைய நிலங்களின் விளைவினைப்பற்றிச் சில வினாக்கள் எழுப்பினேன். விளைவு மிகவுங் குறைவென்றும், விதைபோட்ட வளவுகூட விளைவு சில சமயங்களில் உண்டாவதில்லை யென்றும் தாடியுள்ள அப் பெரியார்களில் ஒருவர் சொன்னார். ஐந்நூறு மைலுக்கப்பாலுள்ள ஒரு

கிருஷிகனிடம் இவ்வினவை விடுத்திருந்தாலும் அவனும் இவ்விடையைத்தான் கொடுத்திருப்பான். இவ்வாறு குடி மக்கள் சாதாரணமாகச் சொல்லுவதின் காரணம் அவர்கள் பொய் சொல்லுபவர்கள் என்பதன்று; அவர்களெல்லாம் உலகத்தில் மற்ற இடங்களிலுள்ளவர்களைப் போன்றே வாய்மையும் நேர்மையும் வாய்ந்தவர்கள்தாம். ஆனால், இதற்கு முன்னிருந்த கொடுமையான அரசாங்கம் அவர்களுடைய வகைவழிகளில் நுழைந்து நுழைந்து பார்த்துத் தீர்வையை அதிகப்படுத்தி வந்ததால், அவர்களிடத்திருப் பதை இல்லை யென்று கூறு முகத்தால்தான் உள்ளதைக் கொள்ளை கொடாமலிருக்கக்கூடும் என்று அவர்கள் நினைப் பதே காரணம். மனிதரின் இயல்பை மாற்றுவதில் அரசாங்க முறைகள் எவ்வளவு விநோதமான வல்லமை யுடையனவா யிருக்கின்றன என்ற பொருளைப்பற்றியே ஒரு தனிப் புத்தகம் ஓய்வுள்ள ஒருவரால் எழுதக்கூடும். இவ்வாறு மூடு மந்திரஞ் செய்யும் வழக்கம் அவர்களிடத்தில் இளமை தொட்டே வளர்கின்றது. வயலிலுள்ள பந்தரின்மேல் படிந்துகிடக்கும் பத்து எட்டு வயதுச்சிறுர்கள் கவண் கொண்டு கல்லெறிந்து, பறவைகளைப் பயமுறுத்தி யோட்டுங் கால், பன்முறை அவர்களைச் சிலகேள்விகள் கேட்டுள்ளேன். அறுவடை யானதும் எவ்வளவு காணும் என்று நான் அவர் களைக் கேட்குங்காலெல்லாம், "எங்கள் வீட்டில் தின்ன வொன்றுமில்லை; இவை யெல்லாவற்றையும் பக்ஷிகள் பக்ஷித்துவிடும்; நாங்கள் பட்டினிகிடக்க வேண்டியதுதான்" என்ற விடையையே அவர்கள் அளித்துள்ளார்கள்.

ஆனால், தங்கள் கையைப் பிடிக்காத வரையில், பிறரது நிலத்தின் விளைவைப் பொறுத்தவரையில், தாராளமாக

வெளியிட்டு அவர்கள் பேசுவார்கள். ஆதலால், பக்கத்து ஜில்லாவின் விளைவைப்பற்றி என் வினாக்களைத்திருப்பினேன். அங்கிருந்த பெரியவருளொருவர் போட்டிருந்த கம்பளியை நான் உற்று நோக்கியதைக் கண்டதும், ஆட்டு மந்தைகள் பல அவருக்குண்டென நான் நினைத்துவிட்டேனோ என்ற அச்சத்தால் அவர் நடுக்கமடைந்தார். ஆதலால், உடனே அவர் தமதூரில் ஓராடுகூடக் கிடையாதென்றுஞ் சித்தலைத் துர்க்கத்தின் கம்பளியால் அஃதானதென்றுஞ் சொன்னார். நானோ வரியை யேற்று மெண்ணத்தாலன்றி வேறெண்ணத்தாலேயே அக்கம்பளியைப் பார்த்தேன். நான் மைசூரைவிட்டு நீங்கிய பிறகு அது போன்றதொரு கம்பளியைக் காணவில்லை. மிக உழைக்கும் வேளாண் குடிகளிற் பிறந்த பல்லோர்க்கு அங்கு இஃதொன்றே சிறந்த ஆடை. கதிரவனின் கொடுமையினின்றுங் காத்துக்கொள்ள இஃதொன்றையே அக்குடிகள் மார்புமீதும் தலைமீதும் போட்டுக்கொள்வார்கள்; மழை பெய்யுங்கால் இஃதொன்றினாலேயே அவர்கள் தம்மை மூடிக்கொள்வார்கள்; உறங்குங்கால் இஃதொன்றினாலேயே தங்களைப் போர்த்திக்கொள்வார்கள். ஏழையினின்றும் பணக்காரனைக்கண்டு பிடிப்பது அவனவனணிந்துள்ள கம்பளியின் மென்மையாலும் நயத்தாலுந்தான். பாராமஹாலில் கிருஷிகர்களையும் ஆடு மேய்ப்போரையும் இம்மாசற்ற ஆடையொன்றில் பல வருஷங்கள் கண்டு வழக்கமானதால், இப்பொழுது இங்கு இதனைக்கண்டவுடன் பழ நட்பினன் ஒருவனைக் கண்டதுபோல் எனக்கிருந்தது. அதனாற்றான் இதனை ஊன்றி நோக்கினேன் இதை யணிந்திருந்தவரின்பால் என் மனம் இழுக்கப்பட்டது நான் விட்டுவந்த ஊரின் நினைவு எனக்கு வந்ததோடு, இனி அவ்வூரையும் அவ்வூர் நண்பரையுங் காணக் கிடைக்குமோ

என்ற துயரந்ததும்பிய எண்ணமுண்டானது இப்போர்வையைப் பார்த்த மாத்திரத்தாலாகும். எனது மேசை இச்சமயம் வந்து சேர்ந்ததால் இப் பெரியாரிடத்துப் பேச்சை இவ்வளவில் நிறுத்திக்கொண்டு, என் வேலையைப் பார்க்கத் தொடங்கினேன்.

நேற்றிரவு நான் சிறிதுந் தூங்க முடியாதபடி குளிராயிருந்தது. நான் படுக்கைவிட்டெழுந்து என்னுடைகளையணிந்து மீண்டும் படுக்கை சென்றேன். ஆனால், வெப்பந் தருந் துணியொன்றுமில்லாததால் இரவிற் பெரும்பாலும் நடுக்கத்துடன் விழித்துக்கொண்டு கிடந்தேன்.

இன்னொரு நாள் நான் பிறிதோரிடத்திற்குச் சென்றேன். அங்கு எவ்விடத்தில் என் கூடாரம் அடிக்கப்பட வேண்டுமோ அவ்விடத்தில் மூங்கிலாலும் பூண்டுகளாலும் அறுபது அடி தூரமும் எட்டடி யுயரமுமுள்ள ஓரறை அமைக்கப்பட்டிருந்தது. பன்னிரண்டு ஆட்களிடம் இரண்டு நாள் வேலைவாங்கி அவ்வறையை அவ்வூரின் பெரும்பண்ணைக்காரர் ஒருவர் அமைத்திருந்தாரென்பது தெரிய வந்தது. நான் அதிற் புக மறுத்ததைக்கண்டு அவர் மிகவும் வருந்தினார். பகலில் மரங்களின் நிழலிலும், இரவில் எனது படக்குடிலிலுந் தங்கவே நான் விரும்பினேன். அவரது புதல்வன் கையில் ஒரு கமண்டலம் பாலும் ஒரு கோழியுங்கொண்டு வந்து என்னிடங் காத்துநின்றான். முன்காலத்தில் ஐரோப்பாவில் இருந்தது போலவே, இப்பொழுது இந்தியாவில், ஜில்லா பராமரிப்புச் செய்பவர்கள் தங்கள் சுற்றுப்பிரயாண காலத்திற் குடிகளின் ஆதரவில் உண்டு வாழ்வது வழக்கம். இவ்வாறுண்டாகும் செலவையும், சிலகால் அதற்கு மேலும்,

வரித்தொகையிலிருந்து கழித்துக் கொள்வதும் வழக்கம். ஆனால், நான் அப் பண்ணைக்காரரைப் பார்த்து, அவர்கட்ட வேண்டிய வரி முழுதுங் கட்டும்படி நான் செய்யப்போவதால் பாலுக்குங் கோழிக்கும் பணங்கொடுக்காமல் வாங்கிக் கொள்ள மாட்டேனென்றும் பந்தரமைத்த வேலையாட்களுக்குக் கூலி கொடுக்கப்படவில்லை யாதலால் அதனுட் புகமாட்டேனென்றுங் கூறிவிட்டேன். வேலையாட்களுக்கு நான் கூலி கொடுத்த பிறகுதான், என் கச்சேரிக் கணக்கரை உள்ளேபுக அனுமதிப்பேன் என்றுங் கூறிவிட்டேன். நான் மெய்யாகத்தான் பேசுகிறேனென்பதைத் தெளிவிக்க எவ்வளவு நேரமாயிற்று, தெரியுமா?"

இன்னும் விரிவாக மன்ரோவின் கன்னட வாழ்க்கையைப்பற்றிச் சிலர் அறிய அவாவக்கூடுமாகலின், ஈண்டு விவரணமாகச் சிறிது சொல்லுவாம். ஒவ்வொரு நாளும் பொழுது விடியச் சற்றுமுன் எழுந்து, ஏழுமணிவரையில் வெறுந் தலையுடன் அவர் வெளியே உலாவப் போவர். குடிகள் யாதேனும் ஒரு போக்கு வைத்துக்கொண்டு வழியில் வந்து சேர்ந்துகொள்வாராதலின், அவர்களுடன் பேசிக்கொண்டே உலாவிவருவர். ஏழுமணிக்குக் காலை யுண்டி கொள்வர். அக்காலை, நிரம்பத் தேநீரும் குழந்தைகளைப்போல அதிகமாகச் சர்க்கரையு முட்கொள்வர். இஃதானதும், தமது காரியஸ்தர்களுக்கு ஆவன கூறி உத்தியோகசாலைக்கு அனுப்புவர். அதன்பின் சொந்தத் தபால்களையும் உத்தியோகத் தபால்களையு மெழுதி முடிப்பர். அதற்குள்ளாக, பலர் வீட்டில் வந்து காத்திருப்பர். அவர்களுக்குத் தரிசனங் கொடுப்பது அடுத்தவேலை. அவர்களுடைய வழக்குகளை வாசாமுகத்தால் அனேகமாகத் தீர்த்து விடுவர்; எது தவறு எது

தவறன்று என்று கண்டுபிடிக்கக் கூடிய அபாரசக்தி அவரிடம் இயல்பாக இருந்ததால், அவர் சொல்லுந் தீர்ப்புக்கிணங்கியே இரு திறத்தாருஞ் செல்வர். ஆனல் கடினமான பெரிய விஷயங்களை இவ்வாறு முடிவு செய்துவிடாமல், கணக்கரைச் சாட்சியங்களெல்லாவற்றையும் எழுதிக்கொள்ளச் செய்து, தனித்திருக்குங்கால் ஆய்ந்து பார்த்து முடிவு சொல்வர். அம்முடிவுகளில் ஒன்றுகூட அவர் பிழைபட்டார் என்பதைக் காட்டாது.

இங்ஙனம் காலை ஏழுமணியிலிருந்து மாலை நாலரைமணி வரையில் வேலை பார்த்தபிறகு, மன்றோ உண்ணச்செல்லு முன் ஆடை மாற்றுவார். ஆடை யணிந்துகொள்ளும் நேரத்தைக்கூட வீணுக்க எண்ணமில்லாமல், யாரேனும் ஒரு குமாஸ்தாவைக்கொண்டு மறு தபாலில் வந்த கடிதங் களையோ ஏதேனும் புத்தகத்தையோ படிக்கச்சொல்லிக் கேட்பர். சாப்பாடானதுமுதல் எட்டு மணி முடிய, உற்சாக சம்பாஷணையிலோ நூல் பயிலுமின்பத்திலோ கழிப்பர். எட்டடித்ததும், கச்சேரிக்குப் புறப்பட்டுப் போய் நள்ளிரவு வரை அங்கிருந்து வழக்குகளை விசாரிப்பர்.

இப் பெரியார் தமது வாழ்நாளில் எந்தக் காலத்தும் ஆடைகளால் அலங்கரித்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்தவரல்லர். ஆனல், கன்னடத்தில் அவர் வாழ்ந்த காலத்தில், அவரது ஆடம்பர வெறுப்பு விபரீதமாய் விட்டது. அவர் அங்கு அணிந்துவந்த ஆடைகள் அற்ப மாயுங் கோலக் கேடாயு மிருந்தன. இதனல், அவர் தம்மை விடுத்துப் பொது மக்களுக்கும் அரசாங்கத்திற்குஞ் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வதிலேயே கண்ணுங் கருத்து மாயிருந்தார் என்பது விளங்கும்.

அவர் தம்மைவிடுத்துப் பொது விஷயங்களில் ஆர்வங் காட்டாதிருந்தால் கன்னடத்தில் கலமுண்டாயிருக்காதென்பது, பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்னிருந்த கன்னட நிலைமையை யறிவோர்க்கு நன்கு விளங்கும். ஹைதர் காலந் தொட்டு வரி ஒன்றுக்குமே லொன்று அதிகப்பட்டே வந்தது. ஏனைய இடங்களிற் செய்யக்கூடிய போர்களுக்காகுஞ் செலவுக்குரிய பணத்தை அளவுசங்கையின்றி எடுத்துக்கொள்ள உதவும் மூலதனமென்று நாடு ஹைதரால் மதிக்கப்பட்டது. வரிகளை எத்துணை உயர்த்தக்கூடுமென்றும், சாகுபடியிற் குறைவின்றிக் குடிகளிடமிருந்து எவ்வளவு கவரக்கூடுமென்றும் செய்த தொடர்ச்சியான சோதனைகளே ஹைதரின் பிரதிநிதிகளின் அரசாட்சி என்று சுருக்கமாக மன்ரோ ஓரிடத்திற் கூறியுள்ளார். திப்புகாலத்தில், காரியங்கள் இன்னும் மோசமாய்விட்டன. கரையோரமிருந்த அனேக முக்கிய நகரங்களை யழித்து, நகரத்தாரை ஜமலாபாத் போன்ற சுகமற்ற இடங்களுக்கு ஓடிப்போகும்படி செய்தார் திப்பு. ஓரிரவு, குழந்தைகளும் பெண்டிருமுள்படக் கிறிஸ்துவ மக்கள் அறுபதினாயிரவரைப் பிடித்து மைசூருக் கனுப்பிவிட்டார். அவர் அன்னிய வியாபாரத்தை அடியோடொழித்தார். அவரதரசாட்சியில் எல்லா இலாகாக்களிலும் கைக்கூலி வாங்குவோரும் குழப்பஞ் செய்வோரும் பிழைக்கும்படி விட்டுவிட்டார். அவரது அளவற்ற பணப்பறிமுதலால் நிலங்களை விட்டுவிட்டுக் குடிகளோடினவுடன், அந்நிலங்களை அங்கிருந்தோரைக் கொண்டே பயிரிடும்படி கட்டளையிட்டார். தங்கியிருந்தோர் தங்கள் தங்கள் நிலங்களைச் சாகுபடி செய்வதற்கு வேண்டிய கருவிகளையும் மாடுகளையுமே வைத்திருந்தாராக

தின், அவர்கள் வருந்தியதோடல்லாமல் முடிவில் அரசிறையுங் குறைந்து போய்விட்டது.

நிற்க, திப்புசுல்தானைப்பற்றி மன்ரோ தமது தந்தையாருக் கெழுதி யனுப்பிய செய்தியைக் காண்பாம்:— "அவரது தகப்பனுக்கிருந்த சாமர்த்தியம் திப்புவுக்கு இல்லை. சண்டையில் முறியடிக்கப்படும் வரையில், படைகளுக்குப் பணத்தைக் காலத்திற் கொடுத்து, அவற்றை நன்னிலையில் வைத்திருந்து, தமது அரசிறை வருமானங்களை ஒழுங்கான முறையில் திப்பு வைத்திருந்தார். ஆனால், தோல்வி யடைந்தபிறகோ சில சமயங்களில் அவர் பித்துப் பிடித்துத் திரிந்தார் என்றுகூடச் சொல்லப்பட்டார். பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்ற எண்ணம் ஒன்றே அவரைக் குடிகொண்டிருந்தது போலும்! அது நிறைவேற வேண்டுமென்று அவர் கருதினாரே யன்றி, எவ்வழியால் என்று அவர் சிந்தித்துப் பார்த்தாரல்லர். எதை யெடுத்தாலும் புதிதாகத் தம்மால் அது கண்டு பிடிக்கப்பட்டதாக இருக்க வேண்டுமென்ற அவரது விருப்பம் அவரது குண விசேஷத்துட் டலைசிறந்தது. சில வருஷங்களுக்கு முன்னால், தமது இராஜ்ஜியத்திலிருந்த எல்லாக் கோட்டைகளுக்கும் அவர் புதுப்பெயர் புனைந்தார். இந்திய வருஷங்களுக்கும் அராபிய மாதங்களுக்கும் புதுப்பெயர் கொடுத்தார். பழமையான நீட்டலளவை முகத்தலளவை எடுத்தலளவைக் கருவிகளையும் நாணயங்களையும் போக்கிப் புதுமையான கருவிகளையும் நாணயங்களையும் அமைப்பித்தார். அரசிறையையும் படையையும் புது முறையாக அமைத்து உத்தியோகஸ்தர்களுக்காகப் புதுச் சட்டங்களுஞ் செய்தார். 1792-ல் அடைந்த தோல்விக்குப்பின்னரும் விருந்தாக்கும் விஷயத்தில்

ஆர்வம், குறைவதற்குப் பதிலாக, அதிகமாய்விட்டது. அரசாங்க உத்தியோகத் தலைவர்களுக்கேயன்றிக் கீழ் உத்தியோகஸ்தர்களுக்கும், பூந்தோட்ட வேலைக்காரர்களுக்கும், வீட்டு வேலைக்காரர்களுக்கும் இன்னும் அனேக சட்ட திட்டங்கள் ஏற்படுத்தினார். அவர் தமது இராஜ்ஜிய பரிபாலனத்தை ஏழு பகுதிப்படுத்தியிருந்தார்; அவற்றுளொன்று, ஒரு போர்க் கப்பல்கூட இல்லாத கப்பலிலாகா. இராஜ்ஜியத்தை முப்பத்தேழு பெரும் பிரிவுகளாகவும் ஆயிரத்திருபத்தைந்து சிறு பிரிவுகளாகவும் பிரித்து, முன்னவற்றில் திவான்களையும் பின்னவற்றில் தாசில்தார்களையு நியமித்தார். அரசிறை இலாகா ஆட்களை அதிகப்படியாக வேறு நியமித்தார். கெடுதிகளைப்போக்க வேறு வழியறியாது உத்தியோகஸ்தர்களை அதிகப்படுத்திக் கொண்டே இருந்தார். ஒருவர் போன இடத்திற்கு இருவர் போய்க் கொள்ளையடிக்க விட்டுவிட்டார். அரசிறைச் சேதம் முன்னால் ஐந்தில் ஒரு பங்கா யிருந்தது இப்பொழுது படிக்குப் பாதியாகிவிட்டது.

திப்பு பிறரிடம் அதிகமாகச் சந்தேகங் கொள்பவரும் மக்களைக் கொடூரமாக நடத்துபவருமாக இருந்ததால், அவரிறந்ததற்காக மக்கள் வருந்தினாரல்லர். அவரது முறையில், கொடூரமும் ஏமாற்றமுமே முன்னின்றன. அதே சமயத்தில் எப்படி ஏமாற்றலாம் அன்றித் தகர்த்தெறியலாம் என்று ஆலோசியாது, அவர் வாக்குக் கொடுப்பதேர் கட்டுக்குள்ளாவதோ இல்லை. ஆதாரமற்ற சந்தேகங்களைக் கொண்டும் அவர் விதித்த கொடூர தண்டனைகளால் நாட்டின் ஜனங்களது கடிதப் போக்குவரவு நின்றுவிட்டது. அவரது நெருங்கிய உறவினரும் பயந்துபோய்க் கடிதப்போக்கு

வரவை நிறுத்தி, உடல் நலம் அனைய விஷயங்களைப்பற்றி சீட்டுகள்மூலம் ஒருவர்க்கொருவர் தெரிவித்துக்கொண்டிருந்தனர். சற்று நேரந்தானும் சும்மா இருக்கவொட்டாத முயற்சியுள்ள மனம் அவர்பாலிருந்ததேனும், அதை நல்ல வழியிற் றிருப்பாதது அவர்மீது குற்றம். தினந்தோறும் பல மணி நேரம் அவர் ஒற்றர்களுக்கும், தளகர்த்தர்களுக்கும், நியாய வாதிகளுக்குங் கடித மெழுதுவார். இனி நடக்கப் போகும் வேலையியர்வுகளைப்பற்றியும், தூதுக்களைப்பற்றியும், கோட்டை கொத்தளச் சீர்திருத்தங்களைப் பற்றியும், முக்கிய உத்தியோகஸ்தர்களின் மணங்களைப் பற்றியும், தமக்கு வேண்டிய விலைமாதரைப்பற்றியும், சிறைசெய்யவேண்டியவரைப்பற்றியும், தலையறுக்க வேண்டியவரைப்பற்றியும், பற்பல கடிதங்கள் எழுதுவார். மேலும், கையெழுத்துப் போடுவதற்கே அவருக்குப் பல மணி வேண்டும்; பலதிறப்பட்ட அதிகாரிகளுக் கிடையே போய் வரும் ஆயிரக் கணக்கான கடிதங்களுக்கெல்லாம் அவர் கையெழுத்துப் போடுவது வழக்கம். அக்கடிதங்கள் அவர்முன் கொண்டுவரப்படுஞ் சில சமயங்களில் வேறு விஷயங்களைப்பற்றி அவர் கவனித்துக் கொண்டிருப்பார். ஆதலால், மாதக் கணக்காகக் கடிதங்கள் கட்டிப் போடப் பட்டுக் கிடக்கும். இறுதியிற் கையெழுத்தானவுடன் அக்கடிதங்கள் போய்ச் சேருமுன், நிலைமை வேறுபட்டு உத்தரவுகள் பயனின்றிப்போம். கணக்குகளைப் பரிசீலனைக்காகக் கொண்டுவரும் உத்தியோகஸ்தர்களின் கணக்கு சரியாகப் பார்வையிடப் படுவதில்லை. கணக்குகளைப்பற்றி யவர்களை யொன்றுங் கேட்காமல், அவர்களை விருந்துக்கழைத்து, உட்டும்படி தாம் உத்திரவு செய்த மருதிகளைக் கட்டி விட்டார்களாவென்றும், முறை தவறாமல் தொழுகை

நடக்கின்றதாவென்றும், ஜில்லாவின் முஸ்லீம் ஆட்டோவை யெவ்வளவென்றும், திப்பு கேட்டு அவர்களை அனுப்பி விடுவார். அதனால், அவர்கள் தாங்கள் அதிகாரஞ் செலுத்தும் ஊருக்குச் சென்றதும் கணக்கைப்பற்றிக் கவலைப் படாது மீண்டுங் கொள்ளையடிக்க ஆரம்பித்து விடுவர்".

இத்தகைய கொடுமையின்கீழ் அல்லற்பட்ட கன்னட தேசத்திற்கு 1899 ஜூலையில் சென்ற மன்ரோ ஒரு வருஷத்திற்குள் அத் தேசத்தைப் பிரிட்டிஷ் பேரரசின் கீழுள்ள மற்றத் தேசங்களைப்போல் அமைதிவழி நிறுத்தினார். ஊரெல்லாம் கொள்ளையடித்துத் திரிந்த கூட்டத்தாரை வழிக்குக்கொண்டு வந்தார். வரி வசூலில் நியாயங் கோரு தென்று குடிகளுக்குச் சொல்லித் தெளிவுபடுத்தினார். அதி காரிகள் கொடூரமாக நடத்தாமலிருப்பதற்கு வேண்டிய பாதுகாப்புகள் செய்வதாக வாக்களித்தார். மக்களும் மகிழ்ந்து, பொறுத்து வேலை செய்யத் தொடங்கினர். புதிய புதிய கிராமங்களுண்டாயின. காடு மேடுகளிலும் பயிர் செய்தல் மெதுவாகப் பரவிற்று.

மன்ரோ கன்னடத்திற்காகச் சிபார்சு செய்த முறை முக்கிய கொள்கைகளால், இரயத்துவாரி என்றே சொல்ல வேண்டும்; அதாவது உண்மையாக நிலத்துக்குரியவர்களிடம் குத்தகைக்காரர்கள் போன்ற தரகர்களில்லாமல் அவரவர் கொடுக்கவேண்டிய வரிக்கு ஒப்பந்தம் செய்து கொண்டதே இம்முறையாகு மென்பது. எனினும் பாராமஹாலிற் செய்யப்பட்ட திட்டத்தினின்றும் இது இரண்டு விஷயங்களில் வேறுபட்டது. அவையாவன:— பெரும்பாலும் உண்மை விவசாயியிட மல்லாமல் நிலவுரிமையாளனிடம் ஒப்பந்தம்

செய்யப்பட்ட தென்பதும், ஒவ்வொரு தனிப்பட்ட நிலத்தின்பேரிலல்லாமல் ஒவ்வொரு நிலத்தொகுதியின் பேரில் வரி விதிக்கப்பட்ட தென்பதுமாம். மற்ற விஷயங்களிற் போல், இவ்விஷயத்திலும், மன்றோ நாட்டிலுள்ள ஏற்பாடுகளைக் கண்டவாறே கொண்டும், அவசியம் மாற்ற வேண்டாதவற்றுள் யாதொரு மாறுபாடு புகுத்தாமலும் இருக்கவேண்டுமென்ற தமது நெறியைக் கையாண்டார்.

## ஐந்தாம் அத்தியாயம்

---

### ஒப்புவிக்கப்பட்ட ஜில்லாக்களின் கலெக்டர்

கன்னட தேசத்தில் மன்றோ செய்த வேலைகள் பெரிதும் பாராட்டப்பட்டன. ஆச்சரியப்படத் தகுந்த வளவு குறைந்த காலத்திலே குற்றங்களையும் குழப்பத்தையும் போக்கி, நாட்டின் தாறுமாறான அமைதி யில்லாத் தன்மையை யகற்றி, மன்றோ நாட்டை யொழுங்கு படுத்தினர். அதனால், அவருக்குப் பதிலாக அத்தேசத்திற்கு வேறொருவரைத் தகுந்தவராக அமைப்பது அருமை. ஆனால் நைசாமால் ஒப்புவிக்கப்பட்ட ஜில்லாக்களின் நிர்வாகம் கன்னட தேசத்தைவிடக் குறைந்த கஷ்டமுடையதன்று. ஆதலால், இந்த ஜில்லாக்களுக்கும் மன்றோவின் சாமர்த்திய முள்ள ஒருவர் வேண்டியதாயிருந்தது. இந் நிலையில், மன்றோ நீண்டநாளாக வேலைமாற்றம் வேண்டு மென்று கேட்டுக்கொண்டு வந்ததோடு நிற்காமல், ஒப்புவிக்கப்பட்ட ஜில்லாக்களுக்குத் தம்மை மாற்றவேண்டு மென்று கேட்டுக் கொண்டமையால் அவரை அங்ஙனமே மாற்றிவிட்டார்கள். கன்னட தேசம் அவருக்குப்பின் இரண்டாகப் பிரிக்கப்பட்டு இரண்டு கலெக்டர்களின் அதிகாரத்தில் வைக்கப்பட்டது.

ஒப்புவிக்கப்பட்ட ஜில்லாக்க ளென்பதுதா னென்னை ஹைதராபாத் நைசாமோடு பிரிட்டிஷ் அரசாங்கம் செய்து கொண்ட ஒருடன்படிக்கைப்படி, பிரிட்டிஷார் நைசாமுடைய

பிரதேசங்களைப் படை யெடுப்பினின்றும் பாதுகாக்க ஒப்புக் கொண்டார்கள். அதன்படி ஹைதராபாத்தில் ஒரு பிரிட்டிஷ் படையை வைத்திருக்க நேர்ந்தது. இப்படையின் செலவுக் கீடாக 27,000 சதுரமைல் விஸ்தீரணமுள்ள சில ஜில்லாக் களை நைசாம், பிரிட்டிஷாருக்கு, ஒப்புவித்துவிட்டார். அந்த ஜில்லாக்கள் பெல்லாரி, கடப்பை, கர்னூல் என்பனவாம். இவைதாம் ஒப்புவிக்கப்பட்ட ஜில்லாக்கள் என்று இப்பொழு தும் வழங்கி வருகின்றன. இப்பிரதேசத்திற்குச் சென்று மன்றோ 1800ஆம் நவம்பரில் வேலையை ஒப்புக்கொண்டார்.

அக் காலத்தில் அந்த ஜில்லாக்களின் நிலைமை யெவ்வா றிருந்தது? ஹைதர் அலி, திப்பு இவர்களின் முப்பத்திரண்டு வருஷ கொடுங்கோன்மையால் கன்னடதேசம் கலங்கியதைப் போலவே, அடுத்தடுத்த படையெடுப்புக்களாலும் உட்கலகங் களாலும் இருநூறு வருஷங்களுக் கதிகமாக ஒப்புவிக்கப் பட்ட ஜில்லாக்கள் ஒற்கமடைந்திருந்தன. இந்த ஜில்லாக்கள் விஜயநகர இந்து அரசாட்சியின்கீழ், பதினைன்காம் நூற் றுண்டி னிடைப்பகுதி முதல் பதினாறும் நூற்றுண்டின் இடைப்பகுதி முடிய, இருந்துள்ளன. அக்காலத்தில் விஜயநகர அரசர்களது காணியாட்சி முறை நன்றாகத்தா னிருந்துள்ளது. ஆனால், 1564-ல் இவ்வரசாங்கம் பீஜப்பூர், கோலுகொண்டா, தவளபட்டணம், பீரார் முதலிய முகம் மதிய நாட்டுத் தலைவர்களால் முடிவடைந்தது. அடையவே, பாளையக்காரர் என் சொல்லப்பட்ட சிறு பிரதானிகள் கையில் இந்த ஜில்லாக்கள் அகப்பட்டன. 1680-ல் இவை சிவாஜியாற் றாக்கப்பட்டு இவற்றுட் சில அவராற் கொள் ளப்பட்டன. அதன்பின், ஔரங்கசிப்பால் கவரப்பட்டு, மறுபடி தெக்கண நைசாம் ஆட்சியில் வந்து சேர்ந்தன.

1778ல் ஹைதர் ஆலியின் வெற்றியால் மைசூராசாங்கத்தோடு சேர்க்கப்பட்டன. 1792ல் பெரும்பாகமும் 1799ல் எஞ்சியிருந்த பாகமும் நைசாமுக்கு மீண்டுங் கிடைத்தன. நைசாம் நிர்வாகம் ஊழலாக விருந்தமையால், அரசாங்கத்தை யெதிர்த்துக் கொண்டிருந்த பாளையக்காரர்கள் உக்கிரங்குக் கலகம் விளைத்துக்கொண்டிருந்தார்கள். அரசாண்டு கொண்டிருந்த மன்னனின் ஆற்றற் குறைவால், நாளுக்குநாள் இவர்கள் அதிகாரத்தையும் பிரதேசத்தையும் பெற்றிருந்தார்கள். நைசாம் காலத்தில், அதிகாரிகளுடைய சோம்பலாலும் அசக்தியாலும் பாளையக்காரர்களுடைய கொண்டாட்டம் பெருத்துவிட்டது. இது ஒப்புவிக்கப்பட்ட ஜில்லாக்களைப் பிடித்த சனியன்களு ளொன்று. மற்றொன்று, சம்பளங் கிடைக்கப் பெறாத படையினர் செய்த தீமை. நைசாம் காலத்தில், விதை விதைக்குஞ் சமயத்தில் கிராமத்தாரிட மிருந்து வசூலித்துக் கொள்ளும்படி ஒரு கலகக்காரச் சேனை அவிழ்த்து விடப்பட்டது. அச்சேனை ஆடுமாடுகளைக் கவர்ந்து சென்று விற்றதுடன், அகப்பட்ட மனிதரை யெல்லாஞ் சித்திரவதை செய்து, பணத்தை யபகரித்துக்கொண்டு ஓடினவர்களின் வீடுகளையுங் கடைகளையுஞ் சூறையாடிற்று. இக்காரணங்களால், வழக்கமாகச் செய்யப்படுஞ் சாகுபடி செய்யப்படவில்லை.

இவ்விரண்டு தொல்லைகளையும் போக்கவல்ல வழிகளை மன்றோ ஆராய்ந்து வந்தார். ஒருவருஷத்திற்குள்ளாக, காம்பெல் என்பவரின் உதவியால், பாளையக்காரர்களில் அதிக்க மிக்கவரும் கலகம் பெரிதும் விளைவிப்போருமாகிய பலரை இந்த ஜில்லாக்களிலிருந்து மன்றோ வெளியேற்றினார். வெளியேற்றப்படாத பாளையக்காரர்களைக் கலகம் விளைவிக்கா

திருக்கும்படியும், குடிகளிடமிருந்து அக்கிரமமான பணம் வசூலிக்கா திருக்கும்படியும், மன்றோ செய்து வைத்தார். நைசாமுடைய சேனைகளும் வெளியேற்றப்பட்டன.

ஊரை அமைதிப்படுத்திய சமயத்திலேயே அரசிறைத் திட்டத்தையும் மன்றோ ஒழுங்குபடுத்தினார். கன்னட தேசத்திற் செய்யப்பட்ட திட்டத்திற்கும் ஒப்புவிக்கப்பட்ட ஜில்லாக்களிற் செய்யப்பட்ட திட்டத்திற்கும் வேற்றுமை யுண்டு. கன்னடத்தில், நிலத்துரிமை மக்களுக்குண்டென்று கருதப்பட்டமையாலும், ஒப்புவிக்கப்பட்ட ஜில்லாக்களில் நிலத்துரிமை மக்களுக்கின்றி அரசாங்கத்திற்கே யுண்டென்று எண்ணப் பட்டமையாலும் வந்ததே இவ்வேற்றுமை. ஜில்லாக்களிலுள்ள நிலங்களை அளந்து தீர்வை விதிக்க மன்றோ நான்கு உத்தியோகஸ்தர்களுதவியால் முற்பட்டார். இங்கு அனுசரிக்கப்பட்ட முறையும் இரயத்துவாரியேயானாலும், கன்னடத்தில் நிலத்தின் தகுதியின் பேரில் வரிவிதிக்கப் பட்டதுபோலன்றி இங்கு ஒவ்வொரு நிலத்தையும் அளந்து நிலத்தினளவிற்கும் பெற்றிக்கும் ஏற்ப வரிவிதிக்கப்பட்டது. 1802 முதல் மூன்று வருஷங்களுக்குள் நிலங்கள் அளவிடப் பட்டு விட்டன. 1804-இலிருந்து 1806-க்குள்ளாக, நிலங்களின் தராதரம் நிச்சயிக்கப்பட்டுத் தீர்வைகளும் விதிக்கப் பட்டன. இவ்வளவீடையும் தீர்வைவிதிப்பும் பருமட்டி யானவையே யாயினும், அதுவரை இந்தியாவிற் செய்யப்பட் டிருந்த எல்லாவற்றுள்ளும் இவையே தலைசிறந்தன. இவை மன்றோ அரசிறைநிர்வாக நிபுணர் என்ற பெயரை அவர்க்கு நிலை நிறுத்தியதோடல்லாமல், பின்னுஞ் செய்யப்படும் எல்லா அரசிறைத் திட்டங்களுக்கும் அடிப்படையாயிருந்து எடுத்துக் காட்டாக விளங்கும் ஆற்றல் பெற்றிருக்கின்றன.

ஒப்புவிக்கப்பட்ட ஜில்லாக்களில் சுற்றிப்பார்த்து வேலை செய்த விவரணத்தை மன்ரோ இரீடுதுரைக்கு ஒருகடிதத்தில் வரைந்துள்ளார். அது வருமாறு:— "நான் என்னேரத்தை யெப்படிக் கழிக்கின்றேன் என்று தங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசிய மில்லை; சுற்றிச்செல்லுங் கலெக்டரின் வாழ்க்கை எத்தகைத்தென்பது தங்களுக்கே தெரியும். பாரமஹாலில் தாங்கள் கலெக்டராயிருந்து நடத்திய மனோஹரமான விசாரணைகள் ஒன்றுமிங்கில்லாமல், எல்லாத் தொழும்பிலும் நாய் படாப்பாடு பட்டு வருகின்றேன். எனது வேலை மிகவுமதிகமாக இருப்பதால் சிந்தனை செய்வதற்கே எனக்கு நேரமில்லை. அமில்தாரர்களுடைய கடிதங்களும் முறையீடுகளும் அடிக்கடி எனது நாளை அடைவே கவர்ந்து விடுகின்றன. மற்ற நாட்களில் ஒவ்வொரு தினமும் ஒற்றர்களை விசாரிப்பதிலும், ஒளிந்து கொண்டுள்ள பாளையக்காரர்களையும் கள்ளர்களையும் பிடிப்பதற்கு ஆட்களையனுப்புவதிலும் இரண்டு மணி நேரம் செலவாகின்றது. மூன்று குதிரைப் பட்டாளங்களுக்கும், துப்பாக்கி தூக்கிச் செல்லும் எருதுகளுக்கும் வேண்டிய தானியத்தைச் சேகரித்துக் கொடுப்பதும் என் கடமையாகவுள்ளது. நான் சோம்பேறியல்லன் என்று காட்ட ஒவ்வொரு மாதமும் ரெவினியூ போர்டுக்குக் குறிப்பு வேறு எழுதியனுப்ப வேண்டியிருக்கிறது. சுமார் ஆயிரமைல் தூரம் நான் வருஷா வருஷம் சுற்றிப்பார்க்க வேண்டியவனா யுள்ளேன். குதிரை மீதேறிச் செல்லும் நேரமொன்றே எனது நேரம் என்று சொல்லிக் கொள்ளக்கூடியதாயுள்ளது; மற்ற நேரங்களில் வேலை ஓய்வொழி வில்லாமல் உண்டு."

திருக்கும்படியும், குடிகளிடமிருந்து அக்கிரமமான பணம் வசூலிக்கா திருக்கும்படியும், மன்ரோ செய்துவைத்தார். சைசாமுடைய சேனைகளும் வெளியேற்றப்பட்டன.

ஊரை அமைதிப்படுத்திய சமயத்திலேயே அரசிறைத் திட்டத்தையும் மன்ரோ ஒழுங்குபடுத்தினர். கன்னட தேசத்திற் செய்யப்பட்ட திட்டத்திற்கும் ஒப்புவிக்கப்பட்ட ஜில்லாக்களிற் செய்யப்பட்ட திட்டத்திற்கும் வேற்றுமை யுண்டு. கன்னடத்தில், நிலத்துரிமை மக்களுக்குண்டென்று கருதப்பட்டமையாலும், ஒப்புவிக்கப்பட்ட ஜில்லாக்களில் நிலத்துரிமை மக்களுக்கின்றி அரசாங்கத்திற்கே யுண்டென் றெண்ணப்பட்டமையாலும் வந்ததே இவ்வேற்றுமை. ஜில்லாக்களிலுள்ள நிலங்களை அளந்து தீர்வை விதிக்க மன்ரோ நான்கு உத்தியோகஸ்தர்களுதவியால் முறபட்டார். இங்கு அனுசரிக்கப்பட்ட முறையும் இரயத்துவாரியேயாகு லும், கன்னடத்தில் நிலத்தொகுதியின் பேரில் வரிவிதிக்கப் பட்டதுபோலன்றி இங்கு ஒவ்வொரு நிலத்தையு மளந்து நிலத்தினளவிற்கும் பெற்றிக்கு மேற்ப வரிவிதிக்கப்பட்டது. 1802 முதல் மூன்று வருஷங்களுக்குள் நிலங்கள் அளவிடப் பட்டு விட்டன. 1804-இலிருந்து 1806-க்குள்ளாக, நிலங் களின் தராதரம் நிச்சயிக்கப்பட்டுத் தீர்வைகளும் விதிக்கப் பட்டன. இவ்வளவிடையும் தீர்வைவிகிதமும் பருப்படியான வையே யாயினும், அதுவரை இந்தியாவிற் செய்யப்பட்டி ருந்த எல்லாவற்றினும் இவையே தலைசிறந்தன. இவை மன்ரோ அரசிறைநிர்வாக நிபுணர் என்ற பெயரை அவர்க்கு நிலை நிறுத்தியதோடல்லாமல், பின்னுற் செய்யப்படும் எல்லா அரசிறைத் திட்டங்களுக்கும் அடிப்படையாயிருந்து எடுத் துக்காட்டாக விளங்கும் ஆற்றல் பெற்றிருக்கின்றன.

ஒப்புவிக்கப்பட்ட ஜில்லாக்களில் சுற்றிப்பார்த்து வேலை செய்த விவரணத்தை மன்றோ இரீடு துரைக்கு ஒரு கடிதத்தில் வரைந்துள்ளார். அது வருமாறு:—"நான் என் நேரத்தை யெப்படிக் கழிக்கின்றேன் என்று தங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை; சுற்றிச் செல்லுங் கலெக்டரின் வாழ்க்கை எத்தகைத்தென்பது தங்களுக்கே தெரியும். பாரா மஹாலில் தாங்கள் கலெக்டராயிருந்து நடத்திய மனோஹரமான விசாரணைகள் ஒன்றுமிங்கில்லாமல், எல்லாத் தொழும்பிலும் நாய்படாப்பாடு பட்டுவருகின்றேன். எனது வேலை மிகவுமதிகமாக இருப்பதால் சிந்தனை செய்வதற்கே எனக்கு நேரமில்லை. அமில்தாரர்களுடைய கடிதங்களும் முறையீடுகளும் அடிக்கடி எனது காலை அடைவே கவர்ந்து விடுகின்றன. மற்ற நாட்களில் ஒவ்வொரு தினமும், ஒற்றர்களை விசாரிப்பதிலும், ஒளிந்து கொண்டுள்ள பாளையக்காரர்களையும் கள்ளர்களையும் பிடிப்பதற்கு ஆட்களையனுப்புவதிலும் இரண்டுமணி நேரம் செலவாகின்றது. மூன்று குதிரைப்பட்டாளங்களுக்கும், துப்பாக்கி தூக்கிச்செல்லும் எருதுகளுக்கும் வேண்டிய தானியத்தைச் சேகரித்துக் கொடுப்பதும் என் கடமையாகவுள்ளது. நான் சோம்பேறியல்லன் என்று காட்ட ஒவ்வொரு மாதமும் ரெவனியூ போர்டுக்குக் குறிப்பு வேறு எழுதியனுப்ப வேண்டியிருக்கிறது. சுமார் ஆயிரமைல் தூரம் நான் வருஷா வருஷம் சுற்றிப்பார்க்க வேண்டியவனாயுள்ளேன். குதிரை மீதேறிச் செல்லும் நேரமொன்றே எனது நேரம் என்று சொல்லிக் கொள்ளக்கூடியதாயுள்ளது; மற்ற நேரங்களில் வேலை ஓய்வொழிவில்லாமல் உண்டு."

ஒப்புவிக்கப்பட்ட ஜில்லாக்களில், அரசிறை வருமானம் அதிகப்பட்டதுபோலவே, மக்கள் நடையிலும் பழக்கத்தி

ளும் திருத்தத்தை யடையலுற்றார்கள். சட்டத்திற்குக் கட்டுப்படாமூர்க்கர்களாகவுங் கொள்ளைக்காரர்களாகவு மிருந்தவர்கள், மன்ரோவின் முயற்சியால், நாகரீகத்திலும், சட்டத்திற்கும் அதிகாரிகளுக்குங் கட்டுப் படுவதிலும், வேறெந்தப் பிரிட்டிஷ் மக்களுக்கும் பின்வாங்காதவர்களானார்கள். அரசிறை எளிதில் வசூலிக்கப்பட்டுவந்தது. ஒவ்வொருவரும் அவரவரது நிலையில் திருப்தியடைந்திருந்தார். இந்நிலையில், மன்ரோ 1807 அக்டோபரில், தமது கலெக்டர் பதவியை விட்டுவிட்டு ஊருக்குத் திரும்ப எண்ணினார். தங்களை விட்டு அவர் பிரியப் போகின்றாரென்று தெரிந்ததும்; மக்கள் எல்லாம் கண்ணீர் விட்டுக் கதறிநின்றார்கள்:

"ஆருயிரின் தாயே! அறத்தின் பெருந்தவமே!
பேரருளின் கண்ணே! பெருமானே!—பாரிடத்தை
யார்காக்கப் போவதுநீ யாங்கென்றார், தம்கண்ணின்
நீர்வார்த்துக் கால்கழுவா நின்று".

# ஆறாம் அத்தியாயம்

## ஐரோப்பாவில் மன்ரோ

**ஊ**ருக்குத் திரும்ப வேண்டுமென்ற எண்ணம் மன்ரோவுக்கு நெடுநாளாகவுண்டு. அதைக்குறித்து அவர் தமது சகோதரிக்கு 1805 ஜூலை 22ல் எழுதியுள்ள கடிதத்தைத் தருதும்:— "முப்பது ஆண்டிற்கு மேலாக ஒருவரையொருவர் காணாமலும், இனிக்காணுவது அரிதாகவும் உள்ள இருவரிடையே நிகழ்ந்துவரும் இக்கடிதப் போக்குவரத்து இறந்தவர்களிடமிருந்து இருப்பவர்களுக்கு வருவதைப் போன்றுள்ளது. நான் நமது வீட்டைப்பற்றி நினைத்து எப்பொழுதாவது உன் கடிதங்களுளொன்றை யெடுத்துப் பார்ப்பேனேயானால், வேறோருலகத்துப் பொருளுடன் பேசுவதுபோல் நான் நினைத்துக்கொள்ளுட்படி நாமிருவரும் காலத்தான் மாறுபட்டிருப்போம். என் நண்பர்களைப்பற்றியும் அவர்களைக்காணாது கழிந்த கணக்கிலா நாட்களைப் பற்றியும் நினைக்கும் பொழுது, யாக்கை நிலையாமை என் மனத்தே நன்கு பதிந்திடும். எந்தச்சமயநூலும் சாத்திர நூலும் விவிலியமும் என்மனத்தில் இவ்வளவு நன்றாக யாக்கை நிலையாமையை அறிவுறுத்தி யிருக்கமாட்டா. இத்தேசத்தில் நான் கழிக்கவேண்டிய நாட்கள் மிகமிக, இவ்வெண்ணங்களும் அடிக்கடி என் மனத்திற்றோன்றுகின்றன. நான் இத்தேசத்தை விட்டுப் பிரியுநாள் அணுகிவிட்டதால்

நான் ஊர் திரும்பு நாளை யெண்ணி யெண்ணி மகிழ்கின்றேன். ஆனால், நான் வகித்துள்ள கீழ்த்தர உத்தியோகத்தை நினைக்குங்கால், இந்தியாவை விட்டு வருத்தத்துடனேயே புறப்பட வேண்டியவனாயுள்ளேன். அங்கு வந்ததும், தனிமையான வாழ்க்கையில் மகிழ்ந்து, வாளா கிடப்பதற்கு வேண்டிய ஆக்கம் என்னிடமிராது. ஆதலால், மீண்டும் இத்தேசத்தை நோக்கியே, கிடைக்குமோ கிடைக்காதோ என்றெதிர் பார்த்திருக்கும் வேலையைக் குறித்து நான் வர வேண்டியிருக்கும்.

என் கண்பார்வை முன்னிருந்தவளவு நன்றாயில்லையாதலால், ஊருக்குத் திரும்பவேண்டுமென்ற என் முடிவு வலுத்துவிட்டது. எனது பேனா முனையை எழுதுவதற்காக ஒழுங்கு படுத்தவேண்டுமேயானால் படக்குடிலின் கதவருகே போய், ஒளியை நாடவேண்டியிருக்கிறது. கொதிக்கும் வெயிலிற் கூடாரத்திற் பல்லாண்டு நான் வாழ்ந்துள்ளதே இதற்குக் காரணமென்று நம்ப முயலுகின்றேன். கதிரவன் கொன்னே யுதித்துச் சென்றானல்லன்; எனது வாழ்நாட் பயிரைப் பெரும்பாலும் மேய்ந்து சென்றுவிட்டான். எனது தலை நரைத்துப் போனதற்கும், கண் மங்கியதற்கும் அவன்றான் காரணம். பயிரை முழுதும் அவன் மேய்ந்துவிடுமுன், எனது சொந்த ஊருக்குத் திரும்பி என் நண்பர்களைக் காணவேண்டும்.”

இரக்கத்தை எழுப்பும் இக்கடிதம் எழுதி இரண்டு வருஷம் ஒன்றரை மாதங் கழிந்தபிறகு, மன்றோ சகோதரிக்குப் பின்வரும் விஷயமடங்கிய கடிதமொன்று எழுதினார்:—

இத்தேசத்தைவிட்டுப் புறப்பட முயன்றுகொண்டு

வருகிறேன். எதிர்பார்த்தபடி வேறெதுவும் நேராவிட்டால்
நான் அக்டோபரிற் கப்பலேறி, மார்ச்சில் இங்கிலாந்து வந்து
சேர்வேன். இன்னும் நாலைந்து வருஷங்கள் இத்தேசத்திலேயே
இருப்பேனே யானால், எனது பொருணிலை இப்பொழுது
இருப்பதை விட இரண்டு மடங்காகும். ஆனால், நான் பெரிய
செலவாளியல்லனாதலால், இதைக் குறித்துக் கவலைப்பட
வில்லை. ஒரு விஷயமாத்திரம் என்னை யுறுத்துகின்றது.
அது, ஊர் திரும்பியதும் யாது செய்வதென்பதே. அங்
குள்ள படையில் எனக்கு யாதோர் அங்கமுமில்லாததால்
அங்கிருந்து செல்லும் படையுடன் என்னை யெங்கு மனுப்ப
மாட்டார்கள். நான் உங்கள் ஊரார்க்குப் புதியவனாக இருப்
பேனாதலால், இராணுவமல்லா மற்ற வேலைகளிலும் எனக்கு
இடங்கிடைக்காது. எனவே, நான் வானத்திற் பறந்து
செல்லும் வானம்பாடியைப் பார்த்துக்கொண்டு, வேளா
ளிளைஞனைப்போல் வயலிற் கிடக்கவேண்டியதுதான். நமது
தாய்தந்தையரைப் பார்க்கவேண்டுமென்று பேரவா
கொண்டவனாக வுள்ளேனாதலின், விரைவில் வந்துசேர்வேன்.
ஆனால், அங்குச்சோம்பேறி வாழ்க்கையில் மனம் பிடிக்காமல்
மீண்டும் இத்தேசத்திற்குத் தொழிலை யுன்னி நான் வ
வேண்டுமென அஞ்சுகின்றேன்."

இவ்வாறு கடிதங்களெழுதி யனுப்பிய மன்றோ 180
எப்ரல் மாதத்தில் இங்கிலாந்தை யடைந்தார். ஆனால், அவ
சொந்த ஊருக்குத் திரும்பியதின் முக்கிய நோக்கம் நிறை
வேறவில்லை. ஏனெனின், அவர் இங்கிலாந்தை யடைவத
குள் அவர்தங் தாயார் இறந்துவிட்டார். தந்தையே
நரைத்துத் திரைத்து முதிர்ச்சி யடைந்துவிட்டார்
மன்றோவின் செவி செவிடாயிருந்தது வேறு அவருடை

நண்பர்களுடன் பேசிப் பழகுவதில் இடையூறு விளைத்தது. பழமையான இடங்களுக்குச் சென்று பார்ப்பதிலும், நீண்ட நடை போடுவதிலும், ஆற்றின் மேலுங் கீழும் புரளுவதிலுமாக அவர் சிலகாலங் கழித்தார் என்பது அவர் சகோதரிக் கெழுதிய கீழ்வருங் கடிதத்தால் தெரியவரும்:—"நான் எடின்பரோவை நீப்பதற்கு இரண்டு மூன்று நாள் முன்னதாக என்னைப் பிடித்த சளிப்பினால், என் வாழ்நாளில் இதுவரை யிருந்ததைவிட இப்பொழுது அதிகமாகச் செவிடாயிருக்கிறேன். சொல்லப்படும் எந்தச் சொல்லையும் நான் கேட்கொணாதவனாக இருப்பதால், நீ குறிப்பிடும் நாட்டியுல்லாசத்தை ஊமைபோற் கண்டு வருகிறேன். இச்சமயம்போல் வேறெச் சமயத்திலும் நான் கேள்வி யீனத்தாற் றுயருற்றதில்லை. ஒவ்வொரு கணமும் என்னைப் பல கேள்விகள் கேட்கும் பழ நட்பினர்கள் நானறிந்துகொள்ளும் பொருட்டு ஒவ்வொரு கேள்வியையும் நாலைந்து முறை கேட்கிறார்கள். சிலர் என்னை யுற்றுப்பார்த்து நின்று, நான் தடுமாற்றமடைந்திருப்பதால்தான் இவ்விடம் வந்துள்ளேனென நினைக்கிறார்கள். பலர் பேசிக்கொண்டிருந்த இடத்திற் போனால், பேசுவதைக் கேட்கவோ கேட்டபின் பேசவோ என்னால் முடியவில்லை யாதலின் கூட்டத்தினிடையே சென்று நான் மகிழ்ச்சியடைதற்கு வழி இல்லை. தனிமையாக நடந்து செல்வது ஒன்றிற்றான் எனக்கு மகிழ்ச்சியுண்டு. கார்த்தைட் டினுமிடத்திற்கு நான் இரண்டு முறை சென்றிருந்தபோது, இரண்டு நாட்களிலும் மழை பெய்துகொண்டிருந்த நிலையிலும், ஆற்றில் மேலுங் கீழுமாக நீந்திக்கொண்டேயிருந்தேன்."

இங்ஙனம் சின்னாட் கழித்தபின், மன்றோ ஒரு மாரிக் காலத்தை எடின்பரோவிற் கழித்தார். அங்குள்ள அறிஞர் குழாத்தமர்ந்திருந்தும், டாக்டர் ஹோப் என்ற இரசாயன சாஸ்திர நிபுணர் போன்றவர்களுடைய சொற்பெருக்குகளைக் கேட்டுக்கொண்டும் வருவாராயினர். இவற்றில் ஒவ்வொன்றாக உற்சாகங் குறைந்ததும், மன்றோ இலண்டன்மாநகரம் போய்ச் சேர்ந்தார். அவண், இராஜீயவாதிகளும் புலவர்களும் விஞ்ஞானகலை விற்பன்னர்களும் அவரைக் கண்டு களித்தனர். காதின் குணக்கேடு இருப்பவும் மன்றோ உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிந்துவந்தார். நியாய சபைகளில் நியாயவாதிகளும் நியாயாதிபதிகளும் எங்ஙனம் நடந்துகொள்கிறார்களென்று பார்க்க அவர் அடிக்கடி நியாயஸ்தலங்களுக்குச் செல்வதுண்டு. பிரபுக்கள் சபைக்கும் மற்றையோர் சபைக்கும் அவர் அடிக்கடி செல்வதுண்டு. இராஜ்ஜிய நிர்வாக வித்தையை மற்ற சாஸ்திரங்களோடும் படித்து வருவதுண்டு. தீபகற்பத்தில் வெற்றியோடு அவ்வேலை விளங்கிக்கொண்டிருந்த வெல்லிங்டன் பிரபுவுக்கு எழுதி, சேனையிற் சேர நினைக்குந் தமதெண்ணத்தை மன்றோ அறிவித்தார். வெல்லிங்டனும் வேலை வாங்கித் தர முயன்றார்; ஆனால் முயற்சி பயன்படாது போய்விட்டது. இந்நிலையில், மன்றோ சர் ஜான் ஹோப்பு என்ற ஒருவரோடு லௌஷிங் என்ற இடத்திற்கு முற்றுகைசெய்யப் போய்த் திரும்பி வந்தார். அதன்பின் இந்தியாவோடு செய்துவரும் வியாபார உரிமையைக் கீழ் இந்தியக் கும்பெனியாருக்கே கொடுத்துவிடுவதா என்ற விஷயமாகக் காமன்ஸ் சபையார் விசாரணைசெய்த காலத்தில் அவர் ஆலோசனை கூறினர்.

1814 மார்ச்சில் அவருக்குத் திருமணம் நடந்தது. அயர்ஷயரைச் சேர்ந்த ஜென் கேம்பெல் என்பவரின் புதல்

அவருக்கு மனைவியாக வாய்ந்தார். அவர் கட்டழகும் கல்வி யழகும் வாய்ந்தவர். ஜூன் மாதம் 12 ஆந் தேதியன்று மீண்டும் மன்றோ இந்தியாவுக்குப் புறப்பட்டார்; மூன்று மாதமானதும் சென்னை வந்து சேர்ந்தார். வங்காளம் சென்னை ஆகிய இரண்டு மாகாணங்களிலும் நியாய முறையைப்பற்றி ஆராய்ந்து சீர்திருத்த வழிசொல்ல வேண்டுமென அனுப்பப்பட்ட ஒரு விசாரணைக்காரர் சபைத் தலைவராக மன்றோ இப்பொழுது சென்னை வந்து சேர்ந்தார். அவர் அவ்வேலையி லமர்ந்திருந்தவாற்றை அடுத்த அத்தியாயத்திற் காண்பாம்.

## 8

# ஏழாம் அத்தியாயம்

## நியாய இலாகா விசாரணைசபைத் தலைவர்

காமன்ஸ் சபையார்முன் மன்றோ கொடுத்த வாக்கு மூலத்தினல், லார்டு காரன்வாலிஸால் வங்காளத்தில் ஏற்படுத்தப்பட்ட நிரந்தர அரசிறை முறை அரசாங்கத்திற்கும் குடிகளுக்கும் எதிர்பார்த்தபடி நன்மைதரவில்லை என்பதறியப்பட்டது. அந்நிரந்தர அரசிறை முறைப்படி, நியாய இலாகாவும் அரசிறை இலாகாவும் தொடர்பின்றிப் பிரிக்கப் படவேண்டியவையா யிருந்தன. இதைச் செவ்வனே யறிந்து கொண்டால்தான் மன்றோ செய்த ஏற்பாட்டின் பெருமை விளங்குமாதலால், இதைப்பற்றிச் சிறிது விரிவாகக் கூறுதும். காரன்வாலிஸ் முறைப்படி, நியாயாதிபதியின் அதிகாரமே நியாய விசாரணைத் துறையின் அதிகாரமோ கலெக்டரிடமில்லாமல், வேறொருவரிடம் இருந்துவந்தது. ஜமீந்தார்கள் என்று சொல்லப்பட்ட ஒரு வகுப்பாரிடம் சொத்துக்களைப் பரித்தியாகம் பண்ணிவிட்டு, பரம்பரை ஆணைகளையும் பரம்பரைத் தொழில்களையும் போக்கி, சுதேசவாசிகளுடைய அதிகாரத்தையுஞ் செல்வாக்கையும் போக்கிவிட்டது இம் முறை.

மொகலாய மன்னர்கள் தழுவிய தேசத்தின் பழமை யான வழக்கங்களின்படி, அரசிறை விதிக்கும் பொறுப்பு பெற்ற ஜில்லா அதிகாரி நியாய விசாரணை செய்யும் அதிகா

மும் பெற்றிருந்தார். இன்னும், இந்திய கிராமங்களில் கிராம சபையார் அரசிறை, காவல் முதலான காரியங்களையும் நியாய விசாரணையையும் நடத்திவந்திருந்தார்களென்பது தெரிகிறது. சென்னை மாகாணத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் கிராமமுனிசிப்பும் கணக்கரும் இருந்துவந்தார்கள். கிராமமுனிசிப்புதான் அக் கிராமத்திற்குக் கலெக்டரும் நியாய விசாரணைத்துரையும் ஆவர்; கணக்கர் ஊர்ப் பொதுக் கணக்கை எழுதுபவர். இவர்களுக்குக் கீழே தலையாரிகள் இருந்து வந்தார்கள். அவர்கள்தாம் கிராமக் காவலாளர். மேலும், வழக்காடும் இருதிறத்தாரின் முறையீட்டைக் கேட்டுத் தீர்ப்புக் கூறும் உரிமை பெற்றிருந்த பஞ்சாயத்துச் சபையாரு மிருந்துவந்தனர். அதன் தீர்மானத்திற்காகக் கொண்டுவரப்படும் வழக்குகளின் பெற்றிக்கேற்ப, அச்சபையின் அங்கத்தினர்கள் மாறி மாறி உட்காருவது வழக்கமா யிருந்து வந்தது. உதாரணமாக, சொத்துரிமை வழக்கைப் பரிசீலனை செய்யும் அங்கத்தினர்களே ஜாதி விஷயமான வழக்கு விசாரணையை எடுத்துக்கொள்வதில்லை. முகம்மதிய மன்னர்களால் ஒப்புக்கொள்ளப்படாவிடினும், இச்சபைகள் மக்களிடையே பெருஞ் செல்வாக்குடையனவா யிருந்துவந்தன. இங்ஙனம், கிராமத்தின் விஷயங்களெல்லாம் கிராமத்திலுள்ளோ, நியாயத்தோடும் நடுவுநிலைமையோடு மல்லாவிட்டாலும், துரிதத்தோடும் ஒழுங்கோடும் நடத்தப்பட்டு வந்தன.

இதைப்போலவே, கிராமங்களின் தலைமையில் ஜெமீந்தார், பாளையக்காரர், தாசில்தார், அமில்தார் இவருள் எவரேனும் ஒருவர் இருந்துவந்தார். அவர் கிராம முனிசிப்புவிடமிருந்து அரசிறையைப் பெற்றுக்கொண்டு, அவர்கள்

மீதோருவகை அதிகாரத்தைச் செலுத்திக்கொண்டு, கிராமத்திற்கு முனிசீப்பு உள்ளவாறு ஜில்லாவிற்கு இருந்துகொண்டு வந்தார். முகம்மதிய விஜயர்கள் இவ்வழக்கங்களிற் றலையிட்டார்களல்லர்; அவர்கள் காலத்திலும் பழமையான அரசர்கள் காலத்திலும், அரசிறை நிர்வாகத்தோடு நியாய விசாரணைத் துறையின் அதிகாரமும் இணைக்கப்பட்டே இருந்து வந்தது.

ஆனால், 1793ல் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் செய்த ஒரு சட்டத்தின்படி, சுதேசிகளிடமிருந்த எல்லா அதிகாரங்களும் அகற்றப்பட்டன. கிராம சபையாரும் ஜெமீந்தார்களும் அகற்றப்பட்டார்கள். மாகாணம் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் சிலர் ஐரோப்பியர் நியமிக்கப்பட்டார்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும் இவருளொருவர் அரசிறை விஷயத்தையும் மற்றொருவர் வழக்குகள் தீர்ப்பதையும் கவனித்து வந்தார். எனவே, 1793ம் வருஷத்திய சட்டம் சுதேசவாசிகள் பல நூற்றாண்டுகளாக அனுபவித்துவந்த முறைகளை அடியோடழித்து விட்டது.

இதனால், உடனே விளைந்தது யாதெனின், வரி விதித்து வசூல்செய்வதற்குமேல் கலெக்டர் பயன்படாதவராய்விட்டார் என்பது. தம் ஆட்களுக்குங் குடிகளுக்குமிடையே யுண்டாகும் வழக்குகளையும் விசாரிக்க அவருக்கு அதிகாரங் கொடுக்கப்படவில்லை. ஜில்லா ஜட்ஜு உண்மையாக மனச்சாட்சிக்கு விரோதமின்றி, எல்லா வழக்குகளையுந் தீர விசாரித்து முடிவு செய்வதென்பதும் இயலவில்லை. நியாய சபைக்கு வேறு மொழியென்றும், நியாயவாதிகள்மூலம் வாதாட வேண்டுமென்றும், சாட்சியங்களெல்லாம் எழுத்து மூலம் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்றும் விதிக்க

பட்டதால், நாளடைவில் நியாய சபைகளில் விசாரிக்கப் படாது நிற்கும் வழக்குகள் அதிகமாய் மலிந்துவிட்டன.

1793 ம் வருஷத்திய சட்டத்தால், போரினலாதல் பருவத்தினலாதல் ஏற்படக்கூடிய மாறுதலுக்கேற்ப மாறுவது போய், நிலவரி நிலையாகிவிட்டது. ஜெமீந்தார்கள் அரசிறை இறுத்துவந்த வரையில் வருத்தமில்லை. ஆனல் எக்காரணம்பற்றியேனும் அரசிறை இறுக்கப்படுவதில் காலங்கடந்தால், அந்த ஜெமீந்தாரருடைய நிலம், வேண்டிய அளவு, ஏலத்தில் விடப்படுவதாயிருந்தது. கலெக்டர் வரியை அதிகமாக விதித்திருந்தாலோ, குத்தகை யெடுத்திருந்தவர்கள் பணத்தைச் செலுத்தாவிட்டாலோ, ஜெமீந்தார் ஜில்லா ஜட்சிடம் நியாயத்திற்குப் போக வேண்டுமேயொழிய, அவரே ஒன்றுஞ் செய்ய மாட்டுநர் அல்லர். நியாய சபைக்குச் சென்று வருவதற்குள், ஜெமீந்தாரின் தொல்லைகள் பல்கிவிடும். வங்காளத்திலும், இத் தொல்லைகளால் ஜெமீந்தார்கள் நலிந்துவந்ததால், கலெக்டர்கள் ஜெமீந்தார்கள் விஷயத்தில் எப்படி நடந்துகொண்டார்களோ அப்படியே குத்தகைக்காரர்களிடமும் கிராமத் தலைவர்களிடமும் நடந்துகொள்ள ஜெமீந்தார்களுக்கு அரசாங்கம் அனுமதி கொடுத்தது. இதனல், நன்மை யேற்படாது தீமையே வளர்ந்தது. இப்பொழுது பயிரிடுவோர்கள் மிக்க துயருற்றனர்கள். யாதேனுமோர் காரணம் பற்றியும் காரணமில்லாமலும் அவர்கள் நிலத்திலிருந்து ஜெமீந்தார்களால் துரத்தப்பட்டார்கள்.

வங்காளத்தி லனுசரிக்கப்பட்ட நியாயமுறையும் அரசிறைமுறையும் சென்னையிலும் புகுத்தப்பட்டன.

கன்னட தேசத்திலும் ஒப்புவிக்கப்பட்ட ஜில்லாக்களிலு மாத்திரம், மன்ரோ வேலைபார்த்து வந்த காலத்தில், இவை புகுத்தப்படவில்லை. ஆனால், மன்ரோ வேலையை விட்டு விட்டுச் சென்று சிறிது காலமானதும், இப் புது முறைகள் இவ்விரண்டு இடங்களிலும் அனுசரிக்கப்படலாயின. வங்காளத்தில் விளைந்தது போலவே யிங்கும் குற்றமதிகமாகி, நியாயம் இழுக்குற்றது. இந் நிலைமையை யறிவுறுத்தும் கலெக்டர் ஜில்லாஜட்சுகளுடைய அறிக்கைகள் அடிக்கடி இலண்டனுக்கனுப்பப்பட்டனவேனும், அதிகாரத் தலைமை வகிப்போர் இந்தியா செழிப்பானோக்குவதாக எழுதியனுப்பிக்கொண்டே யிருந்தார்கள். இவ்வெழுத்தை நம்பிக்கொண்டு இலண்டனிலுள்ளோர், கலெக்டர் ஜட்சுகளின் அறிக்கைகளைப் புறக்கணித்துவிட்டனர். ஆனால், நல்ல வேளையாக, சொல்லப்பட்டபடி இந்தியா செழிப்புடன் தானிருக்கிறதா என்பதைக் கண்டறிய வேண்டுமென்னு நோக்கம் அவர்களிடத்தெழுந்தது. புறக்கணிக்கப்பட்டுக் கிடந்த அறிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டன; உண்மை விளங்கிற்று. வீணாய்ப்போன 1793 ஆம் வருஷத்திய சட்டத்தைத் திருத்த வேண்டுமென்பது புலப்பட்டது. திருத்துமுன், விஷயங்களை நன்கு ஆராய்ந்தறியும் பொருட்டு ஒரு விசாரணை சபையார் நியமிக்கப்பட்டனர். அச் சபையின் தலைவராக மன்ரோ நியமிக்கப்பட்டார்.

இதற்குள்ளாக, இங்கிலாந்தில் அப்பொழுதிருந்த கும்பெனியின் இந்திய உத்தியோகஸ்தர்களுடைய ஆலோசனை கேட்கப்பட்டது. நியாயமுறை எப்படி இந்தியாவில் இருந்து வருகின்றதென்றும், செய்ய உத்தேசித்திருக்கும் மாறுதல்களில் அவர்களதபிப்பிராயம் யாதென்றும் அவர்கள் கேட்கப்பட்டார்கள். அங்குள்ளவர்களிடையே

ஒரு தப்பெண்ணம் பரவியது. அதாவது, நியாய முறையை ஒழிப்பதேயன்றிச் சீர்திருத்துவது கும்பெனியின் நோக்க மன்றென்பது. மன்றோ விசாரணைசபைத் தலைமையில் நியமிக்கப்பட்டதும் இத் தப்பெண்ணம் வலுத்தது. இங்கிலாந்திலுள்ளவர்களே இத் தப்பெண்ணங் கொண்டன ரெனின், இந்தியாவிலுள்ளவர்களைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமோ? இவர்கள், இந்நியாய முறையை யடியோ டழிக்கவே விசாரணைக்காரர் வருகின்றனரெனவுன்னி, அவர்களுக்கு எவ்விதத்திலு மிடையூறு செய்யச் சித்தமா யிருந்தார்கள். கும்பெனியின் அதிகாரிகள் இலண்டனி லிருந்து நியாயமுறை தள்ளப்படப் போவதில்லையென்றும் திருத்தப்படவே போகிறதென்றும் அடிக்கடி இவர்களுக்கு அறிவுறுத்தியும் பயனில்லை.

இந்நிலையில், மன்றோவுக்கு வற்புறுத்தி யளிக்கப்பட்ட பதவியைச் சிலரே விரும்பி ஏற்றுக்கொண்டிருப்பர். நிற்க, மன்றோ சென்னையில் வந்து சேர்ந்த அற்றை நாளிலே வேலையொப்புக்கொண்ட கவர்னர் எலியட் என்பவரிடம் தப்பெண்ணங்களைச் சுற்றியிருந்தோர் பரப்பிவிட்டனர். அப்பொழுது எல்லாம் மிக மிக நல்ல நிலைமையிலிருந்தன வென்றும், மன்றோ இந்தியாவைவிட்டுப் போனபிறகு எல்லாம் திருத்தமுற்றிருக்கின்றன வென்றும், நாட்டின் நலத்தைப் பாதிக்காமல் கலெக்டரிடம் நியாய விசாரணை ஊர்க்காவல் விஷயங்கள் ஒப்படைக்கக் கூடாதனவா யுள்ளனவென்று மன்றோவே ஒப்புக்கொள்வாரென்றும், பக்கத்திருந்தோர் பகர்ந்தனர்.

மன்றோ செய்யவேண்டிய வேலைக்கு முட்டுக்கட்டை பலர் போட்டனரென்பது அவர் இலண்டனிற் கும்பெனி

யதிகார சபையில் இருந்த கம்பினி துரைக்கு எழுதிய கடிதங்களிலிருந்து பெயர்த்தெழுதப்படும் கீழ்க் காணும் செய்திகளால் விளங்கும்:—

"குறுக்கிடுவோர் ஒருவருமின்றித் தேச நலத்திற்குரிய சாதனங்களைத் தழுவிக்கொள்ள எனக்கு அதிகாரம் ஒப்புவிக்கப்பட்ட ஜில்லாக்களில் இருந்தது. அதைப் போலன்றி இப்பொழுது ஒரு படி தாண்டுவதாயிருந்தாலும் எண்ணப்பட்டுள்ள மாறுதலுக்கெதிரியாயுள்ளவர்களுடைய இசைவு பெற்றுச் செய்யவேண்டியவனாயுள்ளேன். காரிய தரிசிகளோடு கூடிய அரசாங்கமும், ஜில்லாஜட்சுகளும், ஓர் அங்கத்தினர் நீங்கலாக எல்லா ரெவினியூ போர்டு அங்கத்தினர்களும் இரயத்துவாரி முறையெனின், சீறி விழுபவர்களாயுள்ளார்கள்.

நான் ஒரு விஷயத்தைப்பற்றித் தங்களுக்கு எச்சரிக்கை செய்யவேண்டியவனாயிருக்கின்றேன். அங்கிருந்தனுப்பும் கட்டளைகள் நிறைவேற்றப்படவேண்டுமானால், ஐயத்திற்கிடமில்லாமலும் தெளிவாகவும் அவை இருக்கவேண்டும்; உதாரணமாக, "இது நமதிஷ்டம்," "இது நமது எண்ணம்," "நாம் அறிவிப்பது" என்றிவ்வாறெல்லாம் எழுதினால், அவை இங்குக் கட்டளைகளாக மதிக்கப்படுவதில்லை. "நாம் கட்டளையிடுவது," "நாம் ஆஞ்ஞாபிப்பது" என்றிவ் வார்த்தைகளை வழங்காவிடின், குறிக்கப்படும் உபாயங்களை ஏற்றுக்கொள்வது கட்டாயமன்றென்றே இங்குக் கருதப்படும். ஆதலால், இப்பொழுதுள்ள முறையில் எவ்வெப் பகுதிகள் திருத்தப்பட வேண்டியதவசியம் என்பதைப் பொறுத்து, ஐயத்திற்கிடமின்றி, உத்தரவுகள் உடனே பிறப்பிக்கவேண்டும்.

எண்ணப்படும் மாறுதல்களுக்குப் பகைவர் பலருண்டு. கிராமத் தலைவர்களும் பஞ்சாயத்துகளும் இதற்குமுன் வேலைபார்த்தக்கால் கண்டிராத கலெக்டர்கள் சிலர், இம்மாறுதல்களின் தன்மையை யுணரார் ஆதலின், பகைவராய் உளர். இப்பொழுதுள்ள நியாயமுறை எத்தகையதாயிருந்தாலும் அதுவே மிகச்சிறந்தது எனக்கருதும் நியாயாதிபதிகளும் விரோதிகள். சுதேசவாசிகளைக் கொண்டு காரியங்களை நடத்துவது ஆபத்து என்று சிலர் கருதுவதால் விரோதிகளாயுளர். இன்னுஞ் சிலர், தாங்கள் இம்மாறுதல்களை முதற்கண் சுட்டிக்காட்டிப் பெருமையடையவில்லையே யென்ற எண்ணத்தால், விரோதிகளாயுளர். ஆனால் விரோதத்திற்கு முக்கிய காரணம் இப்பொழுதுதான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அஃதென்னெனின், ஜில்லா நியாயசபைகளுக்கு வேலை குறைவுற்றுப் போகும்படி கிராமத் தலைவர்களிடமும் பஞ்சாயத்தார்களிடமும் சுதேசிகள் சென்றுசேர்வரே யெனவும் தாங்கள் வேலையை யதனால் இழக்கநேரிடுமே யெனவுஞ் சிலர் கருதுவதேயாம்.”

இவ்விரோதங்களினிடையேயும் மன்றோ வேலைபார்த்து ஆராய்ச்சி செய்து, தமது கருத்துக்களை வெளியிட்டார். அதன்பின், ஜட்சியினிடமிருந்த நியாய விசாரணைத்துரை (மாஜிஸ்டிரேட்) யின் அதிகாரமும் ஊர்க்காவல் மேற்பார்வையும் கலெக்டருக்கு மாற்றப்பட்டன. பரம்பரைக் கிராமாதிகாரிகள் ஊர்க்காவல் வேலைபார்க்க நியமிக்கப்பட்டனர். சிறு வழக்குகளை விசாரிக்கக் கிராமத் தலைவர்களுக்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது. சுதேச ஜட்சுகளதிகாரம் அதிகப்படுத்தப் பட்டதோடு, கிராமப் பஞ்சாயத்துகளும் ஜில்லாப் பஞ்சாயத்துகளும் சட்டமூலம் ஒப்புக்கொள்ளப் பட்டன.

கலெக்டர்கள் நியாயாதிபதிகளாகவு மிருக்கக்கூடும் இருக்க வேண்டும் என்று மன்ரோ கூறியதின் கருத்து பின் வரும் இரண்டு வழக்குகளின் விவரணத்தாற் றெரியவரும்.

1808 ல் திருச்சிராப்பள்ளி ஜில்லா நியாயசபையில் ஒரு வழக்கு வந்தது. ஒரு கிராமத்தின் குடிகளிடமிருந்து ஆயிரத்தெண்ணூறு ரூபாய் சுவாமி போகமாக வரவேண்டு மென்று சிலர் பிராமணர்கள் வழக்காடினார்கள். ஒரு கோவிலுக்குத் தங்களிஷ்டத்தாற் பணங் கொடுத்து வந்ததாகவும், சுவாமி போகம் கொடுத்துவரவில்லை யென்றும் அக்குடிகள் சொல்லி வாதாடினார்கள். கிராமக் கணக்கு இவ்வழக்கை முடிவு செய்வதில் உதவியாயிருந்திருக்கும்; ஆனால், அதை அத்தாக்ஷியாக எடுத்துக்கொள்ள நியாயாதிபதி மறுத்து விட்டு, மனுவைத் தள்ளிவிட்டார். மேல் நியாய சபையில் முடிவு மாற்றப்பட்டு, வழக்காடிய பணத்திற்கு மாத்திரமல்லாமல் நிலத்துக்கும் உரிமை பிராமணர்க்குக் கொடுக்கப்பட்டது. அதற்கு மேற்பட்ட நியாயசபை, இரண்டு நியாய சபைகளின் தீர்ப்புகளையுந் தள்ளி, அவரவர் தங்கள் தங்கள் செலவை ஒப்புக்கொள்ள வேண்டுமெனச் சொல்லி, வேண்டுமானால் புது வழக்காக ஆரம்பிக்கும்படி உத்தரவிட்டது.

இன்னொரு வழக்கைப் பாருங்கள். அது உடையார் பாளையம் பாளையக்காரரிடமிருந்து நிலமாகவோ பணமாகவோ படியைப் பெறும் உரிமை யுண்டென்று, அவருடைய எட்டிய வுறவினர் ஒருவர் கொண்டுவந்தது. இவ்வழக்கில், மூன்று நியாய சபைகளிலும் உண்மை கண்டறியப்படவில்லை. ஆறுண்டாக நடந்துவந்த இவ்வழக்கு அரை மணி நேரத்தில் ஒரு கலெக்டரால் முடிவு செய்யப்பட்டிருக்கக்

கூடியது. மனுதாரர் இவ்வழக்கை ஒரு கலெக்டர்முன் கொண்டுவரத் துணிந்திருக்கவே மாட்டார். ஏனெனின், உடையார்பாளையம் ஜெமீந்தாருடைய நெருங்கிய பந்துக்களுக்கே பரம்பரைச் சொத்தில் உரிமை கிடையாது. ஜெமீந்தார் உரிமை கருதியல்லாமல் தமதிஷ்டத்தால் தமது சகோதரர்களுக்கு ஒருவிதப் படி கொடுப்பது வழக்கம்.

இவ்விரண்டு வழக்குகளும் இவை போன்ற பிறவும் கலெக்டர்களால் தப்பின்றித் தீர்க்கப்படக்கூடியவையென்று மன்றோ கருதினார். ஜில்லா ஜட்சுகள் கலெக்டர்களாக இருந்தவரல்லராயின்; சுதேசிகளுடைய பழக்க வழக்கங்களை யறிந்திராராதலின் வழக்குகள் வளரும் என்றும் அவர் கருதினார். இக்காரணம் பற்றியே அவர் நியாயமுறையில் சில மாறுதல்களை யேற்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தி வந்தார். அம்மாறுதல்கள் எவையென்பது முன்னரே கூறப்பட்டது.

# எட்டாம் அத்தியாயம்

## மராத்தியச் சண்டையில் மன்றோ

நியாய விசாரணைசபைத் தலைவராக மன்றோ சற்றுக் குறைய மூன்று வருஷம் வேலைபார்த்தபின், ஒரு படைத் தலைவராகத் தம்மை நியமிக்க வேண்டுமென இராஜப்பிரதிநிதியைக் கேட்டுக்கொண்டார். படைத்தலைவர்கள் அதற்கு முன்னரேயே நியமிக்கப்பட்டுவிட்டபடியால், இவ்வேண்டுகோளை நிறைவேற்ற இயலவில்லை. ஆதலால், மன்றோ தென் மராத்திய நாட்டின் தலைவராக நியமிக்கப்பட்டார். இப்பகுதி 1817 ஜூன் மாதத்திய பூனா ஒப்பந்தப்படி பீஷ்வாவால் பிரிட்டிஷாரிடம் ஒப்புவிக்கப்பட்டது. இங்கு மன்றோ செய்த வேலையில் மகிழ்ந்து ஸர். ஜான் மால்கம் என்பார் எழுதிய ஒரு குறிப்பைப் பாருங்கள்:— "எதிரியினுடைய நாட்டில் ஒதுக்கிவைக்கப்பட்டு, இராணுவ பலம் அதிகமில்லாமல் இருந்த இவர், நாட்டைக் கீழ்ப்படுத்து மெண்ணத்துடன் அவணிருந்த படைகளை வெளியேற்றினர். வெளி ஜில்லாக்களிலிருந்து வரவழைத்துக்கொண்ட சிறியதோர் படையினுதவியாலும், அக்குடிகளினுதவியாலும் தமதெதிரிக்குக் கிடைக்கவேண்டிய ஆரசிறையை வசூலிக்க எண்ணினர். அவரதெண்ணமும் எண்ணியாங்காயிற்று. அவரைப் போன்ற ஒருவரால் ஆளப்படும் பெருமைக்கு ஆசைப்பட்டு மக்கள் அவரிடம் வந்து ஆட்கொள்ளும்படி வேண்டிக்கொண்

டார்கள். இவ்விஷயத்தில் மன்றோவின் உள்நாட்டுப் புகழ் உதவி புரிந்தது என்று சிலர் சொல்லக்கூடும். ஆனால், அப் புகழே அவர் பாராட்டப்படுவதற்கு வேண்டிய உரிமையை அவருக்களிக்கின்றது. அவரிருக்குமிடத்தில் மக்களாற் போற்றப்படுவதின் காரணம், அவர்கள் அவருடைய சாமர்த் தியத்தையுங் குணநிசயங்களையும் கண்டிருப்பதேயாம்."

அதன்பின், வாதாபி நகரத்தையும் பெல்காம் பட்டணத் தையும் அவர் பிடித்துக்கொண்டார். மேல், பீஷ்வாவின் குதிரை, காலாள், பீரங்கிப்பட்டாளங்களுடனிருந்த 11,000 சேனைவீரர்கள் தங்கியிருந்த சோலாப்பூரை நோக்கிச் சென்றார். கோட்டையை வேவுபார்த்தறிந்தபின், பேட்டை யின் சுவர்மீதேறிக் குதிக்கவேண்டியதென முடிவு செய்து கொண்டார். ஓர் ஓட்டத்தில் சுவரைத் தாண்டிச் சென்ற அவருடைய ஆட்கள் விரைவில் பேட்டைக்குத் தலைவராய் விட்டனர். இடையில், எதிரிகள் பீரங்கியால் தனித்திருந் தோரைத் தாக்கினரேனும், ஒரு வண்டி வெடித்துப் போன தாலேற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு மன்றோ உட்சென்று தாக்கினார். பீஷ்வாவின் ஆட்கள் வெடி குண்டுகளைக் கீழே எறிந்துவிட்டு மறைந்து கொண்டார்கள். மராத்தியர்கள் முதுகிட்டோடத் தொடங்கினர். மன்றோ வின் ஆட்கள் ஓடிக் கொண்டிருந்தவர்களை முறியடித்து விட்டார்கள். சோலாப்பூர் பிடிபட்டது. இச்செய்தி தெரிந் ததும் பீஷ்வா அடங்கி விட்டார். சோலாப்பூர் கைப்பற்றுகை யோடு தென்மராத்தியதேசம் பிரிட்டிஷாருக்குக் கீழ்ப்பட்ட தாயிற்று. இவ் வமயத்தில் மன்றோ தமது வேலையை விட்டுவிட்டு ஊருக்குத் திரும்ப எண்ணினார்.

# ஒன்பதாம் அத்தியாயம்

## மீண்டும் ஊருக்கு

**1819** ஜனவரி 24 ஆந் தேதியன்று மன்றோ தமது மனைவியுடன் சென்னையிலிருந்து இங்கிலாந்துக்குப் புறப்பட்டார். புறப்படும்போது, திரும்பி இந்தியாவுக்கு வருவதில்லையென்ற வுறுதியான சங்கற்பத்தோடு இருவருஞ் சென்றார்கள். ஆனால், நம் முறுதிகளெல்லாம் உறுதிகளாமோ! இவ்விருவரும் பிரயாணஞ் செய்து கொண்டிருந்தபொழுது கப்பலிலேயே மே மாதம் 30 ஆம் நாள் ஓர் ஆண் மகவைத் திருமதி மன்றோ ஈன்றார். ஜூன் மாதக் கோடியில் மூவரும் இங்கிலாந்தையடைந்து, விரைவில் ஸ்காத்லாந்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

சென்னைக் கவர்னராகவிருந்து வந்த எலியட்டின்பின் மன்றோ அப்பதவியை யடைவது என்க் கும்பெனியின் நிர்வாக அதிகாரிகள் தீர்மானித்தனர். 1819 ஆகஸ்ட் மாதத்தில் மேஜர்ஜெனரல் நிலைக்குயர்த்தப்பட்டிருந்த மன்றோ, கவர்னர்பதவி யளிக்கப்பட்டவுடன் * கே. ஸி. பி. என்ற பட்டத்தையு மடைந்தார்.

மன்றோவின் திறமையையும் பெருமையையும் பற்றிக் காமன்ஸ் சபையில் கானிங் துரை பேசிப் பெருமையடைந்தார். அவர் கூறியது வருமாறு:— "இவரினுஞ் சிறந்த

இராஜதர்ம நிபுணர் ஐரோப்பாவில் உண்டானதில்லை. சூரர் களில் செறிந்த இந்தியாவிலுங்கூட இவரினுஞ் சிறந்த வீரருண்டானதில்லை. இராணுவ உத்தியோகத்தையல்லாமல் நிர்வாக பதவிகளைச் சில்லாண்டுகளாக வகித்து வந்த இவரது உட்கிடந்த பெருமை கறைபிடித்துப் போகவில்லை யென்பது இப்பொழுது நடந்த மராத்திய யுத்தத்தால் விளங்கலாயிற்று. பூனா உடன்படிக்கைப்படி நம்மிடம் ஒப்புவிக்கப்பட்ட மராத்திய பகுதிகளை வசப்படுத்த மன்றோ சென்றபொழுது, அவருடன் 600 ஆட்களுக்குமேலில்லை. ஆயுதங்களால் தாமேயடக்கிய ஆட்களை அவர் சாமர்த்தியத்தோடும் நியாயத்தோடும் நடத்தியதால், அவர்களாலும் அவர் போற்றப்பட்டார். வழியில், ஒன்பது கோட்டைகள் அவரால் கீழ்ப் படுத்தப்பட்டன; போகப் போக, அவருடன் ஆட்கள் அதிகமாகச் சேர்ந்தார்களே யொழியக் குறையவில்லை. அவர் விட்டுச் சென்ற ஊர்களிலெல்லாம் அமைதி குடிகொண்டிருந்தது. இப்பயன், நுட்பமான நீண்ட விரிவுரை சொல்லக் கூடியதைவிட, தானே மன்றோவது பெருமைக்குச் சான்று பகரும்.''

"அதிகாரம் யாரிடமிருந்தெழுகின்றதென்பதைப்பற்றி நாம் அடிக்கடி இங்குப்பேசி மயங்குகின்றோம். சிலர் மக்களிடமிருந்து அஃதெழுவதாக நினைக்க, வேறு சிலர் மாறாக நினைக்கின்றார்கள்; எனினும், அதிகாரம் மக்களுக்காகவே செலுத்தப்பட வேண்டுமென்ற நோக்கத்தை எல்லாரும் ஒப்புக்கொள்கின்றார்கள். இந் நோக்கத்தையே முக்கிய காரணமாகக்கொண்டு ஏதேனும் பதவி யளிக்கப்படுமாயின், அது இன்று மன்றோவுக்களிக்கப்படும் பதவியேயாம். சென்னைமாகாண நிர்வாகத்துக்கு நியமிக்கப்பட்டிருக்கும்

பெருமைமிக்க மன்ரோ அந்த ஒன்றேகாற்கோடி மக்களுடைய நன்மைக்கேற்ற காரியங்களைச்செய்ய வேண்டியது தமது கடமையென்பதை மனத்தில் வைத்துக்கொள்வாரென்பதில் எனக்கு யாதும் ஐயமில்லை."

இப்பிரசங்கத்தைக் குறித்து மன்ரோ தமது நண்பரொருவர்க்குப் பின்வருமாறு எழுதினர்:—"அன்றுமாலை நிகழ்ச்சியினால் எழுந்த என்மகிழ்ச்சியைப்போல் எனது நிர்வாக காலம் முழுமையானும் வரக்கூடியதிராது. இந்த விதமாக இத்தகைய பெரியாரால் பேசப்படுவதற்காகவாகிலும் ஒருவன் கவர்னராதல் பொருந்தும்."

மன்ரோவுக்கு இப்பதவியை யளிக்குமுன் இதனை லார்டு வில்லியம் பெண்டிங்கு என்ற பெருந்தகையார்க் களித்தனர். ஆனால், அவர் சில காரணங்களால் இவ் வேலையை யொப்புக் கொள்ள முடியாதவராயிருந்ததால் வேண்டாமெனக் கூறி விட்டார். மன்ரோ இப்பதவிக்கு நியமிக்கப்பட்டாரென்பது தெரிந்ததும் அவர் மன்ரோவுக் கெழுதியதாவது:—"சென்னை மாகாண நிர்வாகத்துக்கு உங்களை நியமித்திருப்பதாகத் திரு. கானிங் எனக்குத் தெரிவித்துள்ளார். அவருக்குப் பதில் எழுதியதில், இந் நியமனம் அவருக்குக் கௌரவத்தையும் எனக்கு முழுத்திருப்தியையுந் தருவதாகக் குறிப்பிட்டுள்ளேன். இந்தியாவுக்குத் திரும்ப முடியாதுபோனதைப்பற்றி எனக்கிருந்த வருத்தம் முழுதும் இக்காலை பறந்தோடிப் போயிற்று. என்னினுஞ் சிறந்த ஒருவரே நியமிக்கப்பட்டுள்ளார் என்பதே எனது அகத்தெழுங்கருத்து. பெருமையு மேன்மையு மிகுந்த உங்களது தொண்டு இறுதியில் உங்களுக்கு நேர்மையான பெருமையை யளிப்பதுபற்றி நிரம்ப மகிழ்ச்சி யடைகின்றேன்."

இவ்வாறெல்லாம் போற்றப்பட்ட மன்றோ 1820 மே மாதத் துவக்கத்திற் பம்பாயில் வந்திறங்கினார். உடன் அவர் மனைவியும் வந்திருந்தார். இருவரும், பம்பாய் கவர்னராயிருந்த எல்பின்ஸ்டன் இல்லத்தில் சிலநாள் தங்கிவிட்டு ஜூன் மாதம் 8 ஆந் தேதி சென்னைக்கு வந்து சேர்ந்தனர். இரண்டு நாளானபின், மன்றோ கவர்னர் பதவியைப் பல கௌரவங்களுக்கிடையே ஏற்றுக்கொண்டார்.

10

## பத்தாம் அத்தியாயம்

---

### சென்னைக் கவர்னர்

மன்ரோ அதுமுதல் 1827 ஜூலை மாதம் 6-ஆந் தேதி வரையில், அதாவது 7 வருஷத்துக்குச் சற்று அதிகமாக, சென்னைக்கவர்னர் பதவியைத் திறமையாக வகித்து வந்தார். 1824-ல் நடந்த முதல் பர்மிய யுத்தத்தில் எவ்வாறு நடந்து கொள்வதென்பதைப் பற்றி, இராஜப் பிரதிநிதி லார்டு ஆம்ஹர்ஸ்ட், மன்ரோவிடம், ஆலோசனை கேட்டார்; மன்ரோவும் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். இவ்யுத்தத்தில் பிரிட்டிஷாருக்குக் கிடைத்த வெற்றிக்குப் பெரும்பாலும் உதவியாயிருந்தவர் மன்ரோ வாதலின் அவருக்குப் பேரனட் பட்டம் வழங்கவேண்டுமென மந்திரி சிபார்சு செய்தார். அவருக்கு அப்பட்டம் 1825 ஜூன் மாதத்திலளிக்கப்பட்டது. கும்பெனியின் நிர்வாக சபையாரும் கீழ்க்காணுந் தீர்மானத்தை ஒரு மனதாக நிறைவேற்றினார்கள்:—"பர்மாவோடு நடந்த யுத்தத்தில் வெற்றி கிடைக்கும்பொருட்டு, சென்னையின் வகைவழிகள் எல்லாவற்றையும் ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும், விடாமுயற்சியோடும், முன்யோசனையோடும் பயன்படுத்திய ஸர் தாமஸ் மன்ரோவுக்கு இச் சபையின் வந்தனம் அளிக்கப்படுகிறது. பிரபுக்கள் சபையில் "ஸர் தாமஸ் மன்ரோ சென்னைமாகாணத் தலைவராயிருந்து செய்த முயற்சிகளை நன்றாக அளவிட்டறிய ஒருவராலுமாகாது" என்று லார்டு கொடிரிச் பேசினர்.

இங்ஙனம் பெருமை பாராட்டப்பட்ட மன்ரோ சென்னைக் கவர்னராயிருந்து செய்தவற்றுட் சில இனிக்காண்பாம். அரசாங்க உத்தியோகஸ்தர்கள் எல்லாருக்கும் அவர் நல்ல சம்பளங்கொடுத்து, இழிவிற்கும் நெறிவழுவிற்கும் இடமில்லாதபடி வைத்தார். கும்பெனியின் உத்தியோகஸ்தர்கள் அறியாமையாற் செய்யுங் குற்றங்களுக்காகக் கடுமையாகத் தண்டிக்கப்படலாகாது என்று கூறினார். பொதுஜன ஊழியர்கள் வயது முதிர்ந்தக்கால் உபகாரச் சம்பளம் கொடுக்கப்பெற வேண்டும் என்று முயன்று வெற்றியுற்றார். கலைந்துபோன சுதேசப் பள்ளிக்கூடங்களை மீட்டும் அமைப்பதிலும், பள்ளிக்கூடங்கள் முன்னில்லாத இடங்களில் புதுப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதிலும் அவர் கவனஞ் செலுத்தினார். ஹிந்துக்களையு முஸ்லீங்களையும் அரசாங்க உத்தியோகங்களுக்குப் பழக்குவதற்காகப் பொதுஜனக்கல்விச் சபையொன்று கோட்டையில் நாட்டினார். இதற்காக ஐம்பதினாயிரம் ரூபாய் ஆண்டுதோறுஞ் செலவிட ஏற்பாடு செய்தார். 1823-ஆம் வருஷத்தில் ஊரில் ஒரு பெரும் பஞ்சம் உண்டானபோது, முன்யோசனையுஞ் சக்தியும் செய்யக் கூடியதையெல்லாஞ் செய்தார். கூலங்களை வெளியிலிருந்து வரவழைத்து, பஞ்சத்தால் மிகவும் வாடிய ஜில்லாக்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்தார். மக்கள் எல்லாருக்கும் பஞ்சத்தால் விளையக்கூடிய தீமைகளை முழுதும் அவராற் போக்க முடியாவிட்டாலும், தீமைகள் குறைந்தனவென்பதை அவர் அறிந்து கொண்டபோது சிறிது மகிழ்ந்தார். அதற்குமுன் வந்த கடும்பஞ்சங்களால் ஜனங்கள் மடிந்ததைவிட, இப்பஞ்சத்தால் ஜனங்கள் மரித்தது குறைவென்பதை நாம் தெரிந்து கொண்டால், மன்ரோவின் செயற்றிறத்தை யறிந்து கொண்டவராவோம்.

பெல்லாரியில், ஒரு சப்கலெக்டர் இருந்தார். கன்னட பாஷையில் மொழிபெயர்க்கப்பட்ட விவிலியத்தையும், மதத்துவ விஷயங்களைப் பற்றிய சிறு புஸ்தகங்களையும் பெல்லாரி ஜனங்களுக்கு அவர் வழங்கினார். அப்புஸ்தகங்களைப் பெற்றவர்கள் கிராம முனிசிப்புகளும், கணக்கர்களும், வியாபாரிகளும், குடிகளுமாவர். கச்சேரி சேவகர்களும் அப்புத்தகங்களைப் பெற்றனர். அந்த சப்கலெக்டர் அப்புஸ்தகங்களை வற்புறுத்தி யொருவருக்கு மளிக்கவில்லை யென்றும், பலர் வேண்டுமென விரும்பிக்கேட்டனரென்றும் மேலதிகாரிகளுக்குச் சொன்னார். இது விஷயமாக, மன்ரோ எழுதிய குறிப்பொன்றைத் தருதும். அதாவது:—"உத்தியோகத்திலமர்ந்திருக்கும் அவர் உத்தியோகத்தால் வரக்கூடிய செல்வாக்கை அடியோடகற்றிக் கொண்டிருக்க முடியாது. அவரது உத்தியோகத்தோடு தொடர்புற்ற விஷயங்களைக் குறித்து அவரிடம் வரும் பொதுஜன ஊழியர்கள், கிராம முனிசிப்புகள், கணக்கர்கள், வணிகர்கள், பயிரிடுபவர்கள் முதலானவர்களிடம் தன் சொந்த அபிப்பிராயங்களைப் பலவந்தமாய் அவர் நுழைக்கு முகத்தால், உத்தியோகலக்ஷணத்தைப் பாதிரியினதாக மாற்றிக் கொண்டுவிட்டார் என நினைக்கிறேன்.

ஒரு பாதிரி செய்யக்கூடிய எல்லாவற்றையும் அவர் உண்மையாகவே செய்துள்ளார். இவ் வேலையில் அவர் தமது கச்சேரி ஆட்களையும் ஜில்லாக் கச்சேரி யாட்களையும் உபயோகப்படுத்திக் கொண்டுள்ளார். அவரே புஸ்தகங்களை வழங்கி விரிவுரைகள் நிகழ்த்தியுள்ளார். அவர் ஒரு பாதிரியாகவே யிருந்திருப்பாராயின், வேறு மேலே யாதுதான் செய்திருக்கக்கூடும்? இவ்வளவும் அவரால் அப்பொழுது செய்திருக்க முடியாது; அவரால் அப்பொழுது சுதேசிகளைக்

கட்டியிருக்க முடியாது; மத சம்பந்தமான துணுக்குகளைக் கொடுப்பதிற் கச்சேரி யாட்களைப் பயன்படுத்த முடியாது. ஒரு வியில் உத்தியோகஸ்தரைத் தவிர, வேறெவரும் இதனைச் செய்திருக்க முடியாது; பெல்லாரியிலும் ஹார்ப்பன ஹள்ளியிலும் அவரைத் தவிர வேறெவரும் இதைச் செய் திருக்க முடியாது; அப்படியிருந்தும் இவ்விஷயத்தில் உத்தி யோகம் தலையிடவில்லை யென்று அவர் கூறுகின்றார்! அவர் நேராக ஒருவரையும் வற்புறுத்தவில்லை யென்பது உண்மை தான்; அங்ஙனஞ் செய்திருப்பின், பெரிய அதிர்ச்சி யுண்டாயிருக்கும். ஆனால், அவர் தனக்குத் தெரியாமலே வற்புறுத்தலைப் போன்ற தொன்றைக் கையாண்டதோடு இனியுங் கையாண்டு வருவார். தெளிவான தலையீடு, உத்தி யோக காரியகர்த்தர்கள், சகாயம் பெறும் நம்பிக்கை, வெறுப் புண்டாக்கும் அச்சம், இவை யெல்லாம் வற்புறுத்தலுக்குச் சாதனங்களல்லவோ? வற்புறுத்தலுக்கும், விருப்பமிருப்பின் செய்யும்படி சொல்வதற்கும், உள்ள வேற்றுமையைக் கண்டு பிடித்துக் கொள்வதில் மக்களுக்குக் கஷ்டமிராதென்று அவர் சொல்கிறார். நான் சொல்வது யாதெனின், உத்தியோ கத்தி னதிகாரம் பற்றுள்ளதுபோற் செலுத்தப்படும்போது, ஏற்றுபெற்றி கொள்வதற்குச் சுயேச்சை மக்களுக்கிராது என்பதே. மக்களுட் சிலரே அவ்வேற்றுமையைக் கண்டறிந் திருப்பர்; ஆனால், பெரும்பாலார் அவர் அதிகாரத்தோடுதான் நடக்கிறாரென்றும், பொதுப்படச் செய்யப்போகும் மதமாற் றம்பற்றிய சட்டத்திற்கு அடிகோலுகின்றாரென்றும் நம்பி யிருப்பர்.

கலெக்டர்களையும் நியாய விசாரணைத் துரைகளையும் சமயபோதகுசிரியராக வேலைபார்க்கும் பொருட்டு நியமிக்க

வில்லை. இவ்விஷயத்தில் அவர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறையைப்பற்றித் திட்டமான சட்டங்கள் யாவுஞ் செய்யப் படவில்லையென்ப துண்மைதான். ஆனால் இதைப் போன்ற விஷயங்கள் அவர்களது வேலையினின்று மாறுபட்டவை யென்பதை அறிவுள்ள எம்மனிதனும் கண்டுகொள்வான். இந்த சப்கலெக்டரையோ, வேறெந்த உத்தியோகஸ்தரையோ நாம் சமயப் பணி செய்ய எக்காரணம்பற்றியும் அனுமதிக்கலாகாது.

அவர்களுடைய பழமையான சட்டங்களையும் வழக்கங்களையும் கைக்கொள்ள இந்தியமக்கள் அனுமதிக்கப்பட வேண்டும். மத விஷயங்களில் உத்தியோகஸ்தர்கள் தலையிடுவதினின்று மக்கள் காப்பாற்றப்பட வேண்டும். இதுவே சட்டசபையின் நோக்கமும் கும்பெனி சபையின் நோக்கமும் ஆம். இதுவே தேசத்தில் அமைதியையும், அரசிறை வருமானத்தையும், சுதேசிகளின் முன்னேற்றத்தையும் பரவச்செய்யும். அந்த சப்கலெக்டரின் முறை அமைதியழிவிற்கும் வருமானக் குறைவிற்கும் காரணமாகக் கூடிய தீமையுடையது. அவரைப் பெல்லாரியில் வைப்பதால் தீமை விளையுமோவென்றால், உறுதியாக விளையுமென்று நான் தேற்றமாகக் கூறமாட்டேன். ஆனால் ஏதேனும் விளைந்தால் தீமை விளையுமென்று நாம் முன்னால் எதிர்பார்க்கவில்லை யென்று பிறகு சொல்வது நேர்மையாகாது. ஏனெனின், நமக்கு முன்னதாகவே எச்சரிக்கை கிடைத்திருப்பதற்கேற்ப நாம் நடந்து கொண்டிருக்க வேண்டுமென்று பின்னால் சொல்லப்படும் ஆதலின் என்க.

ஆளுபவர்கள் வேறு வர்க்கமாகவும் குறைவாகவும் உள்ள எல்லாத் தேசங்களிலும் மத உணர்ச்சிகளிற் றலையிடு

வதே பெருந் தீச்செயல். அவ்வுணர்ச்சிகள் பார்வைக்குக் காணப்படாமல் மறைந்து கிடக்கலாம். ஆனால், வேலூர்ச் சிப்பாய்க் கலகத்திற்றோன்றியதைப்போல், அவை திடீரென வெளிப்படும். ஏதேனும் ஒரு சாதாரண நிகழ்ச்சியால் அவ்வுணர்ச்சிக ளெழுப்பப்பட்டு, பாதிரிவேலை செய்யும் கலெக்டர்களால் நூறு வருஷத்திலும் மாற்றலாகாத் தீங்கை ஒரு வருஷத்தில் விளைத்துவிடும். அங்ஙனமில்லாது, சிறு கலகத்தையே அவை விளைத்தால், கலகம் அடக்கப்பட்ட பிறகுகூட, அரசாங்கத்திடையேயும் மக்களிடையேயும் ஒருவித நம்பிக்கைக் குறைவு காணப்படும். கலெக்டர்களும் நியாய விசாரணைத்துரைகளும் மதாசிரியர்களாக வேலைசெய்வதால் யாதொரு நற்பயனுமுண்டாகாது. உற்சாகமுள்ள சிலருடைய விருப்பம் ஒருகால் சிறிது நிறைவேற இடமிருக்கும்; ஆனால், முடிவில் குழப்பமுந் தோல்வியுமே யுண்டாம்.

இத் தீமைகளின் மேல், அரசிறை நிர்வாகத்தில் ஊழல்களேற்படும். கெட்ட எண்ணக்காரர்கள் கலெக்டரைச் சூழ்ந்துகொண்டு அவரது நம்பிக்கைக்கு ஆதரவு அளிப்பவர் போற் பாவித்து, கச்சேரியாட்களில் இணங்காதவர்களாகவும் திறமைசாலிகளாகவும் உள்ளவர்களைப் போக்குதற்குச் சூழ்ச்சி செய்வார்கள். மத மாற்றத்திற் கிணங்குவோ ரிவரெனச் சொல்லி, ஒவ்வொரு தாழ்ந்த உத்தியோகத்தையும் தங்களாட்களைக் கொண்டு நிரப்ப முயல்வார்கள். இவ்வாட்களின் திறமின்மையாலும் நேர்மையின்மையாலும் அரசின்றை வருமானம் குறைந்துபோம்.

தனது மதமாற்ற முறைகளுக்கு ஆதரவளிக்கும் ஒரு காரணம்பற்றியே சில பேரைக் கலெக்டர் தனது அந்தரங்க

உத்தியோகஸ்தர்களாக நியமித்துக் கொள்வாரே யாயின், நாட்டார் சந்தேகமும் அதிருப்தியுங் கொள்வார்கள். தங்கள் மதம் போய்விடுமே யென்றஞ்சுவோராலும், உத்தியோகஸ்தர்களைக் கீழே தள்ளிவிட்டு அவ் வுத்தியோகங்களைப் பெற வேண்டுமென்ற கருத்துக் கொண்டோராலுங் கலகம் விளையும்.

அச் சப்கலெக்டர் புத்தகங்களை மக்கள் விரும்பிக் கேட்டார்களென்று சொல்லி யிருக்குமொன்றே சூழ்ச்சி செய்யும் மக்களால் ஏமாறக்கூடியவர் அவர் என்பதற்குச் சான்று அளிக்கும். அவர் முன்னின்று மறுக்கமாட்டாமலும் அவருக்கு வருத்தங் கொடுக்க எண்ணமில்லாமலும் மக்கள் அப் புத்தகங்களைப் பெற்றுக்கொண்டுள்ளார்கள். இதனை யறியாது, உள்ளத்தெழுந்த வுணர்ச்சியால் வாங்கிக் கொண்டனர் என அவர் கருதுவது பிழை. உண்மைப் பாதிரிகளை விட அவர் வெற்றி யுள்ளவராகத் திகழ்ந்ததன் ஏது யாதென அவர் சிந்தித்துப் பார்க்கவில்லை போலும்! அவர் உத்தியோகத்தோடில்லாம லிருந்திருப்பாரேயாயின், அவருடைய கண்கள் திறக்கப்பட்டிருக்கும்.

ஒரு கலெக்டர் நாட்டு மக்களுக்குப் போதிப்பதென்றால், தனது ஒழுக்கத்தினாலேயே வழி காட்டவேண்டும். நியாய சபைகளுக்குப் போகாமல், தங்களுக்குள்ளேயே வழக்குகளைத் தீர்த்துக்கொள்ள முயற்சிசெய்யும் வழியை மக்களுக்குக் காட்டவேண்டும். தன்னைப்பற்றியும், தனது கீழ் உத்தியோகஸ்தர்களைப் பற்றியும், கெட்ட பருவங்களைப் பற்றியும் அவர்கள் முறையிடுவதை யெல்லாம் செவிசாய்த்துப் பொறுமையாகக் கேட்க வேண்டும். தன்னால் செய்யக்

கூடிய உதவியைச் செய்யவேண்டும். இதற்கு மேலொன்றுஞ் செய்ய முடியாவிட்டால், இன்சொல்லாவது கூறவேண்டும்." இங்ஙனம் மதமாற்ற விஷயங்களில் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் தலையிடக்கூடாதென்று மன்றோ கூறினாரேனும், அவருடைய கடவுளன்பு குறைவுடைத்து எனச் சொல்லிடலாகாது. அவர் நாள்தவறாமல் சத்திய வேத புத்தகத்தைப் படித்துவந்ததும் அப்புத்தகத்திலிருந்து அடிக்கடி மேற்கோள்கள் எடுத்துக் காட்டியிருப்பதுமே இதற்குச் சான்று.

இனி, மன்றோ கவர்னராயிருந்தபொழுது தமது நேரத்தை எவ்வாறு கழித்தாரென்பதை யறிந்துகொள்ளப் பலர் ஆவலுள்ளவராயிருப்ப தியல்பே. ஆதலின், அதுபற்றிச் சிறிது எழுதுவாம். அவர் காலையிலெழுந்தவுடன் இரண்டு மூன்று மணிநேரம் வெட்டவெளிகளிற் கழிப்பார். அவரது தலைநகராகிய சென்னையிலோ நாட்டுப்புறமாகிய கிண்டியிலோ அவர் இருந்தழி, வாரத்தில் நான்கு நாட்காலையில் குதிரைமீதேறிச் செல்வர்; மூன்று நாட் காலையில் நடந்துசெல்வர். நடந்து செல்லுங்கால் வந்துசேரும் மக்களோடு தாராளமாகப் பேசிக்கொண்டே போவார். எல்லாருங் கூறுவதைப் பொறுமையாகக் கேட்பார். அவர்கள் கொடுக்கும் மனுக்களைத் தமது நீண்ட கரத்தால் வாங்கிக் கொண்டு பார்த்துப் பதிலெழுதுவதாக வாக்களிப்பார். வாக்களித்தபடி நடப்பர். காலை நேரத்தை இங்ஙனஞ் சிறிது கழித்தபின், வீடு திரும்பி உடையணிந்து ஏதேனும் எழுதியும் படித்தும் சிலகால் கழித்து, எட்டுமணிக்குக் காலை யுண்டிக்கமர்வர். எவரேனும் கவர்னரோடு தனித்துப் பேசவேண்டியிருந்தால், அவர் காலை யுண்டிக்கு வருவதுண்டு; வந்தக்கால், வரவேற்கப்பட்டு விசாரிக்கப்படுவர். ஒன்பதரை

மணி ஆனவுடனே மன்ரோ தமது சொந்த அறைக்குட் புகுந்து, அங்கேயே மாலை நான்காவது மணிவரையில் பொதுக்காரியங்களில் ஈடுபட்டிருப்பர். மாலையில் நான்கு மணி யடித்தவுடன் அவர் பகற்போஜனஞ் செய்வர். அதன் பின், ஒருமணிநேரம் ஐரோப்பியர்களுடையமுறையீடுகளைக் கேட்பதிற் கழியும். பருவத்துக்கேற்றபடி, ஐந்தரைமணிக்கு அல்லது ஆறுமணிக்கு அவர் மனைவியுடன் பவனி போய்வருவர்; எட்டுமணிக்குத் தேநீர் அருந்துங்கால் குடும்பத்தாரோடு கூடிக்குலாவுமவர், பத்தரைமணிக்குப் படுக்கைக்குப் போகும்வரையில், யாரேனு மொருவரைச் செய்தித்தாட்களைப் படிக்கச்சொல்லிக் கேட்பர்; அல்லது சகாட் என்ற மேனாட்டுப் புலவர் எழுதிய புத்தகங்களி லொன்றைப் படிக்கச்சொல்லிக் கேட்பர்.

அதிகாரஞ் செலுத்துவோர் அடிக்கடி ஊர்களைச் சுற்றிப் பார்த்து விஷயங்களை நேரில் தெரிந்துகொள்ள வேண்டுமென்பது மன்ரோ கொள்கை. அதற்கேற்ப, அவர் ஜில்லாக்களில் அடிக்கடி சுற்றுப் பிரயாணஞ் செய்வதுண்டு. அவ்வேளைகளிலும், காலை யுண்டி எட்டுமணிக்கும், பகற்போஜனம் மாலை நான்கு மணிக்கும் நடக்கும். ஆனால் வெளியே பவனி வருவதற்குப் பதிலாக, போஜன முடிந்ததும் குடிகளை யுள்ளழைத்து அவர் விசாரிப்பார். கூடாரக் கதவண்டைக் கூட்டம் பல சமயங்களிற் பருத்திருக்குமாதலால், அவர் வெளியில் வந்து மக்களோடு உரையாடுவது வழக்கம். இரவில் நெடுநேரமான பின்பே, அவர் இக்கூட்டங்களை விட்டுப் பிரிவர்.

இங்ஙனம் வாழ்க்கை நடாத்திவந்த இப் பெரியார் பர்மிய யுத்தத்தில் பிரிட்டிஷார் வெற்றிபெற வுதவியதையும்

அவரது திறமையையும் மனத்திற்கொண்ட கும்பெனியின் நிர்வாக அதிகாரிகள் அவரை ஆம்ஹர்ஸ்ட்டுக்குப் பதில் இராஜப்பிரதிநிதியாக நியமிக்க எண்ணினார்கள். மன்றோ ஆம்ஹர்ஸ்ட்டே சிறந்தவரென்றும், வேறெவர் வரினும் அவர்க் கொப்பாக விருப்பரேயன்றி மிக்காராகவிரார் என்றுங் கூறி, அப்பதவி தமக்கு வேண்டாவென மறுத்து விட்டார். இதைக் குறித்து, அவர் 1826 மே 27-ல் எழுதியுள்ள ஒரு கடிதத்தைத் தருதும்:—

"என்னை இராஜப்பிரதிநிதி யாக்கும் விஷயத்தில் எனதபிப்பிராயத்தைக் கேட்கிறீர்கள். பத்து, பதினைந்து வருஷங்களுக்கு முன்னால் இப்பதவி யளிக்கப்பட்டிருப்பின், நான் உவகையோடேற்றுக் கொண்டிருப்பேன். இப்பொழுதோ அது காலங்கழித்து வருகிறது. நான் இந்தியாவுக்கு வந்து இப்பொழுது நாற்பத்தாறு வருஷங்களுக்குமேல் ஆகின்றன. எக்காலும், நான் கஷ்டமிக்க நிலைகளில் வைக்கப்பட்டிருந்தேன். இதைத் தாங்கள் மறந்து விடுகிறீர்கள். சாதாரண விதிகளுக்கேற்ப, நான் ஏழாண்டுகளுக்கு முன்னமே இறந்துபட்டிருக்க வேண்டும். எனது உடலுரமும் மதுவுண்ணாமையும் ஏதோ என்னை இதுகாறும் அவ்வாறு போகாது வைத்திருக்கின்றன. நாடோறும் என்னுடல் கெட்டுவிட்டுப் போகிறதின் அறிகுறிகளை நான் காண்கின்றேன். எழுதும்போது என் கை நடுங்குகிறது; சென்ற ஆண்டில் என்னைப் பிடித்த ஒரு சளிப்பிணாற் காது இன்னுங் கெட்டுவிட்டது. அதிக வேலை செய்த குதிரைபோல் நான் இருக்கின்றேன். நான் சிறிது இளைப்பாற வேண்டும்.

நான் இராஜப்பிரதிநிதியாகப் போவதாயிருந்தால், உறுதியாக இரண்டாண்டிற்கு மேல் என்னால் வேலைபார்க்க

முடியாது; இவ்விரண்டாண்டுகளில் நான் குடிகளுக்கு யாதொரு நன்மையும் செய்ய முடியாது. புதிய மக்களிடையும் புதிய வேலையிலுஞ் செல்வேனுனல், இரண்டு வருஷங்களும் உண்மை நிலையை யறிந்துகொள்ளும் பொருட்டு ஆராய்வதிற் கழியும். இஃதானதும், எம்முறைகள் திருத்தப்பட வேண்டு மென்றும், எவை உள்ளவாறே தொடாது விடப்பட வேண்டு மென்றும் ஆராய்வதற்கு நாலைந்து ஆண்டுகள் ஆகும். நான் அவ்வளவு காலம் இருப்பதென்ப தாகாது. வகிக்கும் உத்தியோகத்தின் வேலைகளைச் செவ்வனே செய்ய முடியா தென்று நான் உணரும்போது, அப்பதவியை ஏற்றுக் கொள்ள நான் விரும்பேன். ஒரு வாரத்தில் நான் இப்பொழுது செய்துவரும் வேலைகளவ்வளவும் மூன்று அல்லது நான்கு நாட்களில் முன்னர் என்னுல் செய்யப்பட் டிருக்கக் கூடும்.”

இக் காரணங்களால் மன்றோ இராஜப்பிரதிநிதி பதவி வேண்டாமென வுரைத்தார். 1823-ல் பிறந்திருந்த இரண்டா வது குழந்தையின் உடனலக் குறைவால் திருமதி மன்றோ ஊருக்குத் திரும்பவேண்டியவர் ஆனர். மன்றோ தம்மை வேலையினின்று விடுவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண் டும், அவருக்கு மாற்றுள்வந்து சேராததனுல் விடுவிக்கப் படவில்லை. இதற்குள்ளாக, அவர் செங்கற்பட்டு, தென்ஞர்க் காடு, தஞ்சை, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கோவை, நீலகிரி ஆகிய ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணஞ் செய்து, தஞ்சை திருநெல்வேலி ஜில்லாக்களில் வழங்கி வந்த அரசிறை முறையைப்பற்றி விசாரித்து வந்தார். பின், ஒப்புவிக்கப்பட்ட ஜில்லாக்களைக் கடைமுறையாகச் சுற்றிப்

பார்க்கும் பொருட்டு அவர் 1827 மே மாதத்திற் புறப்பட்டார்.

புறப்பட்டுச்சென்ற அவர் கடப்பை ஜில்லாவில் சுற்றி வரும்போது சில செங்குத்தான குன்றுகளை நோக்கியதும், "அப்பள்ளத்தில் எவ்வளவழகான பூமாலையைப் பரப்பியிருக்கிறார்கள்!" என்று வியந்து கூறினர். சூழ்ந்துள்ளோர் சுற்றிமுற்றும் பார்த்து ஒன்றுங் காணவில்லையே யென்று சொல்லினர். "ஏன்? எல்லாம் அங்குளவே! தங்கத்தாற் செய்யப்பட்டுளவே!" என்று மன்ரோ உரைத்தார். மீண்டும் யாவரும் நோக்கினர், யாதுங் கண்டிலர். ஆனால், வயது முதிர்ந்த சேவகன் ஒருவன் "அங்கோ! நல்ல பெரியார் ஒருவர் விரைவில் இறப்பரே!!" என்று கூறினன். இக்கதையை வெவ்வேறு விதமாகக் கடப்பை ஜில்லாவில் இன்றுஞ் சொல்லி வருகின்றனர்.

ஜூலை 4-ஆந் தேதி குத்தியைச் சேர்ந்த மன்ரோ தமதாட்களுட் சிலர் வாந்திபேதியால் வருந்தக்கண்டார். அவர்களுக்கு ஆவனசெய்யப் பணித்தார். பின்னர், அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, இருபத்திரண்டு மைலுக்கப்பாலுள்ள பட்டிக்கொண்டை என்ற இடத்தை ஆறுந்தேதி காலை மன்ரோ நண்ணினர். காலை யுண்டியானதும், கூடாரசபைக்குச் சென்று கலெக்டரோடு ஆகவேண்டிய வேலையைப் பார்த்தார். இவ்வாறிவர் வேலைபார்த்துக் கொண்டிருக்கு மெல்லையில், திடீரென இவருக்கும் வாந்திபேதி கண்டது. மருத்துவர் வந்து பார்த்து மருந்து கொடுத்தார். குறிகளிற் குணக்கேடின்மையால் அச்சத்திற்கிடமில்லை யெனச் சொல்லி அவாகன்றார். வைத்தியர் வெளியே சென்றார் காலை ஒன்பது மணியளவில். ஒருமணி கழித்து மன்ரோ படுத்தபடியே

சிறிது நேரம் பொது விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். நாழி யாகவாக, அவர் நிலை தளர்வடைந்தது. ஆனால் அவர் கவலையாதல் அச்சமாதல் காட்டவில்லை. இதற்கு முன் அவ்வாறு தாம் நோயுற்றிருப்பதாகவும், கவலைக்கிடமில்லையென்பதாகவும் அவர் பக்கத்திருந்தோர்க்குப் பகர்ந்தார். அவர்களுக்கெல்லாம் துன்பந் தந்ததற்காக வருந்தினார். அந்நோய் தொற்றக் கூடியது என்று சொல்லப்பட்டதால் அவர்களெல்லாம் தமது பக்கத்திருக்கக் கூடாதெனமொழிந்தார்.

ஆனால், ஒரு மணிக்குமேல் நோய் முண்டிவிட்டது. மூன்று மணி யாகுங்கால், "இவ்வளவு நன்றாகப் பேணப்படும் பொருட்டாவது நோயுற்றிருப்பதேற்கும்" என்று நயமாக அவர் நவின்றார். சுற்றி யிருந்தோரைப் போகும்படி மீண்டும் அவர் வேண்டினார். நான்கு மணிக்கு அவர் "என் குரல் ஒடுங்க ஆரம்பித்து விட்டது" எனக் கூறினார். இவையே அவர் கூறிய இறுதி மொழிகள். பின் ஒன்பதரை மணிக்கு, அந்தோ! மன்றோ இவ்வுலகினின்றும் பிரிந்தார்.

அவரதுடம்பு உடனே குத்திக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அவண், அன்றிரவே அஃது அடக்கம் பண்ணப்பட்டது. அடக்கஞ் செய்யுங்கால் பார்த்திருந்த ஒருவர் தமது அருமைத் தகப்பனாரின் மரணங்கூட, மன்றோவின் மரணங் கொடுத்த துன்பத்தைப்போன்ற அளவு துன்பந்தரவில்லையென்று கூறியுள்ளார். மக்களின் அன்பையும் நம்பிக்கையையும் மன்றோ மிகுதியாகப் பெற்றிருந்தமையின் தங்கள் குடும்பத்துணிகழ்ந்ததோர் இழவைப்போற் பாவித்து மக்கள் பலர் வருந்தினார்கள்.

இந்தியாவிலும் இங்கிலாந்திலும் மக்கள் எங்ஙனம் துக்கம் கொண்டாடினார்களென வெழுதப்புகின் விரியும். எனினும், ஒரு சிறிது கூறுவாம். கடப்பை ஜில்லா மக்கள் பணம வசூல் செய்து, குத்தியில் ஒரு சத்திரம் கட்டி, அதைச் சுற்றி ஒரு மாந்தோப்பமைத்தனர். அச் சத்திரத்தை மன்றோவின் பெயரோடிணைத்து வைத்தனர். அச் சத்திரத்தில் இப்பொழுதும் மன்றோவின் திருவுருவப் படமொன்று இருந்து வருகின்றது. அதைப் போன்ற திருவுருவப் படங்களால் பெல்லாரிக் கச்சேரியும், ஒப்புவிக்கப்பட்ட ஜில்லாக்களிலுள்ள பொது நிலையங்களும், சென்னை ரெவின்யு போர்டாலயமுந் திகழுகின்றன. சென்னை அரசாங்கத்தார் அச் சத்திரத்தின்பாங்கர் ஒரு குளம் வெட்டுதற்கும், அதைப் பாதுகாத்து வர ஆட்களை யேற்படுத்துதற்கும், கல்லறை யொன்று செய்விப்பதற்கும் வேண்டிய பொருளை ஒதுக்கி வைத்தனர். பட்டிக்கொண்டையில் மன்றோ விண்ணுலகடைந்த இடத்தின் மருங்கே ஒரு சோலை யமைக்கும்படியும் ஒரு குளம் வெட்டும்படியும் செய்தனர். கீழ் இந்தியக் கும்பெனியின் நிர்வாகிகள் தமக்கு மன்றோவிடமுள்ள மதிப்பைத் தெரிவித்துக் கொண்டனர்; தமது ஆழ்ந்த அனுதாபத்தைக் குடும்பத்தாருக்கும் அறிவித்தனர்.

1831 ஏப்ரல் திங்களில் மன்றோவது உடல் சென்னைக்கு எடுத்து வரப்பட்டது. கோட்டையிலுள்ள மாதா கோவிலில் அஃது அடக்கஞ் செய்யப்பட்டது. அவ்விடத்தில் மதில் போன்ற ஒரு சிறு பீடமும் மார்பளவுள்ள மன்றோவின் வெள்ளைக் கல்லுருவமொன்றும் இன்றுங் காணலாம்படி யுள்ளன. வெண்கலத்தாற் செய்யப்பட்ட மன்றோவது உருவச் சிலையொன்று 1839-ஆம் வருஷம் அக்டோபர் மாதம்

இருபதாம் நாளன்று சென்னையிற் கோட்டைக்குப் போகும் வழியில் மலைச்சாலைக்கு அருகாமையில் திறந்து வைக்கப்பட்டது. அச்சிலை மன்றோ குதிரை யூர்ந்து போவது போன்று அமைக்கப்பட்டுள்ளது. அவர் சுற்றுப் பிரயாணஞ் செய்த காலங்களில் புகை வண்டிகள் கிடையாவன்றோ? அவர் குதிரைமீதேறி ஊர்ஊராகச் சென்று, குடிகளைநண்ணி, அவர்களுடைய குறைகளைக் கேட்டு, முறைசெய்து வந்ததை நினைப்பூட்டுதற்கே போலும் இச்சிலை இங்ஙனமமைக்கப்பட்டுள்ளது!

மன்றோ மாண்ட மூன்றும் நாள் கீழ்வருங் குறிப்பு அரசாங்கம் வெளியிட்ட ஒருசிறந்த தாளிற் காணப்பட்டது:- "அவரது உரம் பெற்ற அறிவும், அடையலாகாச் சாமர்த்தியமும், இளைப்பிலா வுழைப்பும், அறிவினீட்டமும், கீழ் நாட்டுப் பாண்டித்தியமும், சுதேச வாசிகள் போர்ச் சேவகர்கள் ஆகியோருடைய பழக்க வழக்கங்களை யறிந்திருக்கும் ஆற்றலும், பொறுமையும், காட்சிக்கெளிமையும் இனிமையும், அவர் எவ்வேலையிலிருந்திருந்தாலும் அவருக்குப் பீடும்பெருமையும் அளித்திருக்கும்." சென்னையில் ஒரு பெரும் பொதுக் கூட்டம் கூடி, மன்றோவின் மறைவைக் குறித்து எல்லா வகுப்பாரும் துக்கப்படுவதாகவும், அவருக்குள்ள புகழில் பெருமை கொள்வதாகவும், தீர்மானங்கள் நிறைவேற்றிற்று. அக்கூட்டத்திற் கூடினோர் பலர் மன்றோவின் உருவச்சிலைக்காக நிரம்பப் பணங் கொடுத்தனர். ஒன்பதாயிரம் பவுன் வசூலிக்கப்பட்டது. அப் பணங் கொண்டு அமைக்கப்பட்ட உருவச்சிலை இன்றும் நின்று, சாமர்த்தியமும், உழைப்பும், நேர்மையும், பொதுஜன ஊழியத்தில் விழைவும் எப்படி ஒருவரை மிகத் தாழ்ந்த நிலையிலிருந்து மிக வுயர்ந்த நிலைக்குக் கொண்டு சேர்க்கும் என்று காட்டி வருகின்றது.

# பதினோராம் அத்தியாயம்

---

## மன்றோவும் இந்திய மக்களும்

"இந்தியா சகாத்லாந்து ஆகிய இரண்டு தேசங்களிடத்தும் எனக்குள்ள பற்று ஒரு நீர்மைத்து. இந்தியா தேசத்தையும் அதன் தட்ப வெப்ப நிலையையும், நம்மூரையும் அதனிலையையும் விட விரும்புகின்றேன். இந்தியாவிலேயே நமது சுற்றத்தார் நண்பரெல்லாரு மிருப்பாரோயாகில், ஊருக்கு வரவேண்டுமென் றெண்ணவே மாட்டேன். இப்பொழுது ஊருக்குத் திரும்ப வேண்டுமென்று ஆவலுடையவனாயுள்ளேன்; ஆனால், பெரிய வருத்தத்துடன்தான் நான் இந்தியாவை விட்டு வரக் கூடும். இந்தியாவில் என் வாழ்நாளிற் பெரும்பாகத்தைக் கழித்து விட்டேன்; நான் மக்களோடு நன்றாகப் பழகியுள்ளேன்; தட்பவெப்ப நிலை எனக்குப் பிடித்திருக்கிறது; மலைகளின் தோற்றம் அழகாக விருக்கின்றது. இக்காரணங்களால், இஃது எனது தேசமாக இல்லாமற் போயிற்றே என்று வருந்துகின்றேன். எனது தேசமாக இருப்பின், எனது சுற்றத்தார் இங்கே இருப்பர். நான் அவர்களைப் பார்க்கும்பொருட்டுச் சகாத்லாந்து செல்லவேண்டியிராது" என்று மன்றோ நினைத்து வருந்தியுள்ளா ரென்பது அவருடைய கடிதங்களிலிருந்து அறியப்படுகின்றது. இதனால், மன்றோவுக்கு இந்தியாவினிடத்திருந்த பற்று அறியப்படும்.

இந்திய மக்களிடத்தும் அவர் பற்றுவைத்து அன்பு காட்டினர் என்பது அவர் சுதேசவாசிகளைப் பற்பல அரசாங்க உத்தியோகங்களில் நியமிக்கவேண்டும் என்று மன்றாட வேண்டியதிலிருந்தறியப்படும். அதைக் குறித்து அவர் எழுதிய குறிப்புக்கள் சிலவற்றைக் காண்பாம்.

"தலத்துக்குரிய மக்களிடமிருந்து அறிந்துகொள்வதற்குமேல் நாட்டுநிலையைப்பற்றி இவ்வரசாங்கம் ஒன்றும் அறியாது. மற்ற நாடுகளில், அரசாங்கமும் அதன் உத்தியோகஸ்தர்களும் குடிமக்களின் பிரிவொன்றையே சேர்ந்தவராயிருப்பர். அதனால், பொதுச் சட்டங்களைக் குறித்து நாட்டாருடைய கருத்து இன்னதென்பதை அவர் எளிதில் அறிந்துகொள்ளக் கூடும். இங்கு, சட்டஞ் செய்வதில் தொடர்பில்லா மக்களுக்குச் சட்டங்கள் செய்கிறோம். அம்மக்களைப் பற்றிய அரசாங்கத்தின் அறிவோ அற்பமானது. அறிஞரும் உழைப்பாளருமான உத்தியோகஸ்தர்கள் தலத்திலிருந்து, தீர விசாரித்து, சுதேசவாசிகளின் கருத்தை அறிவித்தாலன்றி, மக்களுடைய தகுதிக்கேற்ப அரசாங்கம் சட்டத்தைச் செய்திட இயலாது. தலத்திலுள்ள உத்தியோகஸ்தர்களாமும் அனுபவமுள்ள சுதேச ஆட்களால்தான் இக் காரியத்தைச் செய்து கொள்ள மாட்டுவர்.

சுதேசவாசிகளைப் பொறுப்பும் பொருளும் பொருந்திய பதவிகளில் வைக்காமல் விலக்கி வருவதால் நன்மை யொன்றும் உண்டாகவில்லை. எந்தத் தீமையை விலக்குவதற்கும் ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களை அதிகப்படுத்தச் சிந்தனை செய்யப்படுகிறது. இவ் வைரோப்பியர்களை வைப்பதில் பணம் நிரம்பச் செலவாகின்றது. அன்றியும், சுதேசவாசி

லுங் குறைந்த வல்லமையை ஐரோப்பியர்கள் பெற்றிருப்பதால், அவர்களைக் குறைக்க வேண்டுமே யொழிய, அதிகப்படுத்தக் கூடாது. இரண்டாந்தரமான வேலைகள் வற்றிலும் பொதுவாகவும், நியாய விசாரணை வேலையிற் சிறப்பாகவும் ஐரோப்பியரை விட இந்தியர் நன்றாக வேலை பார்க்கக் கூடிய திறமை படைத்தவர்.

ஆனால், சுதேசவாசிகள் கைக்கூலி வாங்கி விடுவார்களாதலால், அவர்களை நம்பக்கூடாதெனச் சொல்லப்படுகிறது. இஃது ஒரு பழைய ஆட்சேபம். இவ்வாட்சேபத்தை, ஒத்த தகுதியுள்ள எந்தத்தேசத்து மக்களிடத்தும், எழுப்பக் கூடும். இங்கிலாந்து கலாற்றீர்வை இலாக்காக்களில் உள்ள கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள் யோக்கியத்திற் பேர்போனவர் என்று எவரும் எந்நாளுங் கருதியதில்லை. உதாரணங்களுக்காக நாம் இங்கிலாந்துக்குப் போகவேண்டா. இந்தியாவிலே கும்பெனியின் உத்தியோகஸ்தர்கள் சுதேச காரியகர்த்தாக்களோடு சேர்ந்துகொண்டு பணம் ஈட்டி வந்தது எல்லார்க்கும் நன்றாய்த்தெரியும். அவர்களுடைய படியை லார்டு கார்ன்வாலிஸ் அதிகப்படுத்திய பிறகுதான் அவர்கள் ஒழுங்குக்கு வந்தார்கள். இம்மாதிரி சுதேசிகளுக்குஞ் செய்தால், இவர்களும் அவ்வாறாவார்கள். இவர்களுக்கு நல்லசம்பளம் கொடுக்காவிட்டால், கெட்ட ஆட்களை நமக்குக் கிடைப்பர். பொறுப்புக் கேற்றபடி சம்பளத்தை அதிகப்படுத்தினால், நல்ல ஆட்கள் கிடைப்பர். ஐரோப்பியர்களைவிட இந்தியர் நன்றாக வேலைசெய்யக்கூடிய எப்பதவியிலும் இந்தியரையே வைக்கவேண்டும். எல்லா அசல்வழக்குகளையும் விசாரிக்க இந்தியரே சிறந்தோர். மறுவிசாரணைகளைப் பார்க்கவென்றே ஐரோப்பியர் நியமிக்கப்பட வேண்டும்.

நமது இராணுவ பலத்தின் செல்வாக்கால் நமது அரசாங்கம் நன்குமதிக்கப்பட்டு வரலாம். ஆனால், அதிகார விருப்பத்தைத் தூண்டுதற்கேற்ற வேலை யொன்றாஞ் சுதேசிகளுக்குக் கொடுக்கப்படாத வரையில், அரசாங்கம் பொது மக்கட் பிரியத்தைப் பெற்றதாகாது. சுதேசிகளிடம் நம்பிக்கையில்லை யென்று சொல்லி, அவர்களை முக்கிய பதவி யொன்றிலும் வைக்காமல் இருந்து வருவதால், அவர்களுடைய குணங்கள் இன்னும் இழிவடையும். இவ்வாறு ஆவதற்கு நாம் ஏதுவா யிருப்பது பெருந்தன்மை யற்றதாகவுந் தகுதி யற்றதாகவு மிருக்கிறது.

நமது சொற்ப ஆட்டொகையைக்கொண்டு ஒரு மக்கட் டொகுதியின் வேலையெல்லாம் பார்த்து விடலாமென் றெண்ணி, நாம் இறுமாந்துள்ளோம். நம்மவர் பத்து மடங்கு அதிகமாக இருந்தாலும் அதற்கேற்பத் தீமையே வளரும். இப்பொழுதே முக்கிய பதவி யொவ்வொன்றையும் நாமே வைத்துக் கொண்டுள்ளோம். சுதேசிகள் வகித்துவரும் இன்னுந் தாழ்ந்த பதவிகளையும் எடுத்துக் கொள்வோமானால் நாம் நிலையிற் றாழ்வதோடு, கடமைகளையும் அவ்வளவு நன்றாகச் செய்யமாட்டோம். அவர்கள் வகித்துவருந் தாழ்ந்த பதவிகளுக்கேற்ற தகுதிகள் எல்லாவற்றையுஞ் சுதேசிகள் ஐரோப்பியர்களைப் போலவாவது நன்றாகப் பெற்றிருக்கிறார்கள். பொதுவாக ஐரோப்பியர்களைவிட அவர்கள் சிறந்த கணக்கர்கள். பொறுமையும், உழைப்பும், தொழிற்றிறமும், தேசத்தின் நடையுடை பாவனை இவற்றினறிவும் அதிகமாக அவர்கள்பாற் காணப்படுகின்றன.

மேலும், இந்தியர்களிலிருந்து ஆட்களைத் தேர்ந் தெடுப்பதா யிருந்தால், அனேகம் பேரிலிருந்து வேண்டிய

பேரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளக்கூடும். ஐரோப்பியர்களிலிருந்து எடுத்துக் கொள்வதா யிருந்தாலோ, கும்பெனியாட்கள் சிலருட் சிலரையே பொறுக்கிக் கொள்ளவேண்டும். இதனால், தகுதி வாய்ந்த இந்தியர்கள் ஐரோப்பியரினு மதிகமாகக் கிடைப்பார்கள் என்பது தெளிவு.

சுதேசிகள் பிழைசெய்கிறார்களென்று ஒப்புக்கொள்வது அவர்களை வேலையில் வைத்துக் கொள்ளாததற்குக் காரண மாகாது. நாமும் பல சமயங்களிற் பிழை செய்கின்றோம். நம் செய்யும் தவறு புலப்படுவதில்லை; புலப்பட்டாலும் அரிதாகவும் அற்பமாகவுந் தோன்றும். அவர்கள் செய்யுந் தவறோ இவ்வாறு எண்ணப்படுவதில்லை. பிழையைக் கண்ட வுடனே அவர்களை நீக்கிவிட்டு, வேற்றாட்களை வைக்க வேண்டுமென நினைக்கிறோம். ஐரோப்பியரையோ, பெருந் தீங்கு செய்திருந்தாலொழிய, நீக்குவதில்லை. ஐரோப்பியனை யனுப்பிவிட்டால் வேற்றாள் கிடைக்கமாட்டான் என்றும், கிடைத்தாலும் அவனினுஞ் சிறந்தவனாக இரான் என்றும் நினைக்கிறோம்! அவன் திறமை எங்ஙன மிருப்பினும், அவன் ஒன்றிலில்லாவிட்டால் மற்றொரு வேலையில் வைக்கப்பட வேண்டியவனா யிருப்பதால், பொது மக்கட் செலவில் நின்று கொண்டிருப்பான். சுதேசிகளை வைத்துக் கொள்வதால் ஏற்படக்கூடிய நலங்கள் எல்லாவற்றையும் புறக்கணிக்க, அவர்களது கைக்கூலிபெறுஞ் செயலொன்றே சாலுமெனக் கூறுவர் சிலர். இதைப் போக்க ஐரோப்பியர்களை அதிக மாக்குவதைத் தவிர வேறு வழியில்லை யென்றுங் கூறுவர். இவ்வழியால், செலவு அதிகப்படுமே யொழியக் காரியம் நிறைவேறாது. பெருஞ் சம்பளத்திலுள்ள ஐரோப்பியர்களும் கைக்கூலி வாங்குகிறார்க ளென்பதற்குச் சான்றுகள் உள.

ஐரோப்பியரை அதிகமாக்கி அக்காரணத்தால் அவர்களது சம்பளத்தைக் குறைத்தால், கைக்கூலி பெறுவோர் அதிகமாவரே யன்றிக் குறையார்.

கைக்கூலி வாங்கும் கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள் சிலருமில்லாத நாடு எக்காலத்தும் இருந்ததில்லை யெனக் கூறலாம். இந்தியா மாத்திரம் இதற்குப் புறனடையாக இருக்கவேண்டுமென்று நாம் எதிர்பார்க்கலாகாது. பரிதானம் வாங்குவதை அடியோடு நம்மால் அழிக்க முடியாதாயினும், அதனால் பொதுமக்களது உரிமைக்குக் கேடுவராத அளவாவது அதனைத் தடுக்கவேண்டும். மற்ற நாடுகளில் இதற்கேற்ற வழி யின்னதெனக் கொண்டிருக்கு மொன்றையே நாமுங் கொள்ளவேண்டும். அஃதாவது, சுதேசவாசிகளை நாம் மரியாதையாக நடத்தவேண்டும்; அவர்களிடத்து நாம் நம்பிக்கை வைக்கவேண்டும்; அவர்களுடைய பதவிகள் மரியாதை வாய்ந்தவையாயிருக்கும்படி செய்யவேண்டும்; அவர்களது பதவிக்கேற்ற சம்பளத்தைக் கொடுத்து மயங்காதிருக்கும்படி செய்யவேண்டும்.

நமது அதிகாரத்தைப் பலப்படுத்திக் கொண்டு சுதேசிகளை இழிந்த நிலையில் விட்டுவிடுவதில் நமக்கு விருப்பமா? அன்றி, அவர்களது நடையை நலப்படுத்தி, நாட்டு நிர்வாக விடங்களை வகிக்குந் தகுதிக்கு அவர்களை ஆளாக்கி விடுதற்கு நாம் முயலவேண்டுமா? பின்னதே நமது நோக்கமாக ஐயமின்றி யிருக்கவேண்டும். இந்தியாவோடு நம் தொடர்பு அற்றுப்போகக்கூடிய காலத்திலே, இவர்களது ஆட்சியால் மக்கள் மிகவு மெளியவரானதும், முன்னிருந்த ஆளுந் திறமையிற் குறைந்தவரானதுமே பயன் என்று சொல்லப்

படாமல் இருக்கவேண்டிய வழியில் நாம் நடந்துகொள்ள வேண்டும். மக்களின் தகுதியைத் திருத்தமுறச் செய்வதே நமது நோக்கமாக இருக்கவேண்டும். இந் நோக்கத்தை நிறைவேற்ற வழிகள் பல வெவ்வேறு விதமாகச் சொல்வார்கள். ஆனால், மக்களைப்பற்றி அவர்களுக்கே மேலான எண்ணமுண்டாகும்படி செய்ய முயல்வதாலும், அவர்களிடத்து அதிக நம்பிக்கை வைப்பதாலும் இது நிறைவேறுமென நான் நினைக்கிறேன். முக்கியமான பதவிகளில் அவர்களை வைப்பதாலும், அரசாங்கத்திலுள்ள உத்தியோகங்கள் எல்லாவற்றிற்கும் அவர்களைத் தகுதியுடையவராகச் செய்வதாலும் இந்நோக்கம் கைகூடுமென்றும் நினைக்கிறேன்.

நமது தற்கால அரசாங்கமுறையில் அதிகாரம், நம்பிக்கை, வருமானம் முதலியவையுள்ள இடங்களிலிருந்து சுதேசமக்கள் விலக்கப்படுவதால், அவர்கள் மந்தமடைகிறார்கள். இங்ஙனமிருக்க, நமது சட்டங்களும் பள்ளிப் புத்தகங்களும் அவர்களது தகுதியை மேம்படுத்த முயலுவதாற் பயனென்? சீர்திருத்துதற்கு நொய்யதோர் ஆயுதத்தையும் கேடுசெய்தற்கு வலியதோர் ஆயுதத்தையும் நாம் கைக்கொள்வதால், முன்னேற்றமடையலாம் என்று எதிர்பார்ப்பது தகாது. நல்ல தகுதிகளைத் தேடிக் கொண்டாலுங்கூட, சுதேசமக்கள் பொருளையோ புகழையோ அடைய முடியாதபடி வைக்கப்பட்டிருக்கிறார்கள்; சிறுவேலைகளை யடைதற்கே தகுதியுடையராகக் கருதப்படுதலின், திருந்துவதில் அவர்களுக்கு ஊக்கமிருக்குமென்று நம்பவேண்டா. அவர்களைத் திருத்தவேண்டுமென்பது நம் நோக்கமாயிருந்தால், நமது தலைமைக்கு ஊறுசெய்யாத பதவி எல்லாவற்றையும் அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். மேலான உத்தியோகத்தின்

கடமைகளை நமது விதிகளின்படியும் கருத்துப்படியுஞ் செய்ய அவர்களால் இப்பொழுது இயலாதெனினும், சிறிதுசிறிதாக அவர்களுக்கு மேலதிகாரங் கொடுக்கவேண்டும். போகப் போக மேலான பதவிகளை வகிக்குந் திறமை அவர்களுக்கு வந்துவிட்டதை நாமறிய அறிய, மேன்மேலும் உயர்ந்த பதவிகளை அவர்களுக்களிக்க வேண்டும்.

முக்கியமாக, அரசிறை இலாகாத் தலைமையில் அறிவும் அனுபவமும் வாய்ந்த இந்தியர்களை நியமித்து, ரெவினியூ போர்டுக்கு உதவிபுரியுமாறு செய்யவேண்டும். மற்ற இலாகாக்களிலேயே ஐரோப்பியர்க்குதவியாக இந்தியரை நியமிக்கும் பொழுது, கஷ்டமு முக்கியமுமான கடமைகளையுடைய இவ்விலாகாவில் அவர்களை நியமிக்காதிருக்கலாமா? இதில் அவர்களை நியமனஞ் செய்யாது விடுவதால், நமக்கும் அவர்களுக்குந் தீங்குண்டு. அவர்களில்லாமல் அவ்விலாகாவை நன்றாக நடத்த முடியாது.”

இங்ஙனம், சுதேசமக்களுக்காதரவு அளிக்கவேண்டுமென்று அடிக்கடி மன்றோ வற்புறுத்தி வந்தாரேனும், அவ்வாதரவு வெறுஞ் சோம்பேறிகளுக் களிக்கப்படலாகாது என்று அவர் கருதினர். இதைக் குறித்து அவர் எழுதியுள்ளதாவது:—“அரசாங்கம் ஏழைகளுக்குக் கூலிகொடுப்பதன்றி, இனாமாகக் கூலங்களை வழங்குவதாயிருந்தால், காரியம் கெட்டுப்போம்: அவர்கள் எண்ணிக்கையிற் பெருகிவிடுவார்கள். பொதுப் பாதுகாப்புக்கு ஆசைப்பட்டு அவர்களெல்லாம் ஒன்றுகூடிவிடுவார்கள்; தங்கள் உழைப்பாற் பிழைக்கும் இனிமையான வழியை விட்டுவிடுவார்கள். மற்றத் தேசங்களிற் போலவே இந்தியாவிலும், தானம் பெறுவதால்

ஏழைகள் அதிகப்படுகிறார்கள்; எவ்வளவு பெருந்தொகையைத் தானத்திற்காக வைத்திருந்தாலும் அவ்வளவையும் வேண்டும் எளியவர்கள் தோன்றிவிடுவார்கள். இத்தேசத்தில் எங்காகிலும் ஒரு மூலையில் தானியம் வழங்கப்படுவதாயிருந்தால், அச்செய்தி விரைவில் தொலையான இடங்களுக்கும் பரவிவிடும்; கொடுக்கப்படுவது சிறிதாக இருந்தாலும் பெரிதாகக் கூறப்படும்; இக்காலை தங்கடங்கள் உழைப்பாற் பொருளாற்றிவரும் ஏழைகள் எளிதாகப் பணத்தைப் பெறக் கூட்டம் கூட்டமாய் அக்காலை ஓடிவந்து விடுவார்கள். விரைவில், இக் கூட்டம் பொறுக்கலாற்றாது பெருகும்; அவர்களிடைப் பஞ்சமுந் தோன்றும். இவ்வேழைகள் கிராமங்களிலிருந்து ஓடிவந்ததால் ஏற்படும் தீமை இஃதொன்றன்று; அவர்களது ஊழியத்தை யிழந்தோர்வேறு வருந்துவர். ஆட்கள் குறைவால், நிற்கும் பயிர்களும் வரப்போகுஞ் சாகுபடியும் துன்புறும்."

இக்காரணங்களால், எளியவர் என்று சொல்லி வருவோர்க்கு வேலையின்றிச் சோறு தினந்தோறும் போடுவது தவறென்று மன்ரோ கருதியதறியப்படும். வேலைசெய்ய வலிமை வாய்ந்த மக்களுக்குச் சோறு வாளா அளிப்பதென்றால், மடிதான் மிஞ்சும். மக்கள் மடியுடையராவதிலும், வீண்பேச்சுப் பேசுவதிலும் மன்ரோவுக்கு வெறுப்புண்டாயிற்று. வீண்பேச்சால் அவரை வருத்தப்படுத்திய சிலரைப் பற்றி அவர் தர்மபுரியிலிருந்து எழுதியிருப்பதைக் காண்பாம். "என்னைக் காண வருபவருட் பலரைக்காண எனக்கு விருப்பமுண்டு ஆனால், சில வேளைகளில், அலுத்துப்போகும்படி பேசும் சிலர் வந்துசேர்கிறார்கள். இந்நாட்டிற் சத்திரங்கள் இல்லை; அதனால், வழிப்போக்கன் எவனும் தெரிந்தாலுந்

தெரியா விட்டாலும்," "சாலையிலுள்ள உத்தியோகஸ்தன் வீட்டில் தங்கிவிட்டுப் போவான். அலுக்கச்செய்யுமாள் என்னிடம்வந்தால், காலை நேரமாத்திரமிருந்து கழிகின்றானல்லன்; பகலு மிரவுங்கூட இருந்துவிடுகின்றான்; அவனுக்கு ஓரறை யளித்து, சில செய்தித்தாள்களும் பத்திரிகைகளும் கொடுத்து, அவன் வேலையைப்பார்க்கும்படி சொல்லிவிட்டு என் வேலையைப் பார்க்கத் தொடங்குவேன். சில வேளைகளில், அவர்களுடைய பேச்சுக்களால் எனக்குத் தலைவலி கண்டிருக்கிறது. அறிவிலியொருவன் பேசுவதைக் கேட்பதைவிட எந்நேரமும் வெயிலில் வேண்டுமானாலும் நடந்து செல்வதே மேல் என நான் பலகால் நினைப்பேன். காண வருவோர் எல்லாரையும் ஒருங்கே காண்பது நல்லதென் நான் நினைப்பதுண்டு. ஒருவர் இருவராக வந்தால் யாருடன் பேசுவது என்ற விஷயத்தை முடிவு செய்துகொள்ள எனக்கு உரிமை வேண்டுமென்றும் நினைப்பதுண்டு. ஒவ்வொருவரையும் தனித்தனியாகக் காண்பதென்பது கஷ்டமான காரியம். சண்டையினின்றுங் கொலையினின்றும் நம்மைப் பாதுகாக்கும்படி கடவுளை வேண்டுதற்குப் பதிலாக, காணவந்து பயனில பேசுவோருடைய தொல்லையிலிருந்து பாதுகாக்கும்படி வேண்டல் மேல். முன்னது அரிதாக நிகழக்கூடியது; பின்னது அடிக்கடி உண்டாகின்றது; அடிக்கடி யுண்டாகும் தொல்லையைப் போக்க முயல்வதே சிறந்தது."

இன்னொரு நாள் அவர் பெல்லாரியில் இருந்தபொழுது, அவரைச் சுற்றி எப்பொழுது பார்த்தாலும பத்துப்பேர் இருந்து தொந்தரவு தந்து வந்தனர். ஒரு நாள், காலை எழு மணியிலிருந்து பன்னிரண்டு மணி வரையில் கூட்டம்

கூட்டமாக மக்கள் வந்துபோய்க்கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் ஒரு மணி நேரம் பேச ஆசைப்பட்டார்கள். தன் தகப்பனார் பட்ட முப்பதுவருஷக் கடனைப்பற்றி ஒருவர் ஒரு பெருங்கதை கூறினார். சண்டைக் காலத்தில் தான் வெளியே சென்றிருந்தபொழுது தனது சொத்தைத் தமையன் எடுத்துக் கொண்டுவிட்டான் என்று ஒருகதை வேறொருவர் விளம்பினார். தனது மாட்டைவிட நன்றாக உழைத்த மனைவி இறந்துவிட்டதால், கிரமமான வரியைத் தன்னால் செலுத்த முடியவில்லையென மற்றொருவர் மொழிந்தார். இவை யெல்லாவற்றையும் மன்றோ கேட்டுக்கொண்டிருக்க வேண்டியவராயிருந்தார். ஒவ்வொருவரும் வருணிப்பதில் தேர்ந்தவராக இருந்ததால், அரை மணிக்குட் கதையை முடித்துவிட்டாற் போதுமென மன்றோ நினைப்பதுண்டு. கதையின் கோடியில் தொடங்கினாற் போதுமென மன்றோ அடிக்கடி சொன்னாலும், பயன்விளைவதில்லை; மன்றோ எல்லா விவரணங்களையும் அறிந்து கொள்ளவேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தி வந்தார்கள்.

மன்றோ முதன்முறை சசுத்லாந்திற்குத் திரும்பிவிட்டு வந்தபொழுது, சென்னையில் அவரைத் தெரியாதவர்களும் வந்துவந்து பார்த்துச் சென்றனர். காரணம், அவர் திருமணமாகித் திரும்பியமையோம். வந்து பார்த்தவர்களுடைய வீட்டிற்கு மணமகனும் மணமகளும் போய்வரும் வழக்கம் மன்றோவுக்குப் பிடிக்கவில்லை. வந்துவிட்டுப் போகும் ஒவ்வொருவர் வீட்டிற்கும் போய்வருவதென்றால், காலம் வீணாகக் கழியுமே யென்று நினைத்தே மன்றோ வருந்தினார்.

பேச வருவோர் குறையவேண்டுமென்று கடவுளை வேண்டிக் கொள்ளுதல் நலமென்றும், சொல்ல வருவோருடைய கதைகளால் தலைவலி கண்டுவிட்டதென்றும், மன்றோ சொல்லி வருந்தியிருப்பதால் அவர் மக்களை யிகழ்ந்தாரென்று கொள்வதற்கில்லை. வேலையற்றவரும் பயனற்ற பொருள்களைப்பற்றிக் கேட்கச் சில சமயங்களில் வருந்துவார்கள். மன்றோவோ தலைக்குமேல் வேலையை வைத்துக் கொண்டு தவித்தவர். அவ்வேலையைப் பார்ப்பதற்கிடையூறாக, வீண்பேச்சுப் பேசும்பொருட்டு வந்தவர்களை அவர் வெறுத்தாரே யொழிய, வேலையில்லாத நேரத்தில்—காலையில் நடைபோடும் நேரத்தில்—தம்மிடம் வந்தோரை அவர் வெறுத்ததேயில்லை; இன்முகங்காட்டி அவருடன் உரையாடியே வந்தார்.

மன்றோ ஆழ்ந்து நோக்கி இந்தியரது இயல்பினை யறிந்தாரென்பது பாராமஹாலின் ஒரு கிராமத்துக் குடிகளைப்பற்றி அவர் கீழ் வருமாறு எழுதியிருப்பதான் அறியப்படும்:—"காலவியல்புக் கொடுமை அவர்களை யதிகமாகப் பாதிப்பதில்லை. விறகு விலையின்றி அவர்களுக்குக் கிடைக்கிறது. அவர்களுடைய ஆடைகளால் அவர்களுக்குப் பெருஞ் செலவில்லை. இரண்டு மூன்று நாட்கள் அவர்களே வேலை செய்து ஒரு வீடு கட்டிக்கொண்டுவிடுகிறார்கள். அவர்கள் வீடு மண்ணாலாக்கப்பட்டு வைக்கோலால் வேயப்படுகிறது. அவர்கள் எல்லாரும் மணமானவர்களே. அவர்களது குடும்பம் பாரமாயிராமல் அவர்களுக்குதவியா யிருப்பதின் காரணம், ஆகுஞ் செலவிற் கதிகமாக அவர்கள் கூலி பெறுவதேயாம். இஃது இயல்பாகக் கருதப்படுவதால், மனைவியோ மகனோ மரித்ததும் வரியைத் தள்ளுப்படி மனுக்கள்

போடுவர். இந்தியாவைப் பற்றி யெழுதுங் கல்வியறிஞர்கள் சூரியனைப்பற்றிப் பேசத் தொடங்கி, அதின்கிரணங்கள் உச்சமாயிருப்பதால் மக்கள் மடியுடையராகிறார்கள் என்று கூறுகிறார்கள். இவை ஒரு புறமிருக்க, ஐரோப்பியர்களைப் போன்றவளவாவது இந்திய வேளாளர் சுறுசுறுப்பாக இருக்கின்றார்கள். அவர்களினும் பெண்டிர் இன்னுஞ் சுறுசுறுப்புடன் இருக்கின்றார்கள். சிலவகுப்புப் பெண்டிர் ஆடவர் செய்யும் வேலைகளையுஞ் செய்கின்றார்கள்; சிலர் கலப்பையைக் கையிற் பிடிக்கமாட்டார்கள்; வேறுசிலர் வயல்களில் யாதொரு வேலையுஞ் செய்யமாட்டார்கள். ஆனால் பெண்டிருட்பட உழைக்கும்வகுப்புகளே இங்கு நிரம்பவுண்டு. இவ்வகுப்பாரின்பெண்டிர் காரியங்களனைத்தும். நடத்துகின்றார்கள்; ஆடவர் அவர்களது உத்தரவை மீறுதல் அரிது. பெண்டிர்தாம் விலைக்கு வாங்குவதையும் விற்பதையுங் கடன் கொடுப்பதையும் வாங்குவதையுஞ் செய்கின்றார்கள். கச்சேரிக்குப்போய் வரி விகிதத்தைத் தீர்மானித்துக் கொண்டுவர, ஆடவனொருவன் சென்றாலுங்கூட, வீட்டினின்று புறப்படுமுன் அவன் உபதேசங்கள் பெறுகின்றான். அச்செய்திகளில் ஏதேனுமொன்றை எவ்வளவற்பமாயிருப்பினும், அவன் சொல்லாது விட்டு விட்டால், மனைவியின் வெகுளிக்கு ஆளாகின்றான். மறுநாள் கணவனை வீட்டிலேயே யிருக்கச் சொல்லி, அப் பெண் கண் சிவக்கக் கச்சேரிக்குப் போய், அரசிறை யாட்களை யெல்லாம் அச்சுறுத்துகிறாள். கச்சேரிக்கு வந்ததும், ஒரு மணிநேரம் வரையில் ஆவேசம் பிடித்தாற்போலப் பேசுகிறாள். இப் பேச்சை யவள் வீட்டிலிருந்தே தொடங்கி யிருப்பள். இப்பேச்சின் கருத்து யாதென்றால், ஒன்று மறியாத தன் கணவனை ஏமாற்றிய வஞ்சமக்கள் அங்குள்ளார் என்பதே.

அவள் பொதுவாகச் சில கேள்விகள் கேட்டுப் பேச்சை முடிப்பள். எருதுகளில்லாமல் நான் நிலத்தை உழ முடியுமா? தங்கத்தைச் செய்யமுடியுமா? இந்தத் துணியை விற்று அதைப் பெற முடியுமா? இதைச் சொல்லும்பொழுது, அவள் கட்டியுள்ள அழுக்குப் பிடித்த கந்தையைத் தொட்டுக் காட்டுகின்றாள். அந்நோக்கத்திற்காகவே அக்கந்தையை அவள் கட்டிவந்துள்ளாள். கேட்டது கிடைத்து விட்டால் உவகையோடு அவள் போகிறாள். இன்றேல், பார்க்க வேண்டுமே! இன்னொரு வன்சொற் பிரசங்கம் தொடங்கி விடுகிறாள். இது மிகவும் உரத்த குரலில் தான் நடக்கும். பின், ஆகூழில்லாத தனது தலைவனிடம் திரும்புகிறாள். அங்கு நியாயமான முறையிற் பேசுவதோடு நிறுத்திக் கொள்கிறாள் என்று சொல்வது இயலாது. அவ்விரவு கவலையால் அவனுக்குத் தூக்கம் வருவதில்லை. இருந்து கொண்டு, சுறுசுறுப்பாகப் பஞ்சு நூற்கத் தொடங்கி விடுவாள். வேளாளர் மனைவியர் நூற்கும் நூலே இந்தியாவில் அதிகம்."

மன்றோ எழுதிய மற்றொருகுறிப்பு இந்தியவணிகரைப் பொறுத்தது. அது பின் வருமாறு:— "நம்மைப்போலவே இந்தியர்களும் வியாபார விற்பன்னர்கள். கடையை அவர்கள் மறப்பதில்லை. மதமுள்பட எல்லா விஷயங்களிலும் கடையைப் புகுத்திவிடுகிறார்கள். யாத்திரீகர்கள் செல்லும் புண்ணிய பூமிகளெல்லாம் சாமான்களெல்லாம் விற்கும் சந்தைகள். மதமும் வாணிகமும் இந்தியாவில் துணைக்கலைகளாக வுள்ளன. ஒன்று மற்றொன்றோடு சேராது காணப்பட மாட்டாது. இந்தியாவின் உட்புறத்தில் ஐரோப்பிய வாணிகர் எவரும் நீண்டகாலம் தங்கி யிருக்க முடியாது.

ன்றா எனக்குத் தோற்றதற்குக் காரணம் இந்தியருடைய தொழிற்திறமே. ஐரோப்பிய வியாபாரி ஒருவன் ஒரு தத்தில் குடித்துத் தின்றும் ஒழிப்பது இந்தியனுக்குப் ன்னிரண்டு மாதத்திற்குப் போதுமான ஊதியமாய்விடும்."

மேலும், மன்றோ இந்திய மக்களின் வாழ்க்கையைப் பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார்:— "இந்தியாவின் மக்களுக்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் ஐரோப்பாவில்விட இவ்விடத்தில் நயமாகவும் மலிவாகவும் செய்யப்படுகின்றன. பஞ்சு பட்டுத்துணிகளும், தோற்கருவிகளும், காகிதங்களும் இரும்பு பித்தளை சாமான்களும், உழவுக்குரிய கருவிகளும் இங்கே நயமாகவே கிடைக்கின்றன. போர்த்திக்கொள்ளும் கம்பளிகள் மிக மிக மலிவாயுள்ளன. சிலருக்கே கண்ணாடிச் சாமான் வேண்டும். அவர்களுக்கும் முகம்பார்க்குங் கண்ணாடிகளும் விளக்குகளுமே வேண்டும். வெப்பதட்பநிலை அவர்களை எளிய வாழ்க்கைமுறை உடையராக வைத்திருக்கிறது. அதனால், வீட்டை யலங்காரஞ் செய்யும் நமது சாமான்களாற் பயனடைவாரல்லர். தாழ்ந்த மட்குடிசைகளிலிருந்து கொண்டு இலைகளிலுண்டுவரும் அவர்களுக்கு நம் சாமான்கள் எதற்காக? அவர்கள் மேசைகள் வைத்திருக்கவில்லை. செல்வர், சில பாயல்களுந் தலையணைகளும் வைத்திருக்கிறார்கள். அவர்கள் திறந்த வெளிகளிலும், பந்தர்களிலுஞ் சாப்பிடுகிறார்கள். தட்டினு மேம்பட்டதாக இலைகளைக் கருதி அவற்றிற் சாப்பிடுகிறார்கள். செல்வரும் வறிஞரும் இங்ஙனமே செய்கின்றனர். வேளாளனொருவன் இரண்டு மாடுகளையும் ஏரொன்றையும் வாங்கிக்கொண்டு மூன்று அல்லது நான்கு அங்குல ஆழம் நிலத்தை உழுது விதையைத் தெளித்தால், போதுமான பயனை யவன் அடைகின்றான்.

நாம் நம்முடைய வரிகளால் அவனை யொத்தவர்களை வருத்தாதிருந்தால், இத்தேசத்தில் நன்செய்யெல்லாம் புன்செய்யாக மாறி, வெற்றிலை, தென்னை, கரும்பு, அவுரி, இலவம் இவைகள் பயிரிடப்படும். மக்களும் நம் சாமான்களுட் பலவற்றை வாங்கிக் கொள்வார்கள். முக்கியமாக, நமது இரத்தாம்பரங்களை விருப்புடன் வாங்குவர். ஆனால், சிலராற்றான் அவற்றை வாங்க இயலும். பிராமணர்கள் பலர் அவற்றைக் குப்பாயமாக உபயோகப் படுத்துவதைப் பார்த்துள்ளேன். ஆனால், குடியானவர்களில் ஒருவரும் இதனை உபயோகித்ததை நான் இதுகாறுங் கண்டதில்லை. எனினும் இதை யணிந்து அழகுறத் தோன்றுவதால் தீமை விளையாதென்று அவர்கள் நினைக்க இடமுண்டானால், கம்பளிக்குப் பதிலாக இதையே பலர் வாங்கிவிடுவர் என்பதில் ஐயமில்லை.

நமது சாமான்களை அவர்கள் வாங்கிக்கொள்வதற் கிடையூறா யிருப்பது அவர்களது விருப்ப மின்மை யன்று. அவர்களுடைய வறுமையும், செல்வம் படைத்தவரெனச் சொல்லப்பட்டு வரி அதிகமாக்கப்படும் என்ற அச்சமுமே தடைகளாயுள்ளவை.” இக்குறிப்புக்களோடு தற்காலநிலைமையையும் ஒப்பிட்டுக் கொள்க.

# பன்னிரண்டாம் அத்தியாயம்

## மன்றேவின் கருத்துக்கள்

**ம**ன்றேவின் கருத்துக்கள் சில விஷயங்களைக் குறித்த வரையில் எங்ஙனமிருந்தன என்பதை முன் அத்தியாயங்களால் ஒருவாறு அறியக்கூடும். அவற்றினிடையே வராத இன்னுஞ் சில அருமையான கருத்துக்களைத் தருவதே இவ்வத்தியாயத்தின் நோக்கம். ஜெமீந்தாரி முறையினும் இரயத்துவாரி முறையே சிறந்ததென அவர் தெரிவித்ததற்கு ஆதாரமாக அவர் சொல்லும் விஷயங்கள் நிறைந்த குறிப்பொன்று பின் வருமாறு இருக்கின்றது:—

"இரயத்துவாரி என்ற முறைதான் இந்தியாவில் நெடுங்காலமாக வழங்கி வந்துள்ளது. வேறெம் முறையும் இங்கு நிரந்தரமா யிருக்க முடியாது. வேறெதுவும் முடிவில் இரயத்துவாரியில் வந்துதான் சேர வேண்டியிருக்கும். இதற்குக் காரணமா யிருப்பதியாதோவெனின், ஒவ்வொரு குடும்பத்தின் சொத்தும் விரைவிற் பிரிபட்டுப் போவதேயாம். இளமையிற்றானே மணங்க ளியற்றப்படுவதாலும், புதல்வர் எல்லாருக்கும் சொத்து சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படுவதாலும், பிள்ளைகுட்டி யில்லாக்கால் தத்துப் பிள்ளை வாங்கிக் கொள்ளப்படுவதாலும் இப் பிரிவினை யேற்படுகின்றது. மேலும் நிலத்தொகுதிகளைப் பிரிக்கலாகாது என்று வழக்கத்திற்குங் காணியாட்சிச் சட்டங்களுக்கும்

மாறாகப் பாடுபட வேண்டிய அவசியமில்லாததால், இம் முறை ஜெமீந்தாரி முறையினும் எளிதானது. ஒவ்வொரு குடியானவனும் தனது நிலத்துக்குரியனாகவும், பயிரிடுபவனாகவும், வேலையாளாகவும் இருப்பானாதலாலும், தன் தன் சோற்றுக்காக அவனவனைப் பாடுபடும்படி சொத்தின் பிரிவினை தூண்டிவிடுமாதலாலும் இம்முறை அம்முறையினும் அமைதியை நிறுவத்தக்கது. ஜெமீந்தாரி முறையினும் அதிகமாக இம்முறையால் நிலத்துக்குரியோரும் பயிரிடுவோரும் பெருகுவாராதலின் அம்முறையினும் இம் முறை மக்களிடத்து உழைப்பைப் பெருக்கி, நாட்டின் விளைவையும் பெருக்கும். இஃதெவ்வாறென வெளிற் கூறுதும். வேளாளன் ஒருவன், ஜெமீந்தார் ஒருவருக்குக் கீழே குடியாளாக இருக்குங்கால் உழைப்பதினுமதிகமாக, நிலம் தனதானக்கால் உழைப்பான் என்பதில் ஐயம் வேண்டுவதில்லை. தீர்வை விட்டுக் கொடுக்கப்படும் வேளைகளில் அதன் பயனை அங்ஙனே யனுபவிப்பவன் அவனே யாவனாகலின், அதைக் கொண்டு அவனிலத்தைப் பண்படுத்த ஏதுவுண்டு. அனுபவிப்போரில்லாது கிடக்கும் நிலங்களைக் கையிருப்பில் வைத்திருந்து வேண்டுங்கால் அடைமானஞ் செய்யக்கூடிய உரிமையை இம்முறை அரசாங்கத்திற்கு அளிக்கின்றது. இக் காரணங்களால் இரயத்துவாரி முறை சிறந்ததென்பதைக் கண்டாமன்றே.

இனி, இம் முறை ஆகாது என்று கூறுவார், கணக்கு மிகவும் விவரமாக வைக்க வேண்டியிருக்கிறதென்றும், அதனால் விளையும் வேலைப் பெருக்கு அதிக மென்றும், சாகுபடி விஷயங்களில் அரசிறை உத்தியோகஸ்தர்கள் தலையிட வேண்டியிருக்குமென்றும், வரிவசூல் செய்வதில் ஏற்

படுஞ் செலவு அதிகமாமென்றும், அரசாங்கத்தின் வருட வருமானம் நிலைபெறுதலில்லாது அலையுறுமென்றுஞ்சொல்லி ஆதாரங்காட்டுவர்.

ஆனால், இவற்றுள் எதுவும் தக்க ஆக்ஷேபம் என்று தோன்றவில்லை. ஒவ்வோர் ஊரும் அளவிடப்பட்டு ஒவ்வொரு நிலத்தின் தீர்வையும் விதிக்கப்பட்டபிறகு, கணக்கு மிகவும் எளிதாய் விடுகின்றது; குடியானவர் யாவர் என்றும் நிலங்கள் எவை யென்றும் காட்டக் கூடிய அட்டவணை காணே அதை மறு ஆண்டிற் குடியானவர் புதிதாக நிலங்களைச் சேர்த்துக் கொள்ளாமலும், பழைய நிலங்களை விடாமலுமிருப்பார்களே யாயின், பழைய கணக்குச் சுவடியே சாலும். எப்படி யிருந்தாலும் கணக்குப் பிள்ளைகள் வைக்கப்பட வேண்டுமாதலால் ஒரு ஜெமீந்தாருடைய கணக்கை அவர்களிடமிருந்து பெறுவதைவிட நூறு குடியானவர் நிலங்களைப் பொறுத்த கணக்கை அவர்களிடமிருந்தே பெறுதல் அரிதன்று. இரண்டாவதாக, நிலத்தின் தீர்வையைக் கண்டபடி அதிகப்படுத்தாம லிருந்தால், அரசிறை உத்தியோகஸ்தர்கள் போய் நிலத்தைச் சாகுபடி செய்யும்படி வேளாண் மக்களைத் தூண்ட வேண்டா. தரிசு நிலங்கள் சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளப்படுவதால் வராகும் அரசிறை வருமானம், வசூலிக்கு நிமித்தம் ஏற்படும் அதிக செலவுக்கு காலடைவில் ஈடாகிவிடும். குறைந்த தீர்வையின் பயனைக் குடியானவர் தங்கடங்கள் நிலங்களோடு ஒட்டுப் பற்றுடையர் ஆய்விடுகின்ற காலத்து, அரசாங்கத்தின் அரசிறை வருமானத்தின் வேறுபடுந்தன்மை காலடைவிற் குறைந்துபோம். எனவே, இவ்வாக்ஷேபங்கள் வலியிழக்கின்றன.

ஆனால் ஊர் ஊராக வீடு வீடாக அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அலைந்து வரிவசூலிக்க வேண்டிய வருத்தமில்லாமல் ஜெமீந்தார் வருஷா வருஷம் அத்தொகையைக் கொடுத்துவிட ஒப்புக்கொண்டு விடுகிறார் என்பதுண்மையே. இதுபற்றி, குடிகள் எக்கேடு கெட்டாலும் கெடுக என்று விட்டு விடுவது அரசாங்கத்தின் ஒழுங்கான முறையாகாது. பொது மக்களின் செழிப்போ, தீர்வை விடுதலையின் பயனைத் தாமே அனுபவிக்கும்படி இடங்கருவதை ஒட்டியிருக்கிறது. ஜெமீந்தார்களுக்குத் தீர்வை விடுதலை செய்யப்பட்டால், அதனால் குடிமக்கள் யாதொரு பயனையும் அடைவதில்லை. குடிமக்கள் அதன் பயனை யடைந்தால்தான், நிலத்தை விருத்திசெய்ய அவர்களுக்கோர் உணர்ச்சி யுண்டாம். குடிமக்கள் அதனைப் பெறுதற்குரிய வழி இரயத்துவாரி முறையிற்றான் உண்டாகலின், வேறு எத்தகைய இடர்களையும் பொருட்படுத்தாது இம்முறையையே ஒருதலையாகக் கைக்கொள்ள வேண்டும்."

மன்றோ தமது ஐம்பத்து மூன்றாவது வயதில்தான் மணம் புரிந்து கொண்டார். அதற்கு முன்னதாக, மணம் புரிந்துகொள்ளும்படி அவருடைய தாயாரும் தமக்கையாரும் அவரை யடிக்கடி வற்புறுத்தி வந்தார்கள். அந்நிலையில் அவர் தமக்கையார்க்கெழுதிய கடிதமொன்றில் மணத்திற்குரிய நிபந்தனைகள் எவையென்று குறிப்பிட்டுள்ளார். அந்நிபந்தனைகள் மேனாட்டாரே செய்து கொள்வது அவசியமெனினும், நாமும் படித்தறிய வேண்டியவை யாதலின், அவற்றையுந் தருதும்:— "நான் விரும்பும்பொழுது உண்ணவோ உறங்கவோ எனக்குரிமை யிருக்கவேண்டும். ஏன் தூங்குகின்றீரென்றோ ஏன் உண்ணுகின்றீரென்றோ அவள் என்

ளைக் கேட்கலாகாது. என்னுடம்பின் அலங்காரத்தைப் பொறுத்து நாவிதனுக்கோ தையற்காரனுக்கோ அவள் யாதொரு கட்டளையும் மறைவாக இடலாகாது. தான் குறித்த ஆடவரையோ பெண்டிரையோ வீட்டில் வரவேற் கும்படி என்னை வற்புறுத்தலாகாது. காபிக்கெட்டிலையோ தேநீர்க் கோப்பையையோ மேற்பார்வை யிடுவது என்கட மையாகு மென்றெனக் கருதப்படலாகாது. எவரேனும் ஒரு பெண்ணுக்கேற்ற பாவாடையைப்பற்றியோ தொப்பி யைப்பற்றியோ எனதபிப்பிராயத்தைச் சொல்லும்படி நான் கேட்கப்படலாகாது. நான் விரும்பினாலன்றி, உண்டிகொள் வதற்கோ தேநீரருந்துவதற்கோ நான் கட்டாயப்படுத்தப் படலாகாது. கடுங்காற்றுவேளையில் இந் நங்கையைக்கொண்டு இவள் வீட்டில் விட்டு வருகவென்றோ, பனிபெய்யும் இரவில் இம்முதியவளை இவளதில்லத்திற் சேர்த்துவருக வென்றோ நான் அனுப்பப்பட லாகாது. எனது மனச்சாட்சிக்கு மாறாக நான் எதுவும் செய்திட ஏவப்படலாகாது. எத்தனை முறை மாதா கோயிலுக்குப் போகவேண்டுமென்று எனக்குப் படு கிறதோ அத்தனைமுறை போக எனக்குரிமை யிருக்கவேண் டும். முடிவாக, ஊரிலிருக்க எனக்குப் பிடிக்கவில்லை யென் றால் இந்தியாவுக்குத் தனியாக வர எனக்குரிமை வேண்டும். (குறிப்பு:— இவ்வாக்கியங்களைப்பற்றி இனி யேதேனும் ஐயமுண்டானால், நான் கூறும் பொருளே தவறில்லாத தெனக் கருதப்படவேண்டும். இதிற்கண்ட விஷயங்களைப் பற்றி ஒவ்வொரு சமயத்தில் நான் ஒவ்வொரு விதமாகக் கூற வேனுயினும், அங்ஙனஞ் செய்வதின் காரணம் சொல்ல நான் கடமைப்பட்டவனல்லனு யிருக்கவேண்டும்.) இவையே என் நிபந்தனைகள். இவற்றுள் ஏதேனும் ஒன்றினின்றும் நான் பின்வாங்கமாட்டேன்.

இக்கடிதம் சங்கேரிதுர்க்கத்துக்கு வடகிழக்கில் பதினேழு மைலுக்கு அப்பால் உள்ள காரியாம்பட்டியிலிருந்து 1795-ல் எழுதப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கப்பால் மன்ரோ தமது நண்பரொருவர்க்கு மணத்தைக் குறித்துப் பின்வருமாறு எழுதுவாரானார்:— "மணம் புரிந்துகொள்வதற்கு மாறாகவுள்ள காரணங்களை நீ அடிக்கடி என் செவியில் நுழைத்திருப்பதே இன்னும் நான் தனியனாய் இருப்பதற்கும், பெண்ணுருவத்தில் வரும் எதிரியை நோக்குங்கால் முன்யோசனை யோடிருப்பதற்கும் ஏதுவாயுளது. நான் இவ்வின்பத்தை யடைய இன்னுஞ்சில ஆண்டுகள் கழிய வேண்டும். மனைவியின் எழில் வீடுபடுவதினும் தாதியின் போஷணையில் மனம் வைக்குங் காலம் அதற்குள் வந்திடும். வெயிலால் வாடி மழையில் நனைந்து கம்பளத்தைப் போர்த்திக் கொண்டு நிற்கும் அக்காலத்தில், காதள வோடிய கண்ணிளவளும் என்னுள்ளத்தைக் கவரமாட்டாள். நான் என்ன வாழ்க்கை நடாத்தியுள்ளேன்! காதலின்பத்தைத் துய்க்காமலும் இல்லற வின்பத்தின் மூழ்காமலும் என் வாழ்நாளின் நன்னாட்கள் கழிந்து விட்டனவே! 'அரிதரோ சென்ற இளமை தரற்கு.' ஆனால், வேலினுங் கூரிய கண்ணாலே, எட்பூ ஏசிய நாசியாலே, புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச்செவ்வாயாலே, இவையனைய உறுப்புக்களாலே மட்டும் ஒருவன் கட்டுறுவானானால், அக்கட்டு நீடித்து நிற்பதில்லை. இவற்றினும் மேலான உயர்ந்த நன்னோக்கங்கள் இருப்பின் தான் அக்கட்டு நிலையுறும்".

இரண்டு ஆண்டுகளுக்கப்பால் மன்ரோ இவ்விஷயத்தைக் குறித்துத் தமது தாயாருக்கு எழுதிய கடிதம் பின்வருமாறு உளது:— "எனது வாழ்நாளெல்லாம் கம்மூரி

லேயே நான் கழித்திருப்பேனாயின், இன்னவள் நல்லவளெனச்சொல்லி அவளை நான் மனைவியாகக் கொள்ளக்கூடும். அவளது இளமையிலிருந்தே அவளை யறிந்திருந்தால், அவளது நடையுடை பாவனையை நன்கு கண்டு பின்னால் ஏமாற்ற முறாதிருக்க முடியும். படக்குடில்களில் இதுவரை பெரும்பான்மையாக வசித்து வந்துள்ள யான், முப்பது ஆண்டுகளுக்கதிகமாக ஊரை யறியேன் ஆதலின், ஐரோப்பாவிலுள்ள ஏனைய பெண்பாலரைப் பற்றி எவ்வளவு குறைவாக அறிவேனோ அவ்வளவு குறைவாகவே நமது ஊரின் பெண்களைப்பற்றியும் அறிவேன். மனைவியைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில், இந்நிலையில், எனக்கு என்னிடத்திலேயே நம்பிக்கை யில்லை. நானே கண்டெடுக்கும் ஒருத்தி நல்லவளல்லள் எனப்பின்னால் தெரியவந்தாலும் வரலாம். ஆதலால் இம்முக்கிய விஷயத்தில் தங்கள் அபிப்பிராயத்தின்படி நடப்பதுதான் அறிவுடைமையென எனக்குத் தோற்றுகிறது.”

படிப்பைப் பற்றியும் விளையாட்டைப்பற்றியும் மன்றோவின் கருத்து இன்னதென்பது பின்வரும் கடிதப் பகுதியிலிருந்து விளங்கும்:— “தன்னந்தனியான நிலைமையினின்பத்தைப் பற்றிக் கண்டபடி பிதற்றும் பித்தர் நானிருக்கும் இவ்விடத்தில் இருக்கலாகாதா! எனக்கோ மக்கட் டொடர்பு இன்றேல் வாழ்க்கை கொடியதாய்விடும். கவிவாணர் எழுதிய பெருங் கவிதையைப் படிப்பதிலும் பந்தாடுவதிலும் நீந்துவதிலும் எனக்கு விருப்பம் அதிகம். இக்காரணத்தால் படிப்பில் எனக்கு விருப்பமில்லையென நினைக்கலாகாது. நல்ல நூல்களைப் படிப்பதிலுங் கற்றாரோடு பழகுவதிலும் எனக்கு விருப்பமுண்டு. ஆனால் விளையாட்டொன்றுமே

யில்லாமல் இருப்பின், படிப்பிற் சுவை குன்றிவிடுகின்றது." சரித்திரங் கற்பதால் வரும் நன்மையை ஒரு சிறு பகுதியில் அவர் வெளியிட்டுள்ளார். அது வருமாறு:— "இதுவரை வெளிவந்துள்ள உளநூல்கள் எல்லாவற்றிலுஞ் சரித்திரத்தின் சில பக்கங்கள் மனிதனது மனநிலையைக்காண எளிய வழியில் உதவுகின்றன. பொது வாழ்க்கையில் பெரியாரெனப் போற்றப்பட்டு, மக்களியல்பை யறிந்தாரிவரென நன்கு மதிக்கப்பட்டு வருபவர்கள் உளநூல்வலாரைக் கலந்து கொண்டார்களல்லர். உளநூலறியாமலே மக்களியல்பை யவர்கள் அறிந்துகொள்ள ஏதுவாயிருந்தது வரலாறேயாம்.

இனி, போரைக் குறித்து மன்றோவின் கருத்து யாதென்பதைக் காண்பாம்:— "ஒவ்வொரு ஜனசமூகமும் மற்ற ஜன சமூகங்களை மரியாதையுடன் நடத்தும்படி செய்யும் பெரிய பாதுகாவல் போர் என்பது. செழிப்பாற் செருக்கித் தருக்கிக் கிடக்கும் ஜனநாயகங்களைத் தாழ்வுறச் செய்வது போர். இறுமாப்பும் இவரலும் வாய்ந்த மக்களுக்குக் கடவுளிடுந் தண்டனையால் நன்மை யுண்டாகின்றது என்று எல்லா மத நூல்களும் கூறுகின்றனவே. அமெரிக்கா தேசத்தோடு நடந்த போரில் ஏற்பட்ட சேதத்தால் ஆங்கிலேயர், அதற்கு முன்னிருந்ததை விட, நேர்மையுடையவரா யினரன்றோ? எவ்வளவு காலம் வரையில் மக்கள் வெவ்வேறு அரசாங்க முறையும், வெவ்வேறு பழக்க வழக்கங்களும், வெவ்வேறு மொழிகளுங் கொண்டுள்ளார்களோ அவ்வளவு காலம் வரையிற் போர் இருந்தே தீரும்."

மேல், செயல்கள் இயற்றுவதில் எவ்வாறு ஒருவன் நடந்துகொள்ள வேண்டுமென்று மன்றோ ஓரோவொரு

இடத்து உணர்த்திப் போயுள்ளார். பொன் போற் போற்றத்தகும் அம் மொழிகளிற் சில பின் வருவன:—

(1) ஆத்திரப்படாமலிரு.

(2) உத்தியோக சம்பந்தமான கடிதப்போக்கு வரத்தில் ஒருவரையும் இகழாதே; உன்னை யெவரும் இகழ்ந்ததாக நினையாதே.

(3) எண்ணவேண்டிய காலம் போய், ஒரு கருமம்பற்றி ஒரு முடிவிற்கு வந்தபின் முட்டுக்கட்டை யில்லாது ஒத்துழைப்பைக் கொடுக்கவேண்டும்.

(4) உனக்குத் தோன்றும் ஒவ்வொரு கருத்தினையும் அப்பொழுதே குறித்து வைக்க.

(5) நீ பார்க்கும் வேலையைச் செவ்வனே செய்ய இயலாத விடத்து அவ்வேலையை விட்டிடு.

(6) நல்லதையே செய்திடு; வீண் ஆரவாரத்திற்கு அஞ்சாதே.

(7) நல்லாற்றிற் செல்லும் பண்பும் விடா முயற்சியும் வெற்றிக்குரிய.

# பதின்மூன்றாம் அத்தியாயம்

## மன்றோவின் கடிதங்கள்

மன்றோ வரலாற்றை யெழுதுவோர்க்குப் பெரிதும் உதவியா யிருப்பவை அவர்தம் கடிதங்களே யாம். அவருக்கிருந்த பல அலுவல்களுக் கிடையேயும் அவர் பலருக்குப் பற்பல கடிதங்கள் எழுதி வந்தார். அக்கடிதங்களுட் சில பகுதிகள் முன்னரே ஈண்டுத் தரப்பட்டுள்ளன. அவருடைய சுற்றத்தார் நண்பருக்கு அவர் எழுதிய சொன்னயம் ததும்பும் கடிதங்கள் சிலவற்றை இனிக்காண்போம். தமது அருமைச் சகோதரி எர்சுகைன் என்பாருக்கு அவர் எழுதிய கடிதமொன்றிலிருந்து அவர் தமது தாய்தந்தையர், உற்றார், பெற்றார் ஆகியவரை இந்தியா வந்தவுடன் மறந்தவரல்லரென்பது தெரிகிறது: “நமது தந்தைக்கோ தாய்க்கோ நான் எழுதுவதுபோல் உனக்கு அடிக்கடி கடிதங்கள் எழுதவில்லையானால், அம்முகத்தான் நான் உன்னை மறந்துவிட்டதாக நீ நினைக்கக் கூடாது. ஏனெனில், உங்களில் யாவர்க்கேனும் ஒருவர்க்குக் கடிதம் நான் வரைந்தனுப்பினும் அதனை நீங்கள் எல்லோருங்கண்டு கொள்ளலாம். தம் நாட்டிலிருந்து வெளியேறிய பலர் சிலகாலம் வெளியில் வாழ்ந்து வருங்காரணத்தால் தமது பழைய நண்பர்களோடு ஒட்டுப் பற்றின்றிப் போய் விடுகிறார்களென்றும், முந்திய நாட்களைக் கழித்த இடங்களை மறந்துவிடுகிறார்களென்றும், ‘பன்முறை

சிலர் சொல்லக்கேட்டிருக்கிறேன். ஆனால், நமது நாட்டினிடத்துள்ள பற்றுசையை விட்டிட இன்னும் என்னால் ஆகவில்லை. உலக வாழ்க்கையில் மேம்பாடடையுங் கருத்துக் கொண்ட ஒவ்வொருவனையுங் குடிகொள்ளும் கவலை சான்ற எண்ணங்களால் இடர்ப்படாமல், தகப்பனார் இல்லத்தில் அவலக் கவலையின்றிச் சோம்பேறி வாழ்க்கை நான் நடத்தி வந்த காலத்தைப்பற்றி நினைக்குங்கால், வருத்தமின்றி நினைத்தல் அரிது. பூவரசப் பாத்திகளில் வேலைசெய்து கொண்டிருப்பதுபோல் நமது தகப்பனாரையும், பூஞ்செடிகளைப்பேணிக் கொண்டிருப்பதுபோல் நம்தாயாரையும் அடிக்கடி என்முன் காண்கின்றேன். நீ படம் போட்டுக்கொண்டிருப்பது போலவும், சகோதரன் ஜேம்சு ஏதோ ஓரெண்ணத்தால் கவரப்பட்டுக்கிடப்பது போலவும் என்முன் காண்கின்றேன். இவை யெல்லாம் நேரிற் காண்பது போலவே என்முன் படுகின்றன. கடற்கரை யோரமாக நான் நடந்து செல்லும் சில வேளைகளில், அலைகளுக்கப்பால் என் பார்வை சென்று, மேகங்களினிடையே நமது கண்ட மிருக்கின்றது என்ற வெண்ணத்தை யெழுப்பி, அங்குதான் நீங்களெல்லீரும் இருக்கின்றீர்கள் என்று தோன்றச்செய்து, என்னை மகிழ்விக்கின்றது.''

தந்தையின் கூட்டுக்கடை முறிந்து போனதால் மன்ரோவின் குடும்பத்தார் வறுமையினிடும்பையால் வருந்த நேரிட்டது என்று முன்னமே கூறப்பட்டுள்ளது. அக்காரணத்தால் தமது தாய் துயரின் மூழ்கலாகாது என்னும் கருத்துடன் மன்ரோ அன்னார்க்கு எழுதிவிடுத்த கடிதமொன்று பின்வருமாறு உளது:-'என் தகப்பனார்க்குதவவேண்டுமென்று நான் விரும்புவதுபோற் செய்ய இயலாதிருப்பதாலும்,

அவரது துரதிர்ஷ்டத்திற்காக நீங்கள் பெரிதும் வருந்துகின்றீர்கள் என்பதைக் கேள்வியுறுவதாலும் மிகவும் வருந்துகின்றேன். எனினும், தாங்கள் மகிழ்ச்சியடைவதற்கான பல ஏதுக்கள் இருக்கின்றனவென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை. தங்கள் குழந்தை குட்டிகளில் ஒருவரையும் தாங்கள் இதுவரை இழக்கவில்லை. அவர்களால் தங்களுக்குப் பெருஞ்செல்வத்தைக் கொடுக்கக் கூடாவிட்டாலும், தங்களுக்கு அவசியம் தேவையானவற்றைத் தரவியலும். இதனினும் அதிகமாக அவர்கள் செய்யக்கூடிய காலம் வரும் என்றே நினைக்கின்றேன். அப்பொழுது தங்கள் வாணாளின் பிற்பகுதி முற்பகுதியை யொத்து மகிழ்ச்சி யுள்ளதாயிருக்கும். எனது நினைவிலுள்ள பல தாய்மார்களது நிலைமையோடு தங்களதை யொப்பிட்டுப் பார்க்குமிடத்து, அவர்கள் வருந்துவதற் குரிய காரணங்கள் ஏதையும் தங்களுக்கில்லை யென்று படுகிறது. சீமாட்டிகளாகவுள்ள பல தாய்மார்கள் குடும்ப வாழ்க்கையிற் சுகமற்றவர்களாயுள்ளார்கள். செல்வச் சிறப்பிழந்து சிரமப்படுவது ஒரு சிறு தீமையே; ஆனால், நன்றியில்லா மக்களைப் பெற்றதால் வரலாகும் பெருந் தீமையைத் தாங்கள் காணப் போவதில்லை.”

மேற்கண்ட கடிதம் தஞ்சாவூரிலிருந்து 1785-ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. அக்கடிதம் எழுதிச் சிலமாதங்கள் ஆனபின், மன்ரோவின் சகோதரருள் ஒருவரான வில்லியம் என்பார் விண்ணோர்க்கு விருந்தினராயினார். அச்செய்தியறிந்த மன்ரோ தகப்பனார்க்கு எழுதிய கடிதம் ஊன்றிப் படிக்கற் பாலதொன்று. அது காசிங்கோட்டையிலிருந்து 1786 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் எழுதப்பட்டதாகும். அது வருமாறு:—“சகோதரன் வில்லியம் இறந்ததால் ஏற்

படும் மாற்றலாகா நஷ்டத்தைத் தெரிவித்த துக்ககரமான கடிதம் கிடைத்தது. தங்கள் மக்கள் எல்லோரும் சுகமாக வாழ்வதைக்கண்டு உண்டாகக்கூடியமகிழ்ச்சியும், தங்களுக்கு அவர்களால் உதவி செய்யக்கூடும் என்ற நம்பிக்கையும், தங்களுடைய முன்னைய துர்ப்பாக்கியங்களை ஆற்றி யிருத்தல் கூடும்; ஆனால், இறுதியில் வந்த இவ்விடி ஆற்றியிருக்க இடந்தருவதாயில்லை. எக்காரணத்தாலும் எவனை யிழக்கக் கூடாதோ அவனை யிழந்து விட்டோமே! பெற்றோர்க்கு நன்கலமாகவும் சகோதரிகளுக்குத் தோழனாகவும் இருக்கக் கூடிய ஒருவனை யிழந்து விட்டோம். நான் ஊருக்குத் திரும்பியதும் அவனுடன் பல்லாண்டுகள் கழிக்கவேண்டுமென்றும் இவ்வளவு நற்குணங்களும் திறமையும் வாய்ந்த இச்சகோதரனைப் பெற்றிருப்பதற்கு மகிழவேண்டுமென்றும் அன்றோ நான் வீணே எண்ணி யிருந்தேன்! அவன் என் மனத்தினின்றும் அகல நீண்டகாலம் பிடிக்கும். அவனை எந்தெந்த விடங்களிற் பார்த்துப் பழக்கமோ அந்தவந்த விடங்களிலெல்லாம் அவனது எழிலுருவம் நங்கட்குத் தோன்றிடுமே! உண்ண உட்காரும்போதெல்லாம் அவனின்மை நங்கட்கு எத்தகையதாய் இருக்கும்! அவன் கல்விகற்று விருத்தியடைந்து வருவதைப்பற்றி அறிவித்துவந்த தங்கள் கடிதங்கள் ஒவ்வொன்றையும் நான் மகிழ்ச்சியுடன் படித்து வந்தேன். கடைசிக் கடிதத்தைப் படிக்கத் தொடங்குங்கால் அது இத்துயர்தரு செய்தியைக் கொண்டுள்ளது என்று நினைத்தேன் அல்லேன். இத்தீக்கொடிய சோதனையைத் தாங்களும் எனதன்னையும் முயன்று பொறுத்துக்கொள்வீர்களென்றும், இத்தகைய துக்கம் எதுவும் இனி நிகழாது என்றும், இத்துக்கத்திற்கப்பால் எவ்வளவு ஆறுதல் வேண்டுமோ அவ்வளவு தங்கள் எஞ்சிய மக்களின் நடத்தையால்

அளிக்கப்பெறுமென்றும் நம்புகின்றேன். இவ்விழவால் எவ்வளவு இழந்துவிட்டீர்கள் என்பதைத் தாங்களும் அன்னையும் எக்காலும் மறக்க முடியாதெனினும், நீங்கள் இருவீரும் ஆற்றியிருக்கவேண்டிய வலிமையைப் பெறுக என வேண்டுகிறேன்.”

உலக வாழ்க்கை தீமைமலிந்தது என்பதில் நம்பாமலும் “எல்லாம் நன்மைக்கே” என்பதில் நம்பியும் இருந்தனர் மன்றோ என்பது அவர் தமது சகோதரிக்கு எழுதிய பின்வரும் கடிதத்தால் அறியக்கிடக்கின்றது:— “இந்தப் பன்னிரண்டாண்டுகளாக அரைப் பட்டினி கிடந்து வருகின்றேனாலும், நல்வாழ்வு வந்துறுமென்று பெரிதும் நம்பியே வருகின்றேன். இந்நம்பிக்கை நிறைவெய்துவதன்று என்று இடையே தோன்றியக்காலும், அத்தோற்றம் எனதூக்கத்தைக் கெடுக்கவேயில்லை; ஏனெனில், உதாரணமுகத்தான் தத்துவசாஸ்திரிகள் ஊகித்துக் கொள்வதுபோல், யான் செய்வதில்லை. இன்று கெட்டகாலம் என்றும், நாளை அதனினும் கெட்டகாலம் என்றும் நான் கூறுவதில்லை; மற்ற விஷயங்களுக்குப் போலவே துரதிர்ஷ்டத்திற்கும் ஒரு முடிவுண்டென்றும், எனது துரதிர்ஷ்டம் இவ்வளவு நீண்டு நின்றுவிட்டதால் இனியும் அது நிற்காதென்றும் நான் சொல்கிறேன். அன்றி, இன்னும் பன்னிரண்டு ஆண்டுகள் முன்போலவே யான் கழிக்க வேண்டியிருப்பினும், எனது நம்பிக்கை சிறிதும் குறைவுறாது. யதேச்சையான வாழ்க்கை நடத்தக் கூடியவளவு எனக்குப் பேறு உண்டாகப் போவதில்லை யென்று ஓர் அசரீரிவாக்கு எழுந்து உணர்த்துவதாயிருந்தாலும், அதனால் நான் வருத்தமுறப் போவதில்லை.”

இனி, மன்ரோ தமது சகோதரர் ஜேம்சு என்பாருக்குக் கூறிய நற்போதனையைக் காண்பாம். அச்சகோதரர் இந்தியாவிற் சிலகாலம் வைத்திய வேலை செய்துகொண்டிருந்து, உடல் நலம் குன்றியதால், மீண்டும் சகாத்லாந்துக்குச் சென்றுவிட்டார். அவருக்கு மன்ரோ பின்வருமாறு எழுதியுள்ளார்:-

"இழந்த உடனலத்தை மீண்டும் பெறும்பொருட்டு ஏனைய எல்லா நலன்களையும் விலக்கி வைக்க வேண்டுமென்ற உனது முறையை யான் பல கடிதங்களில் ஒப்புக்கொண்டுள்ளேன்; அம்முறையை விடாமல் பின்பற்றுவாய் என்றும் நம்புகின்றேன். ஆனால், உனது படிப்பு இவ்விஷயத்தில் இடுக்கண் விளைக்குமோ என அஞ்சுகின்றேன். ஏனெனில் அப்படிப்பு உன்னை ஓரிடத்தில் இருத்திவிடுவதே யல்லாமல் தேகப் பயிற்சிக்குச் சிறிதும் இடங்கொடுப்பதில்லை. நீ எக்காலும் ஊக்கத்தை யிழக்காது மனமகிழ்ச்சி யுடையவனாயிருத்தல் வேண்டும். உடனலத்திற்கேற்ற அளவு உடற்பயிற்சிசெய்தல் வேண்டும். உற்சாகமும் மனமகிழ்ச்சியும் உடற்பயிற்சியும் இல்லாமல் ஈண்டு ஒன்றுமாகாது. அயலாருடைய அறிவு, நோக்கங்கள், தொழில்கள் இவற்றைப்பற்றி நீ அடிக்கடி கேவலமாகப் பேசியிருப்பதை நான் அறிவேன். எவ்வளவு தாழ்ந்த இயல்புள்ளவனாய் ஒருவன் இருப்பினும் அவனை இகழும் அறியாமையினும் பெரியதோர் அறியாமை இல்லை. அவ் விகழ்ச்சியைக் கருத்திற் கொள்ளாது விடும் மனிதன் அருமை. மேலும், மற்ற மனிதருடைய திறமையையுஞ் செல்வத்தையும் இகழ்வது தீது. மனக்கோட்டமின்றிப் பெற்ற தெதுவோ அதைக்கொண்டு திருப்தி யடைந்து வாழ்கவே நன்று. நானும் அடிக்கடி புரிந்துவரும் தவறொன்றைப் பற்றி உனக்கு உபதேசிக்கின்றேனாயினும், அத்தவறுசெய்தவிடத்து நான் வருந்தாமல் இருந்ததில்லை."

மன்ரோவின் குழந்தை, காம்பெல் மன்ரோ என்பானுக்கு நோய் கண்டதால் திருமதி மன்ரோ 1826ஆம் ஆண்டில், கணவனை விட்டுப் பிரிந்து சுதாத்லாந்து செல்ல வேண்டியிருந்தது. அவ்வாறு சென்றபின், அவரது பிரிவைக் குறித்து மன்ரோ பற்பல வேளைகளில் வருந்தினர். மன்ரோ வெளியூர்களுக்குப் போய்ப் படக்குடில் அடித்து வாழ்ந்துவந்த காலங்களில் மனைவி பக்கத்திருக்க வேண்டுமென்று கருதினாரல்லர். அக்காலங்களில் மனைவி யுடனிருந்தால், ஒவ்வொருவரும் விடையின்றிக் குறுகவேண்டியவாறு குறுகல்செல்ல வொட்டாதபடி தடுக்கப்படுவர் என்ற எண்ணமே இதற்குக் காரணமாகும். ஆனால், மன்ரோ தலைநகரில் தனித்திருந்த காலங்களில் பிரியமனைவி மருங்கில்லையே யென்று வருந்திய துண்டு. துறந்த ஞானிகளாலும் கடக்கலாகா மக்கள்மேற் காதலும் மன்ரோபால் காணப்பட்டது வியப்பன்றே! குழந்தை காம்பெல் பக்கலில் இல்லையே என்ற எண்ணத்தால் அவர் நெஞ்சு புண்ணடைந்தது. இச்செய்திகளைக் கீழ்க்காணும் இருகடிதங்களால் அறியலாகும். இவை யிரண்டும் அவரால் மனைவிக்கு எழுதப்பட்டவை.

கிண்டி, 2—4—1826.

"நீ சென்றபிறகு முதன்முறையாக நேற்றுதான் நாங்கள் இங்கு வந்தோம். காப்டன் வாட்சன் இங்குத் தரைகளை யெல்லாம் புதுப் பாயல்களினால் அலங்கரித்துள்ளார். ஆனால், அவை எவர்கள்பொருட்டு வேண்டப்பட்டனவோ அவர்கள் இவணின்மையான், யாதொரு பயனுந் தருவன அல்ல. இவ் வீட்டை விட்டுச் செல்ல ஏதுவாயிருந்தது எதுவோ அது இவ் வீட்டிற்கே ஒரு துக்ககரமான

தோற்றத்தைத் தருகின்றது. காம்பெல்லின் அறையை நண்ண எனக்கு மனமில்லை. தலையிற் பேண்களோடும், முகத்திற் கண்ணீரோடும், அச்சத்தாலும் நோயாலும் கதறிக் கொண்டு, அவன் கிடந்த அவ்விரவை நினைக்காமல் அவ்வறையைக் கடந்து செல்கின்றேன் அல்லன். இவ் வீட்டைப்பற்றி நினைக்கும் போதெல்லாம் அவனது உருவம் அந்நிலைமையில் எப்பொழுதும் தோன்றுகின்றது. இன்று காலை, பரிதி பரப்பிய ஒளியின்கண்ணே வெளியே சென்றேன். காப்டன் வாட்சனால் அமைக்கப்பட்டுள்ள புதுச் சாலை வழியே சென்று சிறுகுளத்தண்டைச் சேர்ந்தேன். தொலைவிற் றெரிந்த குன்றுகளை நோக்கி வியக்கும்பொருட்டு அவண் சில நிமிடநேரம் நின்றேன். அப்பாற் பூஞ்சோலை யைச் சார்ந்தேன். அப்பூஞ்சோலையில் நீயும் காம்பெலும் முன்னர் விளையாடிக் கொண்டிருக்குங்கால், நான் வந்து காண்பதுண்டு அன்றோ? எறும்பு வளையை ஆராயும் பொருட்டுத் தங்கினல்தானே காம்பெல் தங்கியது! அல்லா விடில் உன்முன் அங்கு வந்து தவழ்ந்து கொண்டிருப்பானே! அவன் நடப்பதும், ஓடுவதும், மழலைச் சொற்களுக் குதவி யாகக் கைகளைக் கொண்டு ஏதேனும் ஒரு விஷயத்தை உணர்த்த நிற்பதுவும் எவ்வளவு மகிழ்ச்சியை யளித்தன! குழந்தையின் ஆட்டமெல்லாம் எவ்வளவு எளியவை! எவ்வளவு கபடமற்றவை!! எவ்வளவு அழகானவை!!! அவன் செய்யும் ஒவ்வொன்றும் அழகுடைத்தே. அவனுடைய எளிய வழிகளெல்லாம் அன்பூட்டுபவை; அவனது பாதுகாப் பிற்கென்று இயற்கை யன்னையால் கைபோன் றுதவக் கொடுக்கப் பட்டவை; அவனிடத்துப் பிரியங் காட்டும்படி பிறரெல்லோரையுந் தூண்டுபவை. அவன் மருங்கிருந்து மாபெரும் மகிழ்ச்சி யளிக்குங் காலத்தில் அவனைப் பிரிய

16

சேர்ந்துவிட்டது. அவனது தளர்நடையும், இப்பக்கம் அப்பக்கம் உதவிகுறித்துப் பார்த்து விழிக்கும் விழியும், களங்கமில்லா முகமுமே என்னுள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டன. நான் மறுமுறை அவனைப் பார்க்கும் நேரத்திற்குள்ளாக, அக்குணங்களெல்லாம் அவனை விட்டகன்றிடுமே! எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதை அவன் அறிந்துகொண்டிடுவான். உலகத்தைப்பற்றிய அறிவு சிறிது அவனுக்கு வந்துவிடும். அக்காலை, அவன் இன்றுள்ளது அளிப்பதிற் பாதியளவுகூட இதமளிப்பானல்லனாய்விடுவன். அவன் எக்காலும் மாறுதலடையலாகாது என்று விரும்புகின்றேன்."

"சென்னை 7-7-1826

சனியன்று மாலை கிண்டிக்குச் சென்றேன். ஞாயிறன்று காலை, வழக்கம்போல், நெடுந்தூரம் நடந்துசென்றேன். கனத்த மழை பெய்திருந்ததால் தோட்டம் பச்சைப் பசேலென்று அழகாகத் திகழ்ந்தது. ஆனால், அணிற் பிள்ளைகள் அணுகி மாம்பழத்தையும் அத்திப்பழத்தையும் எடுத்தோடிப் போகாமல் பாதுகாத்துக் கொண்டிருந்த ஒரு சிறுவனையன்றி வேறொருவரையும் அங்குக்காணேன். தோட்டக்காரன்தானும் காணப்படவில்லை. காம்பெல்லையும் உன்னையும் அங்கு ஒருதலையாய்க் காணலாம் என்று நான் வந்த காலங்களுக்கும் இப்பொழுதைக்கும் பெரும் வேறுபாடு உண்டு. நீ பெரு மகிழ்ச்சியாகக் கருதிவந்த இவ்விடத்திற்கு இனி நீ வரப்போவதில்லை யென்று நினைக்குங்கால் துயர் மூளுகின்றது. இத்துயர் உண்டிகழித்து உட்காருமறைக்கு என் அறையிலிருந்து நான் போகும் வழியில் மிகுகின்றது. அவ்வழியோ உன்னையும், உன் மகனையும், அவன் நண்பர்

களாலும் முன்னர் ஒலியால் நிறைந்துகிடந்தது, இப்பொழுது நிசப்தமாகவும் பாழாகவும் இருக்கின்றது. அவன் போகும்போதெல்லாம் நான் துயருறுகின்றேன். கடைசி முறையாக உங்களைப்போல், அதனை நான் நீத்து வரும்பொழுதும் துயருறுவேன். இவ்வீடு நீயும் உன் புதல்வனுமில்லாததால் மிகவும் வாட்டமடைந் துள்ளது; கதையிற் படிக்கும் பாழாய்ப்போன அரண்மனை போற் றோற்றுகின்றது. காம்பெல் வெளியே உலாவச் செல்லும் பொருட்டுக் கால்சட்டை கைசட்டை யெல்லாம் போட்டுக் கொண்டு, தொப்பியைப் போட்டுக்கொள்ள மாத்திரம் மறக்குங் காட்சி என்முன் தோற்றுகின்றது."

இக் கடிதங்கள் வழியாகவும் மன்றோவின் மனநிலையை நாம் நன்றாக அறிந்து கொள்ளக் கூடும்.

# பதினொன்காம் அத்தியாயம்

## மன்றோ உற்ற துயர்கள்

உலகவாழ்க்கை இன்பமும் துன்பமும் விரவி நடப்பது என்பதும், இன்பத்தினும் துன்ப மலிந்தது என்பதும் பலரது கொள்கை. கற்கண்டைத் தின்று அதன் இன்சுவையைத் துய்த்துக்கொண்டிருக்குங்காலே ஒருவன் நாவினைக் கடித்துவிட்டுத் துன்பமடைவதைக் கண்கூடாகக் கண்டு வருகின்றோம். எனவே, 'பிறந்தோருறுவது பெருகிய துன்பம்' என்பது வெள்ளிடைமலையாம். துன்பத்தையறியான் ஒருவன் இன்பத்தையறியான் ஆதலின் கடவுள் மக்கட்குத் துன்பத்தையுந் தந்து இன்பத்தினருமையைக் காட்டுகின்றார். இதைக் குறித்தன்றோ, கவிச்சக்கரவர்த்தியாம் கம்பரும் "துன்புளதெனினன்றோ சுகமுளது" என்று இராமபிரானது திருவாயான் அருளியுள்ளார்! இவற்றிற் கேற்பவே மன்றோவின் வாழ்க்கையும் நடைபெற்றது என்பதைக் காட்டுவாம்.

முதலில் குற்றேவல் புரிய இந்தியாவுக்கு வந்த மன்றோ இறுதி நாட்களில் மாகாணத் தலைமை பூண்டு, காலாலிட்ட வேலையைக் கையாற் செய்யக் காத்திருந்த பல பணியாளராற் சூழப்பட்டு, இல்லறத்தின் மங்கலமாய மனைமாட்சியோடு மற்றதன் நன்கலமாய நன்மக்கட்பேற்றைப் பெற்று வசையொழிய வாழ்ந்து இசையெங்கும் நிறுவிப் பல்லோரால்

போற்றப்படலானார். இதற்குச் சற்று முன்பாக, அவர் தென் மராத்திய தேசத்தின் நிர்வாகத்தை வகிக்க நியமிக்கப்பட்டார். அங்ஙனம் வகித்து வருங்கால், அவரது கண்பார்வை கெட்டதனால் அவர் மிகவும் வருந்தவேண்டி யேற்பட்டது. விளக்கொளியில் உட்கார்ந்து எழுதுவதென்பது அவருக்கியலாமற் போய்விட்டது. எழுதத் தொடங்கின், கண்ணீர் ததும்பக் கடுஞ்சிவப்பு வந்துறலாயிற்று. இதுபற்றி அவர் எழுதியுள்ள கடிதங்களிரண்டில் ஒன்று பின்வருமாறுளது:—"வேலைக்கு நான் தகுதியற்றவன் என்று சொல்லுமளவு என் கண் கெட்டுவிட்டது. கஷ்டப்பட்டு உற்றுற்று நோக்கி வந்தமையின் பயனாக நான் ஒரு சிறிதும் எழுத முடியா நாட்கள் பெருகிவிட்டன. கண்ணுக்கு நோயின்றி யெழுதும் நாள் ஒன்றேனு மில்லையெனக் கூறிடுவேன். எழுதுங்கால், தப்பித்தவறி ஒரு சில நிமிடநேரம் நோயுண்டாகவில்லை யாயினும், என் கண்கள் மிகவுங் கெட்டுவிட்டன. எழுதுங்காலெல்லாம் மிகவும் கஷ்டப்பட்டெழுதவேண்டிய நிலைமையும், சிலநாட்களில் ஒரு சிறிதும் எழுதவொண்ணா நிலைமையும் என்னைச் சார்ந்துவிட்டன. அரசிறைத் திட்டத்தில் கண்ணின்றி ஒன்றுமாகாது. பேசும் பொழுதே எழுத வேண்டியதும், ஒவ்வொருவரும் சொல்லும் விஷயத்தை எடுத்த பேறு விடுக்காமல் குறித்துக்கொள்ள வேண்டியதும் ஆகிய கடமைகள் கொண்டது இவ்வேலை. இவ் வேலையினிடையே ஓராண்டிற்குள்ளாக எனது மூக்குக் கண்ணாடியை மும்முறை மாற்றவேண்டி யேற்பட்டுள்ளது. நீ கண்ணாடி போடும் மனிதனாயிருந்தால், இது கண்பார்வைக் கேட்டின் விரைவை எவ்வளவு காட்டுகின்றது என்பதை யறிவாய். சில ஆண்டுகளுக்கு முன்னால் நான் ஒரு நாட்குள் செய்துவந்த வேலையை இப்பொழுது இரண்டு நாட்களில்

செய்ய இயலவில்லை.' ' கண்ணுறுத்தலில்லாமல் என்னால் ஒன்றும் எழுதக்கூடவில்லை. வேலையை அடியோடு சில மாதம் விட்டுவிட்டு, பருத்த பொருள்களைப் பார்ப்பதில் மாத்திரம் என் கண்ணோக்கத்தைச் செலுத்துவேனாயின், ஒருகால் எனது பார்வை தெளிவடையும்."

இங்ஙனம், கண்பார்வை குன்றிக் கஷ்டப்படு முன்னரும் மன்ரோவுக்குற்ற துயர் சிறிதன்று. 1799 சனவரியில் அவருக்குக் காய்ச்சல் கண்டது. அஃது இராப்பகல் ஓயாமற் சில நாட்களும், பகலில் மாத்திரம் பல மணி நேரம் சில நாட்களுமாக மாறிமாறி அடித்தது; அவர் கிருஷ்ணகிரிக்கு ஒருகால் சென்றிருந்தபொழுது தலைவலி குளிரோடு முதற்கண் அது தோன்றலாயிற்று. பத்துநாள் ஆனதும் அது ஒருவிதமான குளிர்காய்ச்சலென்பதை யறிந்து, அவர் மரப்பட்டைக் கஷாயம் குடித்தார். ஆனால், அது அவரை விட்டபாடில்லை. இந்நிலையில் அவர் கர்னல் இரீட் துரையைச் சேரும்படி ஒரு கட்டளை வந்தது. அதனால் அவர் தர்மபுரிக்குச் சென்று அரசிறை வேலையை ஒருவரிடம் ஒப்புவிக்கப் போனார். அவரது உடற்கேடு சீருறாதிருப்பவும், அவர் மீண்டும் கிருஷ்ணகிரிக்குப் புறப்பட்டார். குதிரைமீதேறிக்கொண்டு பன்னிரண்டு மைல் தூரஞ் சென்று ஒரு படக்குடிலிற் றங்கினார். அக் குதிரைச் சவாரியினால் உடம்பெல்லாம் நோய்வந்துற்றது என்று அவர் அன்றிரவு கண்டார். அவர் நன்றாக உறங்குதற்கோ, நாளொன்றுக்கு நான்கு மணிக்குமேல் படுக்கையில் விழித்திருப்பதற்குத் தானுமோ அந்நோய் ஒரு மாதம் வரையில் இடந்தந்திலது. அவர் உறங்கிக்கொண்டிருக்கும் பொழுதே அந்நோய் அவரை எழுப்பி விட்டிடும். அப்பால் புரண்டு படுத்தாற்

கஷ்டமதிகமே யொழியக் குறைவன்று. அந்நோயின்றி இருக்க ஒருவழிதான் உண்டு; நடு யாமத்துள் விழித்துக் கொள்ளுமவர் காலைவரையில் நாற்காலியில் அசையாமல், உட்கார்ந்திருப்பதே அது. இங்ஙனம் அவர் ஐந்து வாரங்கள் கழித்தார். அதன்மேல், அவர் கிருஷ்ணகிரி சேர்ந்ததும், காய்ச்சல் கடுமையாய்விட்டது. மேல், வைத்தியர்கள் அஞ்சனக் கல்லினுதவியால் காய்ச்சலைத் தடுக்கலாயினர். இக் காரணத்தால் மன்ரோவின் செவிப்புலனுக்குக் கேடு வந்தது; நாள்தோறும் காலையில் நான்கு மணி நேரம் மட்டுமே அவரால் எதையும் கேட்க வியன்றது; எஞ்சிய நேரமெல்லாம் அவரது செவி கேளாததாயிற்று. இவ்வாறு இரண்டு வாரங்கள் கழிந்தன. செவி எக்காலும் கேளாததாய் விடுமோ என்று அஞ்சக்கூடிய காலங்கூட ஒரு சமயத்தில் ஏற்பட்டது.

இன்னொரு சமயம் அவர் ஓர் அகழினைத் தாண்ட முயன்றதால் வழுக்கிவிழுந்தார். அதனால் அவர் முதுகில் ஒரு வலிப்புக் கண்டது பதினைந்து வருஷத்திற்கப்பாலும் அவரை விட்டகலவில்லை. ஆயினும், மன்ரோ அதனைப் பொருட்படுத்தாது, இன்னுங் கொடிய வலியாற் றுன்புறுபவர்களுமுள்ளார்களேயென நினைத்து, தமது அலுவல்களை ஒழுங்குறச் செய்து வந்தார்.

மற்றொரு சமயத்தில், அதாவது, ஐதர் ஆலியைக் கும்பெனியார் எதிர்த்த யுத்த காலத்திலே, ஒரு பள்ளத் தாக்கின் நீர்த்தாரையில் ஓரிரவு முழுதும் மன்ரோ நின்றிருக்க நேர்ந்தமையின், அவர் காலிலொன்று வீங்கிப் போய் ஆறுவதற்கு ஒரு வாரத்திற்குமேல் எடுத்தது.

சீரங்கப்பட்டணத்திற்கு மேற்கே பதினேழுமைலுக்கப்பாலுள்ள ஒரு சிறு கிராமத்தில் ஒரு நாள் மன்றோ வந்திறங்கினார். அக்கிராமம் கம்மருலுதீன் என்பவனால் தீயிடப்பட்டிருந்தது. ஆதலின், மன்றோவுக்கு அக்காலை தங்கக் கிடைத்த குடிசையின் தன்மையை யென்னென்று கூறுவது! நெருப்பாற் பாதிக்குமேல் பாழாக்கப்பட்ட கூரையுடன் கூடிய குடிசையொன்றில், எஞ்சிய ஓடுகளினுதவியால் சூரிய வெப்பத்தினின்று பாதுகாத்துக் கொள்ளும் எண்ணத்துடன், மன்றோ புகுந்தார். ஆனால், திடீரென்று பெருமழையொன்று வந்து தலையை நனைத்து விட்டது. மழையினின்றுங் காக்க வுதவியனவல்ல அக்குடிசையின் ஓடுகள். ஒரு கடிதம் எழுதத் தொடங்கிய அவர், மழைத்துளி விழாதிருக்கும்பொருட்டு, அதனையெடுத்தெடுத்து மேசைக்குள்ளே பன்முறை வைக்க வேண்டிய நிலை யேற்பட்டது.

இங்ஙனம், மழையினாற் கஷ்டப்பட்ட அவர் கடும் வெயிலினாற் கஷ்டப்பட்டதுமுண்டு. மழையினாலுங் குளிரினாலும் வெயிலினாலும் வருந்த நேரிடுவது உலகத்தினியல்பே யாயினும், மன்றோவைப் போன்ற பதவி வகிப்போர் எவரே இவற்றினின்றும் பாதுகாத்துக் கொள்ளாதிருப்பர்? வானம் பெய்யினோ, கதிரவன் காயினோ வீட்டினுள்ளிடத்தே இன்பமாகக் கழிக்கவன்றோ அதிகாரிகளிற் பலரெண்ணுவர்! அத்தகையரல்லர் மன்றோ வென்பதை யெடுத்துக் காட்டும் நோக்கத்தானே இவையும் துயரென ஈண்டெடுத்துக் காட்டப்படுகின்றன. வைகலும் வெயிலிற் காய்வோனுக்கும் வைகலும் நீரில் நனைவோனுக்கும், விரும்பினாற் காயாமலும் நனையாமலுமிருக்கக்கூடிய தகுதி பெற்

திருந்த மன்றோவுக்குமுள்ள வேற்றுமையையறியின், அவரது சிறப்பையும் அறியலாம்.

அவர் பிரயாணஞ் செய்த காலங்களில் அவருக்குற்ற துயர்கள் கணக்கில. நல்ல தேநீரில்லாமலும் நல்ல வெண்ணெயின்றியும் அவர் பற்பல சமயங்களில் தவித்த துண்டு. பணத்தைக் கொடுத்தும் வெண்ணெய் எய்தப் பெறுவதில்லை; கிடைத்த வெண்ணெய் அஞ்சு வர்ணமாகவோ ஒன்பது நிறமாகவோ இருந்தது. ஒருகால் அவருக்குத் தின்னக் கிடைத்த ரொட்டியோ ஒரு வாரத்திற்கு முன்னுற் றட்டியதொன்று. மேல், பிரயாணங்கள் தாமும் இக்காலத்துச் செய்யப்படுவனபோன்று அக்காலத்துச் செய்யப்பட்டவையல்ல. இப்பொழுது ஒரூருக்குச் செல்ல வேண்டுமானால் புகைவண்டியில் முதல் வகுப்பில் ஏறிப் படுத்தால், குறித்த விடத்திற்குக் குறித்த நேரத்திற் போய்ச் சேரலாம்; அன்றி, மோட்டார் வண்டியில் வேண்டுமானாலும் போகலாம். மன்றோ பிரயாணஞ் செய்த காலங்களிற் புகைவண்டியேது? மோட்டாரேது? நல்ல சாலைகள் தாமேது? வயல் வழியாகவும் வரப்பின்பேரிலும் கால்வாயைக் கடந்தும் குதிரை கொடுக்கும் ஆட்டத்தோடும் அன்றோ, அந்நாட்களில் பலகால் தன்னந்தனியே மன்றோ ஊர்தோறுஞ் சென்று சேர்ந்தார்! உன்னி நோக்கின் மன்றோவுக்குற்ற துயர்கள் அவர் பதவியைப் பூண்ட ஒருவருக்கு மிகுதி என்பது புலனாம்.

# பதினைந்தாம் அத்தியாயம்

## மன்றோவின் மாண்பு

மன்றோ அன்பில் தாயையொத்தவர் என்றும் குடிகளின் நண்பர் என்றும் மக்களால் இன்றும் கொண்டாடப் பட்டு வருகிறார். முக்கியமாக, சேலம் ஜில்லாவில் மக்கள் அவரைப் பற்றிப் பேசும்பொழுது மரியாதையோடும் பய பக்தியோடும் பேசுகின்றார்கள். ஒப்புவிக்கப்பட்ட ஜில்லாக்களில் மன்றோ கர்னல் துரை யென்றழைக்கப்பட்டு வந்தார். இப்பொழுதும், "கர்னல் துரை" செய்த அரசிறைவிதி யென்று ஏதைக் குறித்தாவது சொன்னால், மக்கள் கேட்டு அடங்கிவிடுகிறார்கள். அந்த ஜில்லாக்களில் அவரது பெயரை யொட்டிச் சிறுவர் பலர்க்கு மன்றலப்பன் என்ற பெயர் இடப்பட்டுவருகிறது. கடப்பை ஜில்லாவில், அவரைப் புகழ்ந்து பாக்கள் பாடிச் செல்லும் இரவலர்களை யின்றுங் காணலாம். குத்தியில் அவரை மக்கள் மன்றலரிஷியெனப் போற்றுகின்றார்கள். இங்கிலாந்து தேசத்து கவிஞர்கள் எழுதுவதிற் திறமைமிக்க டீக்வின்ஸி என்னும் புலவர் தமது "நியூகம்ஸ்" என்ற புத்தகத்தில் மன்றோவின் குணங்கள் சிலவற்றைக் கர்னல் நியூகம் என்பவர்மீதேற்றிவைத்துக் கூறி மன்றோவைப் பெருமைப்படுத்தி உள்ளார். இத்தகைய மன்றோ எத்தகைய குணங்கள் பொருந்தியவராயிருந்தார் என்பதை இனிக் காண்போம்.

மன்றோ மிகுந்த அழகு வாய்ந்தவரல்லர்; ஆனால், கம்பீரமான பார்வையுடையவர்; ஆறடிக்குமேல் வளர்ந்திருந்தவர்; கட்டமைந்த உடலம் பெற்றவர்.

இளமையிலிருந்து நூல் பயில்வதில் அவர் விருப்ப மிக்குடையவர். அவர் இந்தியா வந்து சில ஆண்டுகளானதும் சகோதரிக்கு எழுதிய கடிதமொன்றில், "நான் இந்தியா வந்து சேர்ந்ததிலிருந்து எவ்வளவு பொல்லா நாட்கள் கழித்துள்ளேன்! இவ்விருபது ஆண்டுகளில் நான் ஐந்து நாடகங்களும் ஒரு கதைப் புத்தகமுந்தான் படித்துள்ளேன். சரித்திரம் சிறிது படிப்பதிலும், பெர்சியன் மொழி பயில்வதிலும், அநேக செய்தித் தாள்கள் படிப்பதிலும் பலநாட்களைச் சிதறியடித்து விட்டேன். நான் ஊரைவிட்டு வந்த நாளாக நமது பெருங்கவி செகப்பிரியருடைய நாடகங்களில் ஒன்றையும் பார்க்காது கழித்த நாளெல்லாம் பொல்லா நாளே" என்று குறிப்பிட்டுள்ளார். கல்லா நாளைப் பொல்லா நாளாகக் கருதின் அவர் கற்றவற்றில் மறப்பெனும் கள்வனுக்கு இடந்தாராதிருந்துவந்தார். சகோதரிக் கெழுதிய கடிதமொன்றில் "படிப்பதெல்லாவற்றையும் பார்ப்பதெல்லாவற்றையும் பொதுவாக நான் நீண்டகாலம் நன்றாக நினைவில் வைத்திருப்பதுண்டு" என்று வரைந்துள்ளார்.

அவருக்குக் காலத்தை வீணாக்குவதில் எட்டுணையுமெண்ணமில்லை யென்பது பின்வரும் செய்தியாலும் விளங்கும். மன்றோ ஒப்புவிக்கப்பட்ட ஜில்லாக்களில் கலெக்டராக இருந்து வந்த பொழுது, ரெவினியூ போர்டார் அவர் எப்படிக் காலத்தைக் கழிக்கின்றாரென்பதுபற்றிக் குறிப்பெழுதியனுப்பும்படி கேட்டனர். குறிப்பெழுதுவது என்பது

எளிதன்று. அங்குப் போனேன், இங்குப் போனேன், அதைச் செய்தேன், இதைத் தீர்த்தேன் என்றபடி யெல்லாம் குறிப்பெழுதி யனுப்பிக் கொண்டிருப்பதென்றால் நேரம் பிடிக்கும். மன்றோவே இக்குறிப்பை யெழுதுவதெனின், முக்கியமான மற்ற வேலைகள் கெட்டுப்போம். தமது கீழ் உத்தியோகஸ்தர்களுக்குத் தெரிவித்து விளக்கி யெழுதச் செய்வதெனின், அவரே யெழுதும் நேரத்திற்கு மேலாகும். இவ்வாறு போர்டாருக்குத் தெரிவித்துவிட்டுச் சென்ற மூன்று ஆண்டுகளிலும் அவருக்கு ஓய்வுநாளென்பது ஒரு நாள்கூட இல்லையென் றறிவித்தார்.

1792 மார்ச்சில் திப்புவோடு பிரிட்டிஷ் அரசாங்கம் செய்துகொண்ட ஒப்பந்தம் பின்னால் தீமை விளைக்கும் என்பதை முன்னதாகத் தெரிவித்தார். திப்புவின் இராஜ்யத்தில் அரைப்பாகத்தைப் பெறுவதில் பிரிட்டிஷார் மகிழ்ச்சி கொண்டது தவறென்றும், அவ்வரைப் பாகத்தால் திப்புவின் பலம் குறைபடவில்லை யென்றும், திப்பு பின்னால் எதிர்ப்பார் என்றும் மன்றோ கூறியது பின்னர் உண்மையாயிற்று. மேலும், சேனையில் இந்தியர் நான்கு அல்லது ஐந்து பங்கிருந்தால் ஐரோப்பியர் ஒரு பங்கு இருக்கவேண்டும் என்று மன்றோ, சிப்பாய்க்கலகத்திற்கு இரண்டு வருஷங்களுக்கு முன்னிருந்தே, இராஜப்பிரதிநிதியிடம் வற்புறுத்திவந்தார். சுதேச சேனையிலிருந்து கலகம் ஒன்றும் எதிர்பார்க்கவேண்டியதில்லையானாலும், அச்சேனையிலுள்ளோரைத் தூண்டிவிடுவோர் சிலரிருப்பாராகலின், கலகம் விளையுமென்று அவர் கூறிவந்தார். அதைப் போலவே, பின் இரண்டு வருஷம் கழித்துச் சிப்பாய்க் கலகம் நடந்தது. இதனாலும், பின்னால் வரக்கடவதனை முன்னாலறியும் ஆற்றல் மன்றோவிற்கிருந்தது என்பது விளங்கும்.

மன்ரோ வீண்பெருமை காட்டிக் கொள்வது இல்லை. குடிஜனங்களோடு யாதோ ரகங்காரமின்றி அவர் வார்த்தையாடுவதுண்டு. எக்குடியிற் பிறந்தவரேயாயினும் யாவரேயாயினும் அவரோடு மன்ரோ சொல்லாடுங் காலங்களில், உரிய மரியாதை கொடுப்பதுண்டு. அவர் கன்னட ஜில்லாவிற் கலெக்டராகச் சுற்றிவரும்பொழுது, ஒரு நாள் ஓர் இடையனைக் கண்டார். அவனுடைய இன்பதுன்பங்களை விசாரிக்கத் தொடங்கி, அவன் மாடுகள் எவ்வளவு பால் கொடுத்தனவென்றும் அவனது தலைவன் எவனென்றும் கேட்டார். பிறகு, அவனது தலைவனைக் காணும்பொருட்டு, ஒரு மைல் தூரம் அவனுடன் நடந்து பேசிக்கொண்டே போனார்.

அவர் குடிமக்களோடு தாராளமாகப் பழகினதோடல்லாமற் பிறரும் அங்ஙனம் செய்யவேண்டுமென்று அடிக்கடி அவர் கூறிவந்தார். தமது சகோதரர் ஜேம்ஸ் என்பார் கிருஷ்ணகிரியி லிருந்தபொழுது அவருக்குக் கீழ் வரும் பகுதியுள்ள கடிதத்தை யெழுதியனுப்பினார்:—"மக்களைப் பார்க்காது வீட்டிற்குள் அடைத்துக்கொண்டிருப்பதை விடத் தீயதொன்றில்லை. எல்லா மனிதரோடும் நீ கலந்து கொள்ள வேண்டும். அவர்களோடு நீ விளையாடவேண்டும். ஐரோப்பாவின் அறிவாளிகளுடைய சடங்கொழுக்கங்களைப் பின்பற்றுவதவசியம் என நினைக்கலாகாது:- ஒரு சாலை அல்லது ஒருவகுப்பு மாணாக்க நண்பர்களோடு பழகுவதில் தான் மகிழ்ச்சியுண்டென நீ நினைப்பது தவறு."

மக்களோடு நன்றாகப் பழகவேண்டுமென்று இவ்வாறு பிறரை வற்புறுத்தியும், தாமே செய்கையிற் காட்டியும்வந்து

மன்றோ, அந்த மக்களிடமிருந்து ஒருதவியும் எதிர்பார்த்தாரல்லர். கன்னடத்தில் அவர் தங்கும்பொருட்டு ஒரு பெரும்பண்ணைக்காரன் போடுவித்திருந்த பந்தரில் நுழைவதற்கும், பால், கோழி இவற்றைப் பெற்றுக்கொள்வதற்கும் மன்றோ இசைந்தாரல்லரென்பது முன்னரே சொல்லப்பட்டுளது. அங்ஙனஞ் செய்த அவர் காலணா யாரிடமிருந்தும் அநியாயமாக எதிர்பார்த்தாரல்லரென்பது விளங்கும்.

இவ்வளவு நேர்மை வாய்ந்த அவரிடம் தன்னலமென்பது எங்கிருக்கும்? லார்டு ஆம்ஹர்ஸ்ட்டை வீட்டிற் கழைத்துவிட்டு அவருக்குப் பதிலாக மன்றோவை இராஜப் பிரதிநிதியாக நியமிப்பதென்று கும்பெனி நிர்வாகிகள் நினைத்ததற்கு மன்றோ இசையவில்லையென்று முன்னரே கூறப்பட்டுள்ளது. இருக்கக் கூடிய ஆண்டு இரண்டேயானாலும், மேலான அப்பதவி வலியவருவதை வேண்டாமெனச் சொல்லக் கூடாதென்பதே பலருக்குத் தோற்றியிருக்கும். ஆனால், மன்றோ அவ்வேலையைத் தமக்கு வேண்டாமென்று மறுத்தார். சுயநலமின்மையைக் காட்ட இதனினுஞ் சிறந்த காட்டொன்றும் வேண்டுமோ?

அவர் செய்ந்நன்றியறிய வல்லவர். 'உப்பிட்டவரையுள்ளவரை நினை' யெனும் பழமொழி பழமொழியாய்ப் போய் வரும் இந்நாட்டிற்கு அவர் வந்ததும் சேனையிலன்றோ இருந்தார்? அதன்பின், பாராமஹாலில் உதவிக் கலெக்டர் பதவியை அவர் பெறுவதற் குதவியா யிருந்தவர் கிப்பன் என்னும் அவர்தம் தோழர். அத்தோழர்பால் அவர் காட்டிய நன்றிக்களவில்லை. அவர் செய்த நன்றியை யடிக்கடி பாராட்டித் தமது சகோதரர் ஜேம்சு என்பாருக்குக் கடிதங்

கள் எழுதிவந்தார். தாய் தந்தைக்கு அவர் செய்த நன்றியால், பெறின் இவரைப்போலன்றோ பிள்ளையைப் பெற வேண்டும் என்று சொல்லுண்டாகச் செய்தார். பேனிய மொழியிலிருந்து மொழிபெயர்த்த ஒரு கடிதத்திற்காகக் கிடைத்த காசுதான் மன்ரோவின் முதல்வருமானம். அதை அப்படியே தாயாரிடங்கொடுத்து வாழ்த்துப் பெற்றார். இந்தியா வந்தபின் ஆண்டுதோறும் வேண்டிய பணத்தைத் தாய்தந்தையருக்கு அனுப்பிவந்தார். ஆண்டிற்கு 200 பவுன் அனுப்பிவந்தவர், 1801-இலிருந்து 400 அனுப்பத் தொடங்கினார். தந்தையார் அடகு வைத்திருந்த வீட்டை மீட்கும் பொருட்டு ஆயிரம் பவுனுக்கதிகமாக அனுப்பினார். தாயாருக்குக் கிராம வாழ்க்கையில் விருப்ப முண்டாதலாலும், அவரது உடனலம் திருந்த மடையுமாதலாலும் தாயாருக்காக ஒரு வீடு கிராமத்திற் பார்த்து ஏற்பாடு செய்யும்படி மன்ரோ தகப்பனார்க் கெழுதினார். "வீட்டின்மேல் வாங்கிய கடனைத்தவிர வேறென்னென்ன கடன்களிருக்கின்றன வென்பதைத் தயை கூர்ந்து தெரிவியுங்கள். அக்கடன்களைத் தீர்த்துவிட்டு, தாங்கள் அடைந்திருக்கக்கூடிய கவலையினின்றும் அவமானத்தினின்றும் உடனே விடுவிக்கச்சித்தமாயுள்ளேன்" என்று தகப்பனார்க்கு மன்ரோ எழுதினாரென்றால், வேறு என்ன சொல்லி அவரது நன்றியறிதலைக் காட்டக் கூடும்?

இக்குணங்களால் மேம்பட்ட மன்ரோ சாமர்த்திய முடையராகவும், கடமைகளைச் செய்வதில் ஆர்வமிக்குடையராகவும் இருந்தார் என்பது முன்னத்தியாயங்களிற் கூறிய செய்திகளால் விளங்கியிருக்கும். கீழ் அதிகாரிகளுக்கு நல்லவராக நடந்துகொள்பவர் மேலதிகாரிகளுக்கும் நல்லவராக

லரிது; மக்களாற் போற்றப் படுபவர் அரசாங்கத்தாரால் தூற்றப்படுதல் இயல்பு. ஆனால், மன்றோ கீழ் உத்தியோகஸ்தர்களுக் குகந்தவரானது போலவே மேலதிகாரிகளுக்கும் உகந்தவராயிருந்தார்; மக்களாற்போற்றப்பட்டது போலவே அரசாங்கத்தாராலும் புகழப்பட்டார். இவ்வுண்மையை வற்புறுத்த, ஒப்புவிக்கப்பட்ட ஜில்லாக்களிலும் கனடதேசத்திலும் மன்றோவின்கீழ் வேலைபார்க்க எண்மர் அவருக்கெழுதிய கடிதமொன்றைத் தருதும். அதுவருமாறு:—"ஒப்புவிக்கப்பட்ட ஜில்லாக்களில் அல்லது கனடத்தில் எங்களில் ஒவ்வொருவரும் தங்கள் கீழ் வேலைபார்க்கும் பேறு பெற்றிருந்தோம். நோய், கஷ்டங்கள், களைப்பு இவற்றினிடையே எட்டு ஆண்டுகளிலும் தாங்கள் காட்டிய பெருந்தன்மை, அன்பு, தயாளம் இவற்றைப் பாராட்டுகின்றோம். தங்கள் அதிகாரத்தின் கீழ் வைக்கப்பட்ட ஜில்லாக்களை நியாயத்தோடும் அமைதியோடும் அறிவோடும் தாங்கள் நடத்திவந்ததற்கு, பொதுமக்கள் ஊழியர் என்ற முறையில் நாங்கள் சாட்சியளிக்கக்கூடும். ஒப்புவிக்கப்பட்ட ஜில்லாக்களிலுள்ளார் தங்களைப் போற்றுகிறார்களென்றும், தங்கள் பிரிவைக் குறித்துப் பெரிதும் வருந்துகிறார்களென்றும் நாங்களறிவோம். எங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் முந்தி வந்ததெல்லாம் பெரும்பாலும் தங்களால்தான். நாங்கள் மாசிலா ஊழியர்களாக இருப்பதற்குத் தங்கள் போதனையும் நடையுமே காரணமென்று கருதுகின்றோம். எங்கள் உணர்ச்சிகளைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள வகையறியாது வருந்துகின்றோம்."

பம்பாய் கவர்னராயிருந்த எல்பின்ஸ்டன் [illegible] தம்து நாட்குறிப்பில் ஒருவரை [illegible] வரைந்திரு[illegible]

யாலும், தெரியுங் காலம் மும்மையும் உணரவல்லார் அவ் ரென்பது தெளிவாகும். சிலர் "இப்படிச் செய்தாலும் செய்யலாம், அப்படிச் செய்தாலுஞ் செய்யலாம், எப்படிச் செய்தாலுஞ் செய்யலாம்" என்று கூறுவது போலன்றி, மன்ரோ எக்காலும் தாம் நினைத்த கருத்தை ஐயப்பாடின்றி உணர்த்தி வந்துள்ளார்; இரயத்துவாரி முறையே சிறந்த தென்றும், கிராமப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தால் ஒப்புக் கொள்ளப்பட வேண்டுமென்றும் திண்ணமாக அவர் கூறினர். அதுபோன்றே இலண்டனிலுள்ள கும்பெனியின் மேலதிகாரிகளும் உறுதியாய்க் கட்டளை யிடவேண்டுமென்றும் அவர்களுக்கு எழுதினர். இங்ஙனம், அவர் ஒருமையே மொழியும் நீரராயிருந்தமையுங் கண்டாம். எனவே, தசரதனுடைய மந்திரிகளிடத்து இருந்த அரும்பெருங் குணங்களென்று கம்பரால் எடுத்தோதப்பட்ட இவை மன்ரோபாலும் அமைந்திருந்தனவென்றால், மன்ரோவின் மாண்பு என்னே! அவரது வரலாற்றைப் படிப்போரியாவரும், அவரைத் தமக்கு ஒரு வழிகாட்டியாகக் கொண்டு, சீலமல்லன செய்யாது வாழ்க்கையைச் செவ்வனே நடத்தி வருவாராயின், ஞாலத்திற் பெருஞ் சிறப்புப் பெறுவரென்பது ஒருதலையான முடிபு.

முற்றிற்று.

---

Reprinted in 1941 at the "Tamilkalai" Press, 68, Rajampet St., Conjeevaram.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 25 | 8 | யென | யென் |
| 53 | 26 | முபன்று | முயன்று |
| 54 | 22 | எப்ரல் | ஏப்ரல் |
| 112 | 16 | இவராலும் | இவறலும் |
| 137 | 10 | யுடைதமெதன்று | யுடைத்தென்று |